[illegible]

ஆண்டு 9 இதழ்கள் 9,10

April May 1986


ஐ
00211, N27 SM
N36.9.9,10.
186954

REGD NO. M. 3460

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF ... 27 OCT ... MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கூ. ‖ பலவான்குடி தாது-சித்திரை, வைகாசி ‖ திங்கள் கூ, ய.


| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 1. | திருத்தென்குடித்திட்டைத் திருவிழாச்சிறப்பு | 205, 253 |
| 2. | வேதாகம உண்மை | 209, 235 |
| 3. | திருவெம்பாவைப் பாடலின் கருத்து | 214, 228 |
| 4. | உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள் | 216 |
| 5. | மணிவாசக சங்க அறிக்கைப் பத்திரம் | 217 |
| 6. | சைவவேளாள மரபு | 224 |
| 7. | உவகைப் பத்திரம் | 225 |
| 8. | சிவபாரம்யம் | 245 |
| 9. | உண்மைத் துறவறம் | 250 |
| 10. | சிவநேசனுக்கு வாழ்த்து | 252 |
| 11. | மதிப்புரை மஞ்சரி | 254 |
| 12. | சுலோக பஞ்சக விஷயம் | (37—44) |
| 13. | திருமயிலை யமகவந்தாதி முகவுரை முதலியன | (12) |


ஆசிரியர்:— ராம. து. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:— சித்திரைமீ சிவாலயத்தில் சுடை சுவாமிகள் எழுந்தருளினர். குமார விநாயகர் திருக்கோயிலில் திருவோணநாள் நடராஜாபிடேகமும் திருவாசக பாடசாலையில் சதயநாள் திருநாவுக்கரசர் குருபூஜையும் செய்யப்பெற்றன. சிவாலயத்திலும், குமார விநாயகர் திருக்கோயிலிலும் ஆனிமீ கூ௨ உத்திரநாள் நடராஜராஜா திருமஞ்சனமும் தெரிசனமும், திருவாசக பாடசாலையில் வைகாசி உசுஉ மூலநாள் திருஞானசம்பந்தர் குருபூஜையும் ஆனி கூ௨ மகநாள் மாணிக்கவாசகர் குருபூஜையும் நடைபெறும்.

கும்பாபிஷேகங்கள்:— திருச்செங்குடித்திட்டையில் சித்திரை ஙசு சித்திவிநாயகர்கோயில் சீரணோத்தாரண கும்பாபிஷேகமும், சிவாலயத்தில் தருணாலய கும்பாபிஷேகமும், திருவுலாவும், சித்தாந்த வித்தியாலய கும்பாபிஷேகமும், திருஇராப்பட்டீச்சரத்தில் ஸ்ரீ அந்தப்புர அம்பிகை சமேத சேஷபுரீஸ்வர சுவாமி திருக்கோயில் திருப்பணி தேவகோட்டை, திருவாளர், ராம. அரு. அரு. ராம. அருணாசலச் செட்டியவர்களால் சீரணோத்தாரணஞ் செய்து அஷ்டபந்தனமகாகும்பாபிஷேகமும், திருவுலாவும், கோனுபட்டில்சித்திரைஉசுஉ கள்ளண்ணன்பிள்ளைப் பெருமாள்கோயில் கும்பாபிஷேகமும், கல்லுப்பட்டியில் வைகாசி கசுஉ சிவாலயமகாகும்பாபிஷேகமும், திருவுலாவும், திருவொற்றியூரில் திருவாளர், ஆ. ப. இராமசாமிபிள்ளையவர்கள், ஒற்றியூர்சுவாருக்குப்பொற்பணியினுஞ்சிறந்த கருங்கற்றிருப்பணியாக முற்றும் புதுக்கிய திருக்கோயிலிலும், திரிபுரசுந்தரி சமேத ஆதிபுரீசுவரர் திருக்கோயிலிலும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும், ஐம்பெருங் கடவுளர் திருவுலாவும், பிரசங்கங்களும் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

முருகாயி அம்மாள் குருபூஜை:— திருமதி, முருகாயி அம்மையார், திரு, து. அப்பாத்துரை செட்டியாரின் இல்லக்கிழத்தி. இந்தியாவிலிருந்து தென் ஆப்பிரிக்கா டிரான்ஸ்வால் போட்ஸ் பர்க் என்னும் ஊரிற் குடியேறினவர்கள். கணவருடைய பணிவிடையிற் சிறந்த கற்பரசி. மக்கள், பேரன்மார்களுமுடையவர். அங்கு குடியேறியிருக்க இந்து தேசப் பெண்மக்களின் முன்னேற்றத்திற்ாக மிகவும் பாடு பட்டவர். இவ்வம்மையார் சிவகதியடைந்து ஓராண்டாயிற்று. இவர் த முதற்றிதியைக் குறித்து இவ்வம்மையின் கணவரால் அவர்கள் குடியேறிய நாட்டில் அன்னதானம் முதலியன நடாத்தியதோடு 7—5—1936ல் ஞ்சை மாயாண்டி சுவாமிகள் மடாலயத்திலும் குருபூசை விழாக்கொண்டாடப்பெற்றது. அன்று, கணேசர், சுப்பிரமணியர், சிவலிங்கம், அம்பாள் முதலிய ர்த்திகளுக்குப் பூசையும், மேள வாத்தியத் துடன் திருவாராதனைகளும், அன்னானமும், ஆடைதானமும், "சைவம் நாட்டியதமிழ் மாது" என்பது பொருாக, தமிழ்ப்பண்டிதர், திரு, பா. சிவகுருநாதபிள்ளையவர்களால் அவ்வம்மையின் ரித விரிவுரையும் நடைபெற்றது. முன்னூறுபேர் குழுமி மிக மகிழ்ச்சிற்றனர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

குருபூஜைகள்:—கும்பகோணம் ஸ்ரீ மௌனானந்தகுருசுவாமிகளின் நவதி ருபூஜை ஷை சுவாமிகள் மடத்தின் தர்மபரிபாலனம்புரியும், திரு, வெ. மீனாக்ஷிம்மாள் அவர்களால் சித்திரை உ௱ உத்திரநாள் தொடங்கி ஆராதனைகளும் மிழ்மறை பாராயணங்களும், திருவுருவத்திருவுலாவும், சங்கீத கதா பிரசங்கங்ளும், மூன்று நாள்வரை மகேஸ்வரபூஜையும் செய்யப்பெற்றுச் சிறப்பாக நிறைவேறியது.

பட்டுக்கோட்டையில் ஸ்ரீமுத்திராமலிங்க சுவாமிகளின்குருபூஜை ஸ்ரீ சவாமிகளால் யுவ பங்குனி ௨ உ நடைபெற்றது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.



| | | |
|---|---|---|
| ஆண்டு ௯ | தாது-சித்திரை, வைகாசி<br>1936 ஏப்ரல், மே. | திங்கள் ௯, ௰ |



உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

### திருத்தென்குடித் திட்டைத்

## திருவிழாச் சிறப்பு.

திருஞானசம்பந்தப் பெருமானருளிய தேவாரத் திருப்பதிகம் பெற்றுச் சிறப்புற்றுத் திகழ்கின்ற இத்திருத் தலத்தில் திருவருளால், சிவாலயத்திருப்பணியைப் புதுக்கிச்செய்யவேண்டிய தன் நிமித்தம் தருணாலயம் சமைத்து மூர்த்தங்களை அதிற்றாபித்து திரிபந்தன கும்பாபிடேகமும், சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்கச் செய்வான் தொடங்கிய சித்தாந்த வித்தியாலயத் தாபனமும், தாது சித்திரை ௧௪-உ ஆதிவாரம் திருவாதிரைநாள் உதயாதி ௧௦ நாழிகை யளவில் மிதுனலக்ன நன்முகூர்த்தத்திலும் பலவான்குடியினில் வளர்ந்த மணிவாசக சங்கத்தின் இருபத்தாறுவதாண்டுத் திருவிழாத் தொடக்கம் அதே நன்னாள் உதயாதி ௨௦ நாழிகையளவில் சிம்மலக்ன நன்முகூர்த்தத்திலும் சிறப்புறச் செய்யப்பெற்றன.

தருணாலய கும்பாபிடேகம்:— சித்திரை ௭-உ தனபூசை; அனுக்ஞை; விக்நேசுவர பூஜைகளும், ௧௦-உ வாஸ்து சாந்தி முத

லியனவும், ௧௧௳ மிருத் ஸங்கிரகணமும், ௧௨௳ அங்குரார்ப்பணம்; ரக்ஷாபந்தனம்; அஷ்டா தசகிரியை; கோவாசம் கோபூஜை; பிரஸந்நாபிஷேகம்; கலாகர்ஷணம்; ஆதியனவும் செய்து சிவமகாயாகத்தைச் சீர்பெற நடாத்தி ௧௪௳ குறிப்பிட்ட நன்முகூர்த்தத்தில் ஸ்ரீ உலகநாயகி சமேத பசுபதிநாதருக்கும், குஞ்சரமுகன், குமரவேள், சண்டேசராதிய மூர்த்திகளுக்கும், பரிவாரதெய்வங்களுக்கும் சிவாகம பண்டிதர்களாகிய ஆதிசைவ சிவாசாரியர்களைக்கொண்டு சிவாகம விதிப்படி கும்பாபிஷேகம் செவ்விதிற் செய்யப்பெற்றது.

இவ்வுயரிய சிவகைங்கர்யத்திற் சேர்ந்து சிறப்புறச் செய்த சிவஸ்ரீ சிவாசாரியர்களாவார்:—

(௧) திருத்தென்குடித் திட்டை, துரை. சோமசுந்தரக் குருக்கள்.
(௨) நடுக்காவேரி, துரை. சுப்பிரமணியக் குருக்கள்.
(௩) தென்பரம்பைக்குடி, சிவ. சுவாமிநாதக் குருக்கள்.
(௪) ,, சுவாமி. முத்துச்சுப்பிரமணியக் குருக்கள்.
(௫) பெரம்பூர், ஞானசிவசிவாசாரியார்.
(௬) மாதர்வேளூர், ராமா. சுந்தரேசக் குருக்கள்.
(௭) கீழ்வேளூர், சுவாமி. சுப்பிரமணியக் குருக்கள்.
(௮) ,, ,, சந்திரசேகரக் குருக்கள்.
(௯) ,, கு. கணபதிக் குருக்கள்.
(௧0) ,, அ. சபாபதிசிவாசாரியார்.
(௧௧) ,, க. அக்ஷயலிங்கக் குருக்கள்.
(௧௨) சோழசேரி, தியாகராஜக் குருக்கள்.
(௧௩) திருச்சிக்கல், மு. பாலசுப்பிரமணியக் குருக்கள்.
(௧௪) திருமருகல், பெரியசாமிக் குருக்கள்.
(௧௫) திருப்பந்தணைநல்லூர், நடேசக் குருக்கள்.
(௧௬) கண்டனூர், ஆரு. இராமநாத சிவாசாரியர்.
(௧௭) திருப்புனவாயில், மீனாக்ஷிசுந்தரக் குருக்கள்.
(௧௮) புதுக்குடி, வைத்தியநாதக் குருக்கள்.
(௧௯) தேவூர், தியாகராஜக் குருக்கள்.
(௨0) திருப்பழனம், பஞ்சாபிகேசக் குருக்கள்.
(௨௧) திருப்புன்கூர், ஏகாம்பரக் குருக்கள்.
(௨௨) திருவாரூர், சுந்தரேசக் குருக்கள்.

ஆரியம் தமிழ் எனும் இருபெருமறைகளும் முழங்கின.

மாண்புடன் வந்து மறையொலித்த மாமறைவாணர்களாவார்:-

இருக்வேதிகள், கும்பகோணம் சுவாமி. கல்யாணசுந்தர கனபாடிகளாதிய மூவர். யசுர்வேதிகள், செல்விச்சேரி, இராமநாத தீக்ஷிதராதிய பதினொருவர். சாமவேதிகள், திருவிடைமருதூர் வைத்தியநாத சிரௌதிகளும், கோ[illegible] கிருஷ்ண சிரௌதிகளும்.



தமிழ்மறைவாணர்கள், காரைக்குடி அ. நடேச தேசிகர்; கோட்டையூர், தி. சிவலோகநாத தேசிகர்; திருமூலட்டானம், சந்திரசேகர ஓதுவார்; திருப்புள்ளிருக்குவேளூர், வேலாயுத ஓதுவார். திருவருட்பாக் கூட்டத்தினர், சுவாமிமலை, கணபதி உபாத்தியாயர் முதலானோர்.

வடக்குரத வீதியைத் திருச்சந்நிதியாகக் கொண்டு வடமேற்கில் விளங்கும் சித்திவிநாயகர் திருக்கோயில் சீரணோத்தாரண கும்பாபிஷேகமும், மகாசாத்தாவுக்கும், ஆனையாத்காளென்னும் துர்க்காதேவிக்கும், நவநீதகிருஷ்ணப் பெருமாளுக்கும் அபிடேகாராதனங்களும் செய்யப்பெற்றன.

சித்தாந்த வித்தியாலயம்:— இவ்வித்தியாலயத்திற்குக் குருநாதராக, உயர்திரு, சச்சிதானந்த சற்குரு சுவாமிகள் கொரடாச்சேரியிலிருந்து சித்திரை ௪௳ அழைத்துவரப் பெற்றார்கள். அவர்களால் பூஜிக்கப்பெறும் சிவமூர்த்தங்களை வித்தியாலயத்தில் பிரதிட்டை செய்யப்பெற்றன. ஸ்னபன கலசங்கள் வைத்து திரு அரசைப் பெரும்பாழி, சைவத்திருவாளர், சுப்பிரமணிய தேசிகரவர்களால் ஜெபங்கள் பூஜைகள் செய்து சித்திரை ௧௪௳ உதயாதி ௧0 நாழிகையளவில் மகாகும்பாபிடேகம் செய்யப்பெற்றது. சுவாமிகள் சித்தாந்த சாத்திரஞான போதகராக வீற்றிருந்தருள்கின்றனர்.

மணிவாசக சங்கம்:—இதன் இருபத்தாறுவது ஆண்டுத் திருவிழா, சித்தாந்த வித்தியாலயத்தில் சித்திரை ௧௪௳ உதயாதி ௨0 நாழிகையளவில் கூடியது. மங்கலவாத்தியங்கள் முழங்கின. தேவார திருவாசகாதி திருப்பாசுரங்களை இன்னிசையுடன் தமிழ்மறைவாணர்கள் ஓதினர். உயர்திரு, சச்சிதானந்த சற்குரு சுவாமி அவர்களைத் தலைமை வகித்தருளும்படி 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் வேண்டிக்கொண்டனர். சுவாமிகள் தலைமைவகித்தருளினர். சுவாமிகளுக்கு மலர்மாலையணிவித்து, தேவகோட்டை, பாலகவி திருவாளர், வயி. நாக. ராம. வே. இராமநாதச் செட்டியாரால் உவகைப் பத்திரம் வாசித்து வழங்கப்பெற்றது. திருவளர்செல்வன், ராம. குமரப்பனால் ௨௬-வது ஆண்டு அறிக்கை படிக்கப்பெற்றது. தலைவரவர்கள் நன்னயமாக முன்னுரை கூறினர். கிராமத்தார்களின் சார்பாக கிராம கர்ணம் பிரமஸ்ரீ மு பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் நல்வரவு கூறினர். திருவாளர்களான:— செங்கரையூர், தமிழ்ப்பண்டிதர், அ. பொன்னண்ணைகளத்தில்வென்றார், தேவகோட்டை, பாலகவி, வயி. நாக. ராம. வே. இராமநாதச் செட்டியார், கும்ப

கோணம் S. S. சாரங்கபாணிப் பத்தர், ஆளுடையார்கோயில் தல புராணிகர் சுந்தரசாஸ்திரியார், அமராவதிபுதூர், வயி. நாக. ராம. அ. வேங்கடாசலச் செட்டியார் ஆகிய ஐவரும் முறையே, கல்வி, வேண்டுவ தொன்று, ஞானசம்பந்தம், மாணிக்கவாசக சுவாமிகளின் திவ்ய சரித்திரம், செயற்பாலதோரும் அறனே என்னும் ஐம்பெரும் பொருள்களை முதலாகக்கொண்டு அரிய பெரிய விரிவுரைகளையாற்றி இன்பூட்டினர். தலைவரவர்கள் தகுந்த அபிப்பிராயங் கூறினர்.

சென்னை மாகாணத்திலிருந்தும், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலான ஜில்லாக்களிலிருந்தும் உள்ளூர் வெளியூர்களிலிருந்தும் ஆளுடையார்கோயில்முதலான திருத்தலங்களிலிருந்தும் செட்டியார்நாட்டில் அமராவதிபுதூர், ஆத்தன்குடி, கடியாப்பட்டி, கண்டனூர், காரைக்குடி, கோட்டையூர், கோனபட்டு, தேவகோட்டை, நேமத்தான்பட்டி, பலவான்குடி, பள்ளத்தூர், புதுவயல், இராயவரம் முதலான ஊர்களிலிருந்தும், காரைக்கால் முதலான இடங்களிலிருந்தும் சிவநேசப்பெருஞ்செல்வர், பலர் பேரன்புடன் வந்துகுழுமியிருந்தனர்.

திருவாவடுதுறை யாதீனத்து மகாசந்நிதானத்தின் அனுக்கிரகம் பெறலாயிற்று. உயர்திரு, நமச்சிவாய தேசிகரவர்கள் திருநீறு சாத்தி நல்லுரை கூறியருளினர்.

தருமையாதீனத்திற்குள்ளான திருப்புள்ளிருக்குவேளூர்க் கட்டளை உயர்திரு, சோமசுந்தரத்தம்பிரான் சுவாமியவர்கள், திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர், உயர்திரு, சிவசண்முக மெய்ஞ்ஞானசிவாசாரியசுவாமியவர்கள், சென்னைமகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்தியகலாநிதிடாக்டர்பிரமஸ்ரீ உ. வே சாமிநாதையரவர்கள், திருவாளர்களான:— (திருவண்ணாமலையிலிருந்து) புரிசை, பெருஞ்சொற்கொண்டல் சு. முருகேச முதலியார், தருமையாதீன மகாவித்வசிரோமணி, அமராவதிபுதூர், வயி. நாக. ராம. அ. இராமநாதச்செட்டியார், (சிதம்பரத்திலிருந்து) மகிபாலப்பதிபண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார், கானாடுகாத்தான் சா. ராம. சித. செ. ஜம்புலிங்கம்செட்டியார், காரைக்குடி, சேவு. மெ. மெய்யப்பசெட்டியார், கொத்தமங்கலம், தெ. பழ சித. சதாசிவச் செட்டியார், இலந்தமிபுரம், ந சொ. அரு அருணாசலச்செட்டியார் ஆகியவர்கள்.

இறைவன் திருவருள் எண்ணரும் நலங்களை எய்துவிக்க; திருநீறுபூசிச் சிறப்பீர்கள்; நடராஜ கிருபை மேன்மேலும் பெருக உண்டாகுக; தருமாலய கும்பாபிஷேக முதலிய வைபவங்கள்

(இதன் தொடர்பு 253-ம் பக்கம் பார்க்க.)

# வேதாகம உண்மை.

(கோவிற்பட்டி, தமிழ்ப்பிரமசூத்திராசிரியராகிய, உயர்திரு, சுவாமி, விருதை, சிவஞானயோகிகள்)

(கூ-ம் ஆண்டு உ00-ம் பக்கத்தொடர்ச்சி.)

முண்டகோப நிடதம்

"அபிவாயஸ் ஸண்டாள ஸிவ இதிவாசம் வதேது, தேநஸஹ ஸரவதேது, தேநஸஹஸம் வசேது தேநஸஹபும் ஜீத"

[இ - ள்.] சண்டாளனாயினும் சிவனென்ற சொல்லைச் சொல்வானாயின் அவனோடு பேசுக. அவனோடு இருப்பாயாக, அவனோடு உண்பாயாக,

என்று ஐந்தெழுத்தின் பெருமை இத்தகையதென்றும், இவை முதலிய ஆயிரக்கணக்கான உபநிட சுருதிகள் சிவ பரத்வத்தை வற்புறுத்திக் கூறுகின்றன.

இனிச் சிவாகமங்கள் சிவபிரானையே பரம்பொருளாய்க் கொண்டன. அவ்வாகமங்கள் அவன் அங்கம் பிரத்தியங்க வடிவங்களாய்க் கூறப்படுகின்றன.

நாரதபரிவிராஜகோபநிஷத்தும் உபதேசம் 8.

"ஸர்வாகம மயஸ்ஸிவக".

[இ - ள்.] எல்லா ஆகம வடிவன் சிவன் என்று அதை வற்புறுத்துகின்றது.

திருவாசகம் "ஆகமமாகி நின்றண்ணிப்பான்றாள் வாழ்க" இங்ஙனம் வேதத்தின் கன்ம காண்டமும் ஞானகாண்டமுமாகிய உபநிடதங்களும் சிவாகமங்களும் சிவபிரான் ஒருவனையே பரம் பொருளாய்க் கூறி அவனை வழிபடும் நெறிகளைக் கூறுவதால் சுத்தாத்வைத சித்தாந்த சைவ பாடியகாரராகிய ஸ்ரீகண்டாசாரியர் தமது பாஷ்யத்தில்,

"வயந்து வேத சிவாகம யோர்பேதம் நபஸ்யாமக"

"நாம் வேத சிவாகமங்களுக்கு வேற்றுமை காண்கிலம்"

என்றும் மநுஸ்மிருதி 2. 1-க்கு குல்லூகபட்டர் எழுதிய முக்தாவளி என்னும் உரையில்,

"ஸ்ருதிப்ரமாணகோ தர்மஶ்ருதிஸ்சத்விதாவைதிகீ தாந்த்ரிகீச"

[இ - ள்.] சுருதியைப் பிரமாணமாயுடையது தருமம். சுருதியோ வைதிகம் என்றும் தாந்திரிகம் (ஆகமம்) என்றும் இருவகைப்படும் என்றும், வேதாகமங்களுக்கு வேற்றுமையின்மை கூறினர்.

மகுடாகமம்.

"வேதாந்தார்த்திதம் ஞாநம் சித்தாந்தம் பரமம் சுபம்"

"உபநிடதங்க ளென்னும் வேதாந்தத்தின் பொருளாகிய இந்த ஞானம் மேலானதும் மங்களகரமானதுமாகிய சித்தாந்தம்", என்று உபநிடதங்களாற் பெறும் ஞானமும் சிவபிரானைப் பற்றியனவே யாதலால் வேற்றுமையின்றென்று விளக்குகின்றது. தமிழ் மறையும்,

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

"வேத நான்கினு மெய்ப் பொருளாவது
நாதனாம நமச் சிவாயவே"

என்று நான்கு வேதங்களானும் பெறப்படும் உண்மைப் பொருள் சிவபஞ்சாக்கரமே என்று விளக்குகின்றது.

இவ்வாறு வேதம் உபநிடதம் சிவாகமங்கள் பதிப் பொருள் கோடலிலொற்றுமையுடையனவாயினும் வேதம் துறக்க முதலிய போக லோகங்களைத் தரும் வேள்விக் கருமங்களையே மிகுத்துக் கூறலானும் உபநிடதங்கள் ஞானோபாசனைகளையும் பசு பதி பாச இலக்கணங்களையும் ஒழுங்குபட விளங்கக் கூறாது ஆங்காங்குத் தேடி வருந்தித் தெரியப்பாலனவாயும் பல்வேறு பொருள் கொள்ளத்தக்கனவாயும் கூறுதலானும், சிவாகமங்கள் பசு பதி பாச இலக்கணங்களையும் ஞானோபாசனாவழிகளையும் ஒழுங்குபெறத் தெளிவாய்க் கூறுதலானும் மிக வேற்றுமையுடையனவாம். இக்காரணங்களால் உபநிடதம் சிவாகமங்களிரண்டும் பரவித்தை யென்னப்படினும் சிவாகமங்கள் பரவித்தையுட் சிறந்தனவாம்.

இக் கருத்தைச் சிவஞானசித்தியார் சூத் 8-2-1. "வேத சிரப் பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத் திறத்தடைவர்" என்று கூறினமை காண்க.

ஆகமம் வேதசார மென்று பல வாக்கியங்கள் கூறலால் சிலர் எண்ணுகின்றபடி வேதம் முதனூலும் ஆகமம் சார்புநூலுமாமாலே வெனில் ஆகாது. வேதம் பல புத்தேள்களையும் கருமங்களையும்கூறினும் அது துணி



பொருளாய்க்கொண்ட சிவபிரானை ஆகமமும் கூறும்பொருளொற்றுமை பற்றி "சித்தாந்தம் வேத சாரவாது" சித்தாந்தம் வேதசாரமாயிருப்பதால் "சுருதி சாரமயக" சுருதிசாரவடிவம் என்று கூறுவதே யன்றி வேதத்துக்குச் சார்புநூல் என்ற கருத்தாலன்று. வேதம் சிவபிரானைப் பரம்பொருளாய்க் கூறினும் காமிய கருமங்களை வேண்டி இந்திரன் அக்கினி முதலியரின் உபாசனைகளாகிய பூர்வ பக்கமும் மிகுத்துக் கூறுகின்றது. ஆகமம் பூர்வபக்கத்தைநீக்கி வேதசாரமாகிய சித்தாந்தத்தையே விளக்கிக்கூறுகின்றது. ஆதலால் சித்தாந்த மென்னப்பட்டது என்று கூறுவாருமுளர். உண்மையில் ஆகமங்கள் தாமே முதனூல்கள்.

ஆகமங்கள் சுதந்திரங்கள் என்பது சிவபிரான் சிவபேத வடிவங்களாயும் உருத்திரர் வடிவங்களாயுமிருந்து தானே கூறினமையானும், முற்றறிவுடைய பரசிவத்துக்கு மேற்கோளா யொருமுதனூல் வேண்டற்பாலதன்றாதலானும், அடிமைகளாகிய இருடிகளின் வாக்கியங்களை ஆண்டான்பின் பற்றி நூல்செய்தானென்னல் வழக்கன்மையானும் சிவாகமங்களிற் கன்மயாகங்கள் கூறப்படாமையானும் சிவாகமங்களில் வேதத்திற் கூறப்படாத இலிங்கம் ஆலயம் பிரதிட்டை பூஜை முதலியவற்றின் இலக்கணங்கள் முறைபடக் கூறப்படலானும் வேதம் அபரவித்தை ஆகமம் பரவித்தை யென்று உபநிடதமும்புராணங்களும் ஆகமமும்கூறுதலானும், பரவித்தை அபரவித்தைக்குச் சார்பு நூலாதல் செல்லாதாதலாலும் துணியப்படும்.

இக்கருத்தைச் சிவபுராணம் வாயுசங்கிதை.

"சைவாகமோஅபி த்விதஸ் ஸ்ரௌதோ ஸ்ரௌதஸ்ச ஸஸ்மிருதக சுருதி சாரமயஸ்ரௌதக ஸ்வதந்த்ர இதரோமதக. ஸ்வதந்த்ரோதஸதா பூர்வந்ததாஷ்டாதச தாபுநக காமிகாதிஸ மாக்யா பிஸ்ஸித்தஸ் ஸிந்தாந்த ஸம்க்ஞிதக.

[இ - ள்.] சிவாகமம் சிரௌதம் அசிரௌதம் என்றிருவகைப்படும். (அவை) சுருதிசாரமான சிரௌத மெனப்படும் சுதந்திராகமம், இதராகமம் என்று கொள்ளப்படும் சுதந்திராகமம் முன்னர்ப் பத்தும் பின்னர் பதினெட்டும் ஆகிய சித்தாந்தம் என்று கூறப்படும் காமிக முதலிய ஆகமங்கள் என்று,

சுருதி சாரமாயுள்ள சிவனைப் பரம்பொருளாய்க் கொண்டதாதலால் சிவாகமம் சிரௌதம் எனப்படுகின்றது. சிரௌதமெனப் படலால் வேதத்தினின்று தோன்றிய சார்பு நூலோவெனில் அற்றன்று; அவைபரமேசுரனாற் கூறப்பட்டனவாதலால் சுதந்திரங்கள் (தற்கிழமையுடையன) (வேதங்கள் போகலோகந்தரும் கன்மாதிகளைக் கூறுதலால் அபரவித்தையென்னப்

படும்பூர்வபக்கம்) காமிகாதிசிவாகமங்கள் (பிரமோபாசனைகளையேகூறுவதால் பரவித்தை என்னப்படும்) சித்தாந்தம் என்று வியாசபகவான் உண்மையை விளக்கினமை காண்க. இக்கருத்தை வியாச பகவான் சனற்குமார சங்கிதையிலும் இன்னும் பல விடங்களிலும் விளக்கியுள்ளார்.

இனி வேதம் உபநிடதம் புராணம் ஸ்மிருதி முதலியவற்றையோதி அவ்வழிகளில் பல கன்மங்களும் தவங்களும் புரிந்து புண்ணிய மேலிட்டுப் பிறவிகளில் அறிவு வளர்ந்து பரிபாக முதிர்ந்த ஆன்மாக்களன்றிக் கீழ்ப்பட்ட பக்குவிகளுக்குச் சிவாகமநெறி பெறற்பாலதன்று. இவ்வுண்மையைக் கொற்றவன்குடி உமாபதிதேவநாயனார் ஆசிரியருக்காசிரியராகிய அருணந்தி தேவநாயனார் கி. பி. 1153ல் இயற்றியருளிய சிவஞான சித்தியார் 8. 2. 1.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன் மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

சூத் 8. 2. 25.

தானமி யாகந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
சாந்திவிரதங் கன் மாயோகங்கள் சரித்தோ
ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
ரீசனி யோகக் கிரியாசரியையினி னின்றோ
ரூனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லாம்
ஒடுங்கும் போதரன் முனிலாதொழியினுற் பவித்து
ஞானநெறி படைந்தடைவர் சிவனையங்கு
நாதனே முன்னிற்கி னணுகுவர் நற்றாளே.

முத்திபதம்—பதமுத்தி.

என்று வெளிப்படுத்தினமை காண்க.

## தமிழ் வேதாகமங்கள்.

இத்தகைப் பெருமை வாய்ந்த பரவித்தையாகிய சிவாகமங்களின் பொருளையும் வேதோபநிடதங்களின் பொருள்களையும் தமிழிலுணர்த்தச்



சிவனருளால் சுத்தாத்வைத சித்தாந்த சைவாசிரியர்களால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட தமிழ் மறைகள் தேவாரம் திருவாசகம் என்பன. அக்குரவருள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சிவகணநாதரும் வேதம் உபநிடதம் புராணங்களாற் புகழப்பட்ட சிவமூர்த்தங்களிலொருவருமாகிய முருகக்கடவுள் அம்சாவதாரம், அப்பர் சுவாமிகள் கைலாசத்திருந்த வாகீச முனிவர் அவதாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரமேசுரன் பிரதிபிம்ப வடிவாகிய ஆலால சுந்தரர் அவதாரம், மாணிக்கவாசகசுவாமிகள் சிவகணத்தலைவராகிய நந்திகேசுரர் அவதாரம் ஆம்.

இத்தமிழ்மறை உலகர்க்கும் சத்திநிபாதத் துத்தமர்க்கும்பயன்படும்படி வேதம் ஆகமம் என்ற இரு மறைகளின் பொருளையு முள்ளடக்கிக்கொண்டிருப்பதால் இருதிறத்தாரும் ஓதியுய்யத்தக்க சிறந்த மறையாம்.

சங்கராச்சாரியசுவாமிகளின்காலம் கி. பி. 805 (சகாப்தம் 728) என்று தீர்மானிக்கப்படுகிறது. அச்சங்கராசாரிய சுவாமிகளே சம்பந்தமூர்த்தி சுவாமிகளை சௌந்தரியலகிரியிற் புகழ்ந்து கூறுவதால் தமிழ்மறை தோன்றிய காலம் அவ்வாசாரியருக்கு நெடுநாள் முந்தியதென்று கருதத்தக்கது.

சமயகுரவர் நால்வரில்

1. மாணிக்கவாசக சுவாமிகள் அரிமர்த்தன பாண்டியன் காலத்தவர் அது கி. பி. 200 முதல் 300க்குள்ளும்,

2. சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் மதுரையில் நின்ற சீர்நெடுமாற னென்ற கூன்பாண்டியனும்,

3. பாடலிபுரத்தில் பல்லவராஜனும் ஆண்டுகொண்டிருந்த காலம் அது கி. பி. 400 முதல் 500க்குள்ளும்,

4. சுந்தரமூர்த்திசுவாமிகள்காலம் கி. பி. 600முதல் 700க்குள்ளும்,

இருக்கலாமென்று தற்காலக் கல்வெட்டாராய்ச்சியர் சரித்திராசிரியர்களின் கூற்றுகளால் கருதத்தக்கதாகின்றது. இன்னும் தீர்மானமான முடிவு பெறாவிடினும் இப்போது பலர் இவ்வாராய்ச்சியிற் கருத்து வைத்துழைத்தலால் விரைவில் உறுதியடையு மென்றெண்ணுகின்றனன்.

இனி, இருக்கு முதலிய வேதங்கள் சுயம்பு அநாதியென்று கூறப்பட்டிருக்க அவை பலகாலத்துப் பலராலெழுதப்பட்டதென்று ஒருகாலம் வரையறுத்துக் கூறுதல் செல்லாதெனில் அற்றன்று அங்ஙனம் சுயம்பு அநாதி யென்று கூறல் அர்த்த வாதங்களின் புகழ்மொழியே யன்றி உண்மையன்று. (வரும்)

உ

# திருவெம்பாவைப் பாடலின் கருத்து.

(குற்றாலம் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், திருவாளர்,
ப. சிங்காரவேல் பிள்ளையவர்கள்.)

(கூ-வது ஆண்டு கஅச-ம் பக்கத்தொடர்ச்சி.)

மானே. சு.

அவ்வைவரையும் அழைத்துக் கொண்டு மற்றொரு மனையகத்துச் சென்று ஆங்குத் துயிலும் தன் மற்றொரு தோழியைத் துயிலெழுப்புவளானாள். மான்போன்ற நோக்கமுடைய பெண்ணே! நேற்றிரவே நானே நாளை வந்து உங்களை எழுப்புவன். என்று சொன்னபோது நீ அதற்குச் சிறிதும் நாணமல் போன திக்கை (விபரத்தை) இப்போது சொல்ல மாட்டாய். உனக்கு அதில் ஏதேனும் வேறுபாடு இருந்திருக்குமாயானல் சொல்லி யிருக்கலாம். ஆனல் இன்னும் உனக்கு விடிந்திலது போலும். எம்பெருமானே விண்ணுலகமும் மண்ணுலகமும் பிறவுமாகிய எல்லாவற்றாலும் அறிய முடியாதவன். அப்பெருமான் கருணையால் தானகவே வலிய வந்து எங்கள் பால் தலையளி செய்து எங்களை அடிமை கொண்டருளும் சிறந்த நேர்மையான கழலை யணிந்த திருவடியைப் பாடிக்கொண்டு இவ் வாசலில் வந்து நிற்கின்ற எங்களுக்கும் வாய் திறந்திலாய்! அப்பாட்டைக் கேட்டு உடலும் உருகுகின்றாய் இல்லை. உனக்கு இது உற்றதாம். எங்களுக்குத் தகாது போலும். ஆயினும் எங்களுக்கும் எங்களல்லாத ஏனையோர்களுக்கும் தலைவனை நீயே பாடுக. என்றனள். இது கேட்ட அம் மாது துயிலெழுந்து வந்தனள்.

அன்னே எ.

அவ்வாறுவரையும் அழைத்துக்கொண்டு வந்த பெண்ணரசி மற்றொரு இல்லகஞ் சென்று ஆங்குத் துயிலும் தன் தோழியையும் அழைப்பாளாய் என் தாயே! இவ்வாறு பொழுது கழிவனவும் சில வாமோ? அளவில்லாத அமரர்களாலே நினைக்கவும் முடியாதவனாகிய ஒருவன். அவனே பெரும் புகழ் உடையவன். அப்பெருமானுடைய அடியார் தரித்த சின்னங்களைக் கேட்ட மாத்திரத்திலேயே சிவனென்றே வாய்திறந்து பாடுவாய். தென்ன என்று பிறர் சொல்லுமுன்னரே தீயை அடுத்த மெழுகைப் போல உருகி விடுவாய். என்னுடைய பெருமானை என்னுடைய அரசன், எனக்கு இனிய அமுது போல்பவன் என்று இவ்வைகறைப்போது எல்லோருமே சொன்



னோமே; அதை நின்செவியால்கேள். கேட்டாலுந் துயிலொழிந்துபோமே; அங்ஙனமில்லாமல், இன்னும் தனித் தனியே துயிலுகின்றாயோ? வலிய நெஞ்சுடைய அறிவிலார் போல வீணே கிடக்கின்றாய். தூக்கத்தின் தன்மைதான் என்னே! வியப்பாம்!! என்று வருந்தினள். அவ்வளவே அம் மாதும் துயிலொழிந்து வந்தனள்.

கோழி. அ.

அவ்வெழுவரையும் அழைத்துச் கொண்ட மாதரசி, மற்றொரு மனையகஞ் சென்று ஆங்குத் துயிலும் தன்தோழி மங்கையையும் அழைப்பான் தொடங்கினாள். பெண்ணே! கோழிகள் கூவக் காகம் முதலிய பறவைகள் எங்கும் ஒலிக்கின்றன. ஏழிசையும் இயம்பப் பெறவே வெண் சங்கங்கள் எங்கும் ஒலிக்கப் பெறுகின்றன. எம்பெருமான் தனக்கு ஒப்பிலாதமேலான ஒளிவடிவானவன். அவனே ஒப்பில்லாத அருள் வடிவானவனும், அவனே ஒப்பில்லாத சிறந்த பொருளாவானும் ஆம். அப்பெருமான் புகழை இவ் வைகறைப் போதில் யாங்கள் எல்லோரும் பாடினோம். இது நின்காதால் கேட்டிலையோ? இது என்ன தூக்கம்? இதனை யாம் அறியோம். நின் வாயும் திறந்திலாயே? கடல் போன்ற கருணையாளனிடம் அன்புடைமை ஆகும் விதம் இப்படியோ? இனியாவது பெண்ணே! இவ்வைகறைப் போதில் ஊழிக் காலத்திற்குத் தலைவனாய் நின்ற ஒருவனும் உமையை ஒரு பாகத்தில் கொண்டவனுமாகிய கடவுளையே பாடுக; நீ வாழ்க; என்றனள். அதுகேட்ட அம்மாதும் துயிலொழிந்து வந்தனள்.

முன்னை. கூ.

இதுகாறும் அழைத்து வந்த மங்கையர்க்கரசியும், தன்னாலழைக்கப் பட்ட பாவைநோன்பாளர் எண்மரும் ஆக ஒன்பதின்மராய்க் கூடினர். அவர்கள் எம்பெருமானை முன்னிலைப் படுத்தி "ஆதிமாண்பும், ஆட்பாலவருக்கருளும் வண்ணமும்", அதற்காகச் செய்யுந்தங்கள் வழிபாடும் கலந்து பாடத் தொடங்கினர். அவ்வாறு பாடும்போது அம்மாதர் பெருங் கூட்டத்தார் பொதுவாகப் பாடினரென்றே கொள்ளக்கிடக்கின்றது. ஆயினும் அவர்கள் முதலில் "எம்பெருமான்வேண்டுவார் வேண்டியதேயீவனாதலின்" தங்கருத்தை வேண்டுவாராயினர். எல்லோர்க்கும் முன்னான பழமையான பொருளுக்கும் முன்னாகிப் பழமையான பொருளாய் உள்ளவனே! அது போலப் பின்னாக நின்ற புதுமையான பொருள்கட்கெல்லாம் பின்னாக நின்று புதுமையான பொருளாய் உள்ளவனே! அவ்வாறு கால முற்றுங் கடந்த உன்னைத் தலைவனாகப்பெற்ற உன்னுடைய சிறந்த அடியார்களாகிய யாங்கள் உனக்கும் உன் அடியவர்களுக்கும் வேற்றுமை யின்மையால் உன்னடியார்கள் யாவராயினும் அவர்கள் திருவடியை வணங்குவோம். அவர்

களுக்கு உரிமையுடையவர்களாயும் ஆவோம். அவர்களே எங்கள் தலைவர்கள் ஆவார்கள். அவர்கள் மனமகிழ்ந்து கட்டளையிட்டபடியே அடிமையாய் ஏவல் கேட்போம். இதுதான் எங்கள் கருத்தாகும். அங்ஙனம் எங் கருத்தாயினும், எங்கள் தலைவனே! உன்னை யன்றி ஓரணுவும் அசையாதாதலின், இக்கருத்தின்படியே எங்களுக்கு நீயே அருள்புரிவாயானால் யாங்கள் என்ன குறைய மில்லாதவர்களாவோம்; என்று வேண்டிக் கொண்டனர்.

பாதாளம். ௧௦.

அவ்வாறு வேண்டிக்கொண்டு புறப்படுவார், ஆங்கு அம்மாதர்கள் இறைவனை ஒருவர்க்கொருவர் பாடும்படி விரும்பியபோது எம்பெருமானுக்கு, முன் பாட்டில் காலத்தால் முதன்மை கூறினதுபோல் இதில் இடத்தால் முதன்மை கூறி அவனை யாம் எப்படிப் பாட இசையும் என்று அவன் மாண்பு சொல்வாராயினர். இது படர்க்கைப் பரவலாமென்க.

குற்றமில்லாத மேன்மை பெற்ற இறைவனுடைய திருக்கோயில் தொண்டு செய்யவந்த பெண்பிள்ளைகாள்! நம் இறைவன் திருவடிமலரானது பாதாள உலகங்கள் ஏழுக்கும் கீழெசொல்லுஞ் சொல்லைக் கடந்து நின்ற இடமே ஆகும். அதுபோல் அப்பெருமான் போதால் நிறைய அணியப்பெற்ற திருமுடியும் எல்லாப் பொருள்களுக்கும் மேலே முடிவாய் நின்ற பொருளே. அப்படியாயினும் உயிர்களுக்கு அருளும் பொருட்டு உமையை ஒரு பாகமாகக் கொண்டான். அப்படிக்கொண்ட திருமேனியோ ஒரு திருமேனி இல்லை. "கருதுவார் கருதுமுருவாம்" என்றவாறு பல திருமேனிகளை உடையவனுவான். வேதமுதலாக விண்ணோர்களும் மண்ணோர்களும் "வாழ்த்துவதும் வானவர்கடாம் வாழ்வான்" என்று அருளினாராதலின், தன்னலங்கொண்டோ, அன்பினுலோ, யாம் அறியேம். எப்போதும் தோத்திரஞ் செய்வார்கள். அவ்வாறு தோத்திரஞ் செய்து கொண்டிருந்தாலும், சொல்லமுடியாத ஒரு தோழனையும் தொண்டர்களையும் உள்ளவன். அது மட்டோ! எதுதான் ஊர்? எதுதான் அவன்பெயர்? (எல்லாம் அவன்ஊரே. எல்லாம் அவன்பெயரே. என்றவாறு) யார்தான் உற்றவர் ஆவார்? யார்தான் அவனுக்கு அயலார் ஆவார்? (எல்லாம் அவனுடைமையே என்றவாறு) இதனுல் அத்தகைய பெருமானை யாம் பாடுந் தன்மைதான் எப்படி என்றனர். (தொடரும்)

### உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்.

சீலத்திற் சிறந்தது பொறுமை. பொறுப்பவர் இம்மைக்கும் மறுமைக்கும் உரியவர் ஆவர்.

உலகத்தில் என்ன செய்யவேண்டுமென்கிறாயோ அதை நீயே செய்.

—ரா. கி. வி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## மணிவாசக சங்கம்

## இருபத் தாறுவது ஆண்டின்

# அறிக்கைப் பத்திரம்.

காப்பு.

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
னால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ் சடையான்
றருமொருவா ரணத்தின் றாள்க
ளுருகோட்டன் பொடும் வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமு மொன்
றோவென்னச் செய்யுந் தேவே.

---

சித்தி விநாயகர் செய்யபே ரருளால்
எத்திசை யும்புகழ் எழில்மிகு பாண்டி
நன்னா டாளுநங் குமர நாயகன்
மன்னிவீற் றிருக்கும் வளமிகு குன்றக்
குடியி னணித்தாய்க் குலவிய பலவரன்
குடியெனப் புலவர் குழாம்புக ழூர்தனில்
சீலமும் அறிவுஞ் சேர்தரு கல்வியும்
உலவா வின்பமும் ஒருங்கே யுதவும்
சைவநன் னெறியுஞ் சார்சிவ மான
தெய்வத் துண்மையுந் தெளிவுற விளங்கப்
பின்னுக மையா யிரத்துப் பன்னிரண்
டன்ன சாதாரண ஆவணி மூன்று

சிறந்த வியாழன் சேரத் திராடம்
பொருந்துநன் னாளிற் புகழ்பெற வமைந்த
மணிவா சகப்பெயர் மாண்புறு சங்கமும்
அணிமிகு கன்னியூ வொன்பதாந் தசமி
பொன்னின் வாரம் பொற்புட னிறுவிய
நன்னய மானநற் சித்திவி நாயக
வித்தியா சாலையும் மேவிய சண்முக
புத்தக சாலையும் புண்ணியப் பதியாம்
பருவநாள் விழவொடும் பாடலோ டாடலும்
திருவிளை மிகுபுகழ்த் தென்குடித் திட்டைத்
திருத்தல மதனிற் சேர்தரு சித்திரை
அருட்டிரு வாதிரை பாதித்த வாரம்
சித்தாந்த வித்தியா சாலை யாதியாய்த்
திகழ்ந்து நாலுறுநந் தெள்ளிய ராக
மாணவர் பலர்க்கு மாண்பொரு ளுணர்த்தி
நீணிலம் போற்ற நேர்மைய தாக
என்று மின்பம் பெருக மியல்பிறல்
நின்று நிலவி நீடு வாழியவே.

---

அருட்டிறம் வாய்ந்த

அவைத் தலைவரவர்களே!

அவையோர்களே!!

சித்தி விநாயகர் திருவருளால், சித்தாந்த வித்தியாசாலை, சண்முக விலாச புத்தகசாலை என்னும் இவற்றுடன் சேர்ந்து விளங்கும் மணிவாசக சங்கத்தின் இருபத்தாறுவது ஆண்டுத் திருவிழாவுக்குப் பேரன்பினால் வந்து குழுமி யிருக்கும் பேறிவாளர்களாகிய உங்கள் முன் இவைகளின் வளர்ச்சியை முறையே அறிவிக்கின்றோம்.

செந்தமிழ்ப் பாண்டித் திருநாட்டின்கண்ணே திருவளர் குன்றக்குடியின் தென்பால், சீர்திகழ் பலவான்குடியினில், கடையுகத் தாண்டு ரு௦கஉ ஆன சாதாரண ஆவணி ஙூஉ குமார விநாயகர் திருக்கோயில், திருவாசக பாடசாலை, செங்கமலத் திருக்குளம், திருநந்தனவனம், தண்ணீர்ப் பந்தர் ஆகிய பிரதிட்டா கும்பாபிடேகமான உத்திராட நாள் மணிவாசக சங்கமும், சாதாரண புரட்டாதி உஎஉ விஜய தசமியன்று சித்தி விநாயக வித்தியாசாலையும், சண்முகவிலாச புத்தகசாலையும் தொடங்கப்பெற்றனவாகும். தொடக்கத்திலிருந்து அவைகள் அரிய பெரிய தொண்டுகளை நன்றாற்றி வந்துள்ளன.



இன்னும் மேன்மையான தொண்டாற்றுவான் வேண்டித் திருஞானசம்பந்தப் பெருமானாரின் தேவாரத் திருப்பதிகம் பெற்றுச் சிறப்புற்று மிளிரும் திருத் தென்குடித் திட்டை என்னும் இத்திருத்தலத்தின்கண்ணே, திருவருட்பேறு கருதிப் பின்னுகம் ஐயாயிரத்து முப்பத்தெட்டெனப் பேசும் தாது வருடம் சித்திரை மாதம் பதினான்காந் தேதி (26-4-1936) பானுவாரம் திருவாதிரைத்திருநாள் சித்தயோகம்கூடும் நன்னாள் ஆகிய இந்நாள், சித்தாந்தவித்தியாசாலை யெனவும், மணிவாசகசங்க மெனவும், சண்முக விலாசபுத்தகசாலை யெனவும், இனிது நிறுவப்பெற்றுள்ளன.

## மணிவாசக சங்கம்.

இச் சங்கம் தோன்றியதிலிருந்து மாதக் கூட்டங்களும், வருடக் கூட்டங்களும், மாட்சிமிக்க பல பெரியார்களின் தலைமையில் சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்கச் செந்நாப் புலவர்களின் சீரிய விரிவுரைகளும், மாணவர்களின் கட்டுரைகளும் மாண்புடன் நிகழ மேன்மையாக நடைபெற்று விழாக்களுங் கொண்டாடப் பெற்றன.

உள்ளூர் அன்பர்களும், வெளியூர் அன்பர்களும், சிவநேசர் திருக்கூட்டத்தினரும் ஊக்கமாக முன்னின்று நடத்தி வைத்தனர். இச் சங்கத்திலிருந்தே சிவநேசர் திருக்கூட்டம் தோன்றிச் சீரியதொண்டாற்றி வருகின்றது.

இச்சங்கத்தின் உடு-வது ஆண்டுவிழா பலவான்குடியில், யுவ ஆவணி உசஉ (9-9-1935) திங்கட்கிழமை, உத்திராடநாள், குமாரவிநாயகர் திருக்கோயில் வழிபாடு சித்திவிநாயகர் தண்டபாணியுடன் மாணிக்கவாசகர் திருவுலா, தேவார திருவாசகத் திருக்கூட்டக் காட்சி ஆகியவைகளுடன் ஆலங்குடி வாழ் அந்தணாளரும் செந்தமிழ்ச் செல்வருமாகிய பண்டித அ. கோபாலையரவர்கள் தலைமையில் பேரறிவாளர்களின் சீரிய விரிவுரைகள் நிகழ நிறைவேறியது.

## நிகழ்ச்சி விவரம்.

தலைவருக்கு மாலை சூட்டி மேளதாள விருதுகளுடன் அவரை வரவேற்று அக்கிராசனத்தமர்த்தி, தமிழ் மறைவாணர்களாகிய காரைக்குடி அ. நடேச தேசிகர், கோட்டையூர் சிவலோகநாததேசிகர், கொத்தமங்கலம் நடேச தேசிகர், ஆத்தன்குடி கனகசபாபதி ஓதுவார் முதலானோர்கள்

தேவாராதி திருப்பாசுரங்களை இன்னிசையுடன் ஓத, "சிவநேசன்" இராமசாமி செட்டியார் தலைவரவர்களைப் பாராட்டி வரவேற்புரை கூற, திருவாளர், மெ. வெ. வேலப்ப செட்டியாரவர்கள் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்து வழங்க, ப. அழ. இராமசாமி இருபத்தைந்தாவதாண்டு அறிக்கை படிக்க, தலைவர் மிக மேன்மையான பொருட் செறிவுடன் முகவுரை கூறினர்.

முற்பகலில், கோநகர் திருவளர்செல்வன், சு. மு. பழ. சுப்பிரமணியன் 'பண்டைத் தமிழர் பெருமை' என்பதையும், கோநகர், கற்பக விநாயக கலாசாலையாசிரியர் திருவாளர், ப. இராமநாதபிள்ளையவர்கள் 'திருப்புகழ்' என்பதையும், பிற்பகலில்—திருவளர் செல்வர்களான:— தெ. மு. வீர. முத்துராமன், தெ. மு. வீர. வீரப்பன், கோநகர் பெ. சித. வி. திருநாவுக்கரசு ஆகிய மூவரும் முறையே, 'தருமிக்குப் பொற்கிழி யளித்த திருவிளையாடல்' 'தலவிசேடம்' 'விநோத பாக்கள்' என்பன பற்றியும், திருவாளர்களான யாழ்ப்பாணம், தமிழ்ப்பண்டிதர், இரத்தினேசுவரய்யர், சொக்கலிங்கம்புத்தூர், தமிழ்ப்பண்டிதர், ரெ. இராமமூர்த்தி அய்யர், ஆத்தன்குடி வேதபாடசாலை, கல்யாண சுந்தர கனபாடிகள், ஷியூர் ஜகதீசய்யர், அழகாபுரி சிதம்பரம் செட்டியார், தேவகோட்டை, வயி. நாக. ராம. வே. இராமநாதச் செட்டியார், ஆளுடையார்கோவில், ஸ்தலபுராணிகர், சுந்தரசாஸ்திரியார் ஆகியவர்கள் முறையே, 'சமயநிலை' 'அறிவின் ஆற்றல்' 'சிவலீலார்ணவம்' 'சைவ சமயம்' 'நாரைக்குமுக்தி கொடுத்தது' 'கண்ணகிகற்பும் மன்னவன் முறையும்' 'மாணிக்கவாசகர்' என்பன பற்றியும் சொன்னயம் பொருணயமாகிய பன்னயங்களும் பொங்கித்ததும்ப நன்னயமான பிரசங்கங்கள் புரிந்தனர். தலைவர் தகுந்த அபிப்பிராயங் கூறினர்.

அணிமையிலிருந்தும், சேய்மையிலிருந்தும், சிவநேசச்செல்வர்களும், அன்பர் குழாங்களும், அடியவர் குழாங்களும், பல பிரமுகர்களும், பிரபல ஞானவான்களும், பல புலவர் பெருமக்களும் மன்றத்தில் வந்து குழுமி மிகப் பொலிவுடன் விளங்கினர். உள்ளூர் நகரத்தார்களில் அன்பர் பலர் முன்னின்றுபசரித்தனர்.

திருவாளர்களான:—சென்னை மகாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர், உ. வே. சாமிநாதையர், புரிசை,பெருஞ்சொற்கொண்டல் சு. முருகேச முதலியார், தேவகோட்டை, சிவாகம சங்கத்தின் சித்தாந்த போதகாசிரியர், பொ. முத்தைய பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்விரிவுரையாளர், பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார், கானாடுகாத்தான், சா. ராம. சித. செ. ஜம்புலிங்கம் செட்டியார் ஆகியவர்களிடமிருந்து வந்த வாழ்த்துக் கடிதங்களை 'சிவநேசன்' இராமசாமி செட்டியார்



வாசித்து அனைவர்க்கும் மனமுவந்த வந்தனம்கூறினர். எல்லாவகையாலும் இனிது நிறைவேறியது.

## சித்தாந்த வித்தியாசாலை.

மணிவாசக சங்கத்தைத் தனக்கு அங்கமாகக்கொண்டு விளங்கும் இவ் வித்தியாசாலை பலவான்குடிதனில் சித்திவிநாயக வித்தியாசாலை என்னும் பெயருடன் தோன்றியநாள் தொடங்கிப் பன்னூல் பயின்ற நல்லாசிரியர்களைக் கொண்டு பன்னூற்றுக் கணக்கான நன்மாணவர்கட்கு நம் நாட்டு மொழியாகிய சீரிய செந்தமிழ் மொழியும் மேனாட்டு மொழியாகிய ஆங்கில மொழியும் பயிற்றி நல்ல முறையாகப் பாடங்கள் சைவமணமும் தெய்வ மணமும் தமிழ் மணமும் பிறமணமும் கமழும் வண்ணம் போதிக்கப் பெற்றன.

உடற்குறுதி பயக்கும் பாடபோதத்தினும் உயிர்க்குறுதி பயக்கும் பாடபோதமே உயரியதாகலின் உயிர் வர்க்கங்களுள் சிறந்த மக்களாக்கையைப் பெற்றுப் பரிபக்குவம் உற்றவர்கள் உயிர்க்குயிராய் விளங்கும் ஆன்மநாயகனது இயல்பையுணர்ந்து 'அவனெம்பிரானென்ன நானடியேனென்ன அப்பரிசே' பெற்றுவாழும் பெருவிருப்புடன் 'வன்குடித் திட்டை மருவார் மருவு திருத்தென்குடித் திட்டை' சிவதலத்தினில் சித்தாந்த வித்தியாசாலையாய்த் திகழத் திருவருட்டுணை கொண்டு நிறுவப்பெற்றுளது.

உயர்திரு, பஞ்சாக்கரபுரம் வாலையானந்த சுவாமிகளென்ற சச்சிதானந்த சுவாமியவர்கள், சித்தாந்த வித்தக உத்தம குருவாயமர்ந்து, சைவசித்தாந்த சாஸ்திரோபதேசஞ் செய்யத் தண்ணளியுடன் இசைந்து ஈண்டு எழுந்தருளி யுள்ளார்கள். உதவியாகத் தமிழ்ப்பண்டிதரொருவரும், தேவார ஆசிரியரொருவரும் நியமனம் பெறுவர்.

தமிழ் இலக்கண இலக்கியங்களையும், தோத்திர ரூபமாயுள்ள தேவார திருவாசகாதி சைவத் திருமுறைகளையும், சாத்திரரூபமாயுள்ள சைவ சித்தாந்த நூல்களையம் பலரும் படித்துப் பயனுறும் வண்ணம் பரம கருணாநிதியாகிய பசுபதிப் பெயரிய தனி முதற் கடவுளின் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

## சண்முகவிலாச புத்தகசாலை.

சித்தாந்த வித்தியாசாலையின் நற்றுணையாகிய இப்புத்தகசாலையின்கண் ஆயிரம் புத்தகங்களுக்கு அதிகமாகத் தொகுக்கப்பெற்றிருக்கின்றன. 'சிவநேசன்' முதலான திங்கள் வெளியீடுகளும், மற்றும் பல வாரத் தாள்களும் வந்துகொண்டிருக்கின்றன. புத்தகங்களையும் பத்திரிகைகளையும்

அன்பர் பலரும் வந்து படித்து இன்புறும் வண்ணம் பரம குருநாதன் திருவருள் பாலிப்பாராக.

## ஆண்டுநிறைவுத் திருவிழாக்களில் தலைமை வகித்த திருவாளர்கள்.

(ஆண்டு ஒன்று முதல் ஆறு)

முதல்நாள்—தி. நே. சிவஞானம் பிள்ளையவர்கள், B. A. டிப்டி கலெக்டர், தேவகோட்டை.

உ-ம் நாள்— எஸ். சாமிநாதையர், 'வித்தியாபாநு' பத்திராதிபர், கோநகர்.

எ. முதல்நாள்—பா. வே. மாணிக்க நாயக்கர் B. E. M. G. E. எக்ஸிக்யூட்டிங் இன்ஜினீயர், சென்னை.
இரண்டாம் நாள்-பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், S. P. G. கல்லூரி, திரிசிரபுரம்.

அ. பா. வே. மாணிக்க நாயக்கர், B. E. M. G. E. எக்ஸிக்யூட்டிங் இன்ஜினீயர், சென்னை.

கூ. சிவசண்முகமெய்ஞ்ஞானசிவாசாரியர், ஞானியார்மடாலயம், திருக்கோவலூராதீனம், திருப்பாதிரிப்புலியூர்.

க0. மகாமஹோபாத்தியாயர், உ. வே. சாமிநாதையர், சென்னை.

கக. S. S. சோமசுந்தரபாரதியார், M. A., B. L., ஹைகோர்ட் வக்கீல், தூத்துக்குடி.

கஉ. மு. கதிரேசச்செட்டியார், இருமொழிப்புலவர், மகிபாலன்பட்டி.

கஙு. பொ. முத்தைய பிள்ளை, சைவப்பிரசாரகரும் சித்தாந்த வித்தியாசாலையாசிரியரும், தேவகோட்டை.

கச. தே. அரு. சித. கரு. இராமநாதச் செட்டியார், கண்டனூர்.

கரு. மணி. திருநாவுக்கரசு முதலியார், தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.



கசு. கரு. முத்து. அழகப்ப செட்டியார், ஆத்திக்காடு தெற்கூர்.

கஎ. பஞ்சாக்கரபுரம், வாலையானந்த சுவாமிகள், சித்தாந்த நிலையம், கோரடாச்சேரி.

கஅ. இலக்குமண ஞான தேசிகர், வேதாந்த மடாலயாதிபதி, காளையார்கோயில்.

ககூ. சென்னிமலை, சிவஸ்ரீ ஈசானசிவநாம கா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியர், மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலைப் போதகாசிரியர், சிதம்பரம்.

உ0. சித்தாந்த சைவப் பிரசாரகர், தே. பெரியசாமி பிள்ளை, திருக்கைலாயபரம்பரை திருவாவடுதுறை யாதீன வித்துவான், உறையூர்.

உக. பஞ்சாக்கரபுரம், வாலையானந்த சுவாமிகள், சித்தாந்த நிலையம், கோரடாச்சேரி.

உஉ. சென்னை சைவசித்தாந்தசபைக் காரியதரிசியும், "சித்தாந்தம்" பத்திராசிரியரும், உயர்தரநீதிமன்ற வழக்கறிஞருமாகிய, ம. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L.,

உங. மகாவித்துவசிரோன்மணி வயி. நாக ராம. அ. இராமநாதச் செட்டியார், அமராவதிபுதூர்.

உச. ஸ்தலபுராணிகர், சுந்தரசாஸ்திரியார், ஆளுடையார் கோயில்.

உரு. பண்டித, அ. கோபாலையர், திருச் சிக்கலுக் கணித்தான ஆலங்குடி.

## வந்தனமும் வாழ்த்தும்.

அங்கிங்கெனாதபடி யெங்கும் நிறைந்திருக்கின்ற இறைவன் திருவருளுக்கும், மங்கலம் புனைந்து சங்கந்தழீஇய நக்குலத்தா யெனும் நற்றமிழ்த் தெய்வத்திற்கும், தெய்வத் தன்மையைத் தெளிவுற விளக்கிச் சைவம் நிறுவிய சமயாசிரியர்கட்கும், சந்தானாசிரியர்கட்கும், தன்னுயிர் போல மன்னுயிர் காத்து இந்நிலம் புரக்கும் மன்னர் பெருமானுக்கும், பேரவை தன்னிற் பெருமைசேர் தலைமையைச் சீர்பெற வகித்த சீரியோர் தமக்கும், பன்னூலாய்ந்து மன்னிய பொருண்மொழி செந்நாப் புலமைத் திறனுடை

யோர்க்கும், இங்கிதமான இன்னிசைப் பாக்களைச் சங்கத்திற் பாடிய தக்கோர் பலர்க்கும், வித்தையில் பயில்பவர் புத்தியின் கூர்மையை யுத்தியினளந்தறிவித்தமணிகட்கும், வித்தியாசாலை, புத்தகசாலை, சங்கம் இவற்றின் வளர்ச்சிக்காக எவ்வாற்றானும் எவ்வளவேனும் அன்போடுவந்துதவுகின்ற அறிவாளர்கட்கும் என்றும் மாறாத நன்றியறிதலுடன் மனமார்ந்த வந்தனமளிக்கின்றோம்.

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கப் பிறையணி பெருமான் நிறையருள் புரிவாராக!

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய தெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தென்குடித்திட்டை, தாது சித்திரை கசஉ } இங்ஙனம், **மணிவாசக சங்கத்தினர்.**

---

## சைவ வேளாள மரபு.

'திருப்புகழ் ஆசிரியர் அருணகிரிநாதர் குலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள்' என்ற தலைப்பிட்டு 'ஒரு தமிழன்' என்பவர் ஆண்டு 9, திங்கள் 7 சிவநேசனில் ஒன்று எழுதினார். அதன் முடிவு 'அருணகிரிநாதர் தமது குலத்தை உயர்ந்ததாகக் கூறுவதாலேயே அவர் தமிழ் மக்களுள் உயர்ந்த குலமாகக் கருதப்படும் சைவவேளாள மரபினராக விருந்திருத்தல் கூடும் என்றது ஒரு சிறிதும் பொருந்ாது' என்பது. அம்மட்டில் அவர் நிறுத்தி விட்டாற் பெரியவர்தான். தமிழ் மக்கட் குழுவில் உயர்ந்தனவாக வேறு மரபுகளும் உள; அருணகிரியார் அந்த மரபுகளுள் ஏதாவதொன்றைச் சேர்ந்தவராகவுங் கருதப்படலாம் என்று அந்த முடிவுக்குப் பொருள் கண்டு அமைய இடமுண்டு. ஆனால் அவர் 'தமிழ் மக்களுள் சைவவேளாள மரபை உயர்ந்த குலமாக கருதுவோர் யார்?' என்றொரு வினாவையும் எழுப்பினார். அருணகிரியாரைச் சைவ வேளாள மரபினரென்று கருதாவிடினும் சைவ வேளாள மரபை உயர்ந்தகுலமென்று கருதுவதே அவருக்குத் தீராத் துயரத்தை யுண்டாக்குகிறதென்பது அவ்வினாவால் யார்க்கும் விளங்கும். அத்தமிழன் எப்படியேனும் போகட்டும். ஒருதரமான சாதியைக் குறித்து உதாசீனமா யெழுந்த அவ்வினாச் சிவநேசனில் எப்படி யிடம் பெற்றதென்பதுதான் தெரியவில்லை. விடையிறுக்கமுடியாத அத்துணைக் கடின வினாவுமன்றே அது. சைவவேளாள மரபை உயர்ந்த குலமாகக் கருதும் பெரியோர் பல்லாயிரவராவர். அவருள் ஸ்ரீமத் உமாபதிசிவாசாரிய சுவாமிகளும் ஒருவரென்பது அவர்களியற்றி யருளிய சேக்கிழார் நாயனார் புராணத்தாற் போதருமே.

சைவ வேளாள மரபினன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

**மணிவாசக சங்கத்தின் இருபத் தாறாவது ஆண்டுத்**
**திருவிழா அவைத் தலைவர்,**
**திருத் தென்குடித் திட்டை, சித்தாந்த வித்தியாசாலை,**
**சைவசித்தாந்த சாஸ்திரோபதேச**
**குருமூர்த்தியாக விளங்கும்**
**பஞ்சாக்கரபுரம், வாலையானந்த சுவாமிகள் என்னும்**

# உயர்திரு, சச்சிதாநந்த சற்குரு சுவாமி அவர்கட்கு,

அன்புடன் வழங்கும்,

# உவகைப் பத்திரம்.

சீர்மிகு சைவசித் தாந்தஞ் செழிக்கப்
பார்புகழ் பஞ்சாக் கரபுரத் துதித்த
பேர்பெறு வாலையா னந்தப் பெரியோய்!
நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தர்
கற்றல் கேட்ட லுடையார் பெரியார்
என்ற வுண்மையை இனிதே போற்றிக்
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகவென நின்று
திருக்கை லாய பரம்பரை யெனத்திகழ்
தருமை யாதீனஞ் சார்ந்து பெருமைசேர்
குருபாத மேயுறு துணையெனக் கொண்டு
துறவறம் பூண்டு தூய்மையாய் நாளும்
அறநெறி பழுத்து அன்பர்கள் இன்புற

வானொடு மதிக்குந் தானுனை தற்பர
ஞானதி டேக நற்றே சிகராய்
வித்தார மாகமெய் கண்ட சைவ
சித்தாந்த நூலைத் தினங்கற் பிக்கும்
வித்தக ராகி மேவுநற் குருவே!
ஒரும்வே தாந்தமென் னுச்சியிற் பழுத்த
ஆராவின்ப அருங் கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருத்தும் சீர்சால் பெரும!
சைவமெய்ச் சமயந் தனிமுதல் சிவமென
உய்வகை யருளும் உயர்ஆ சிரிய!
முத்தாந் தவீதி முளரி தொழுவோர்
சித்தாந் தவுண்மை தெற்றெனத் தெளியச்
சித்தாந் தப்படஞ் சித்திரித் தருளினை,
அத்திற னுணர்த்துஞ் சித்தாந்த விளக்கப்
புத்தக மியற்றியும் பொருணனி விளக்கினை,
மெய்மையாஞ் சைவ தீக்கையின் மேன்மை
வையக மெங்கும் மதிக்க நிறுவினை,
கொரடாச் சேரியிற் குளிர்மதிச் சோலைத்
தெருளார் நிலையஞ் செவ்விதிற் கண்டு
மயற்பிணி யகலு மார்க்கங் காட்டி
உடற்பிணி யகல வோஷதி யுதவிப்
பவப்பிணி யற்றும் பான்மை மிக்கோய்!
பழம்பதி யான பாண்டிநா டதனில்
வளம்பயில் குன்றக் குடியின் மருங்கார்
பலவான் குடிதனிற் பண்புட னிலவிய
சித்தி விநாயக வித்தியா சாலையும்
சண்முக விலாச புத்தக சாலையும்



மணிவா சகப்பெயர் மாண்புறு சங்கமும்
மன்னுமா காவிரி வந்தடி வருடநற்
செந்நெலார் வளவயற் றென்குடித் திட்டையே
என்றுதே வாரம் இயம்பு திருத்தலத்
தொன்றி யாவரும் உவப்ப உயர்வுறு
சித்தாந்த வித்தியா சாலை சேர்ந்து
தானுநல் லாண்டு தழுவுசித் திரைத்திரு
ஆதிரை நாள்மெய் யன்பர்க ளொத்த
வேதவே தியர்கள் மிகமகிழ்ந் தருள
சுத்தாத் துவித சைவ சித்தாந்த
உத்தம குருவா யுகந்தினி தமர்ந்து
சிற்பர னருளாற் சித்தாந்த சாத்திரம்
பொற்புறப் பயிற்றும் புண்ணிய சீல!
மங்கலந் தங்கிய மணிவா சகநற்
சங்கத் திருபத் தாறாண்டு தழீஇய
விழாமிகப் பொலிவுற மேவிய தலைமை
யாளரா யமைந்த அண்ணலே! எங்கள்
சச்சிதா னந்த சற்குரு நாத!
இச்சக மெங்கு மினியசித் தாந்தம்
உலகநா யகியை யொருபா லுகந்து
நிலவுறு பசுபதி நின்மல னருளால்
நன்று சிறக்க நயந்தருட் குருவாய்
என்று மிருந்து இனிதுவா ழியவே.

திருச்சிற்றம்பலம்.

தாது வருஷ சித்திரைமீ கசஉ
26—4—1936
திருத்தென்குடித் திட்டை.

இங்ஙனம்
உங்கள் அன்புள்ள,
மணிவாசக சங்கத்தினர்.

உ

# திருவெம்பாவைப் பாடலின் கருத்து.

(குற்றாலம் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், திருவாளர், ப. சிங்காரவேல் பிள்ளையவர்கள்.)

(216-ம் பக்கத் தொடர்ச்சி)

மொய். கக.

எம்பெருமானைப் படர்க்கையில் பரவி நின்ற பாவை நோன்பாளர் எல்லோரும் ஒருங்கே திரண்டு ஒருவருக்கொருவர் நீராடும் விதியைக் கூறிக்கொண்டே நீராடத் தொடங்கினர் என்க. அவ்வாறு நீராடும்போது திருக்குளத்தில் சென்ற அம்மங்கையர்களில் ஒருமாது எல்லார்க்கும் பொதுவாக முதலில் இறைவனை நோக்கிச் "காப்பு" கூறுவாளாயினள். அது வருமாறு:—

ஐயனே! யாவரும் காணுதற்கு அருமையான நெருப்பினைப்போல் சிவந்தநிறத்தைஉடையவனே! நெருப்பில் நீறுபூத்தாற்போல் அம்மேனியில் திருவெண்ணீற்றை அணிந்தவனே! இவ்விரு நிறமும் ஒருங்கே பெற்று எல்லாச் செல்வமும் உடையவனே! சிறிய இடையையும், மை நிரம்பிய அகன்ற கண்ணையும் உடைய உமை அம்மையை மனையாட்டியாகக் கொண்டவனே! பெரியோனே! வண்டுகள் பொருந்திய தாமரைக்குளத்தில் போய் முகேரென்னும் ஒலிக்குறிப்புண்டாகத் தன்கைகளினாலே துழாவித்துழாவி உன்னுடைய திருவடிகளைப் பாடி உனக்கு வழித்தொண்டர்களாகிய நாங்கள் வாழ்வு பெற்றோம். அடியேங்களை அடிமை கொண்டருளுதற்குரிய இவ்விளையாட்டாகிய மார்கழி வைகறை நீர் விளையாட்டிலே இப்பிறவிப் பிணியினின்றும் பிழைத்தற்குரியவர்கள் பிழைக்கும் வகை முழுவதும் யாங்கள் பிழைத்து விட்டோம். ஆதலால் இந்நோன்பில் குண குற்றங்களை எங்கள்பால் (எய்யாமல்) ஆராயாமல் காத்தருளவேண்டும். இதுவே எங்கள் வேண்டுகோளாம். என்றாள். "எய்யாமையே, அறியாமையே" என்றார் தொல்காப்பியனார் என்க.

இதனால் எந்த நோன்பிற்கும் முதற்கண் காப்புக் கூறுவது அன்பு நெறியில் நின்றவர் கடனாதலின் இந்த மார்கழி நீராடல் தொடக்கத்திற்கும் காப்புக் கூறப்பட்டது என்பது.

ஆர்த். கஉ.

இனி காப்பு வேண்டின பின்னர், மற்றொரு மாது "தன்தோழியை விளித்து எம்பெருமான் திருநாமத்தைச் சொல்லி முழுகுக என்பாளாய்ப்



பெண்ணே! இவ்விளையாடலைச் செய்கின்ற எங்கள் இறைவன் திரு ஆணையால் கட்டுண்ட பிறவியாலுண்டாகிய எங்கள் துன்பம் இந் நீராடலால் தீர்ந்தொழியவே நாம் ஓசையிட்டு விளையாடத் தகுந்த நீரை உடையவன் அவனே. தரிசித்தற்கு நல்ல தில்லைத்தலத்தில் உள்ள திருச்சிற்றம்பலத்தே தீயோடு ஆடாநின்ற கூத்தை யுடையவன் ஆவன். இந்த வானுலகத்தையும், மண்ணுலகத்தையும், நம் எல்லோரையும் படைத்தலைச் செய்தும், படைத்த படியே காத்தலைச் செய்தும், காத்தபடியே அழித்தலைச் செய்தும், இம்முறையேயுள்ள அத்தொழில்களெல்லாவற்றையும் தனக்கொரு விளையாட்டெனக் கொண்டருளினவனுமாவான். அத்தகைய சிவ பெருமானுடைய திரு வார்த்தையாகிய (புகழையும்) திருநாமத்தையும் நாம் சொல்லிக்கொண்டு நம் கைவளைகள் ஒலிக்கவும், நீண்ட உடைகள் மிகுந்த ஒலியை உண்டாக்கவும், அழகிய கூந்தலில் உள்ள வண்டுகள் (அக்கூந்தல் நீரில் தோய்தலால்) அதினின்றும் எழுந்து ஓசை செய்யவும், பூக்களோடு விளங்காநின்ற இப்பொய்கையில் நம் கையால் துழாவி நம்மை உடையவனாகிய அச்சிவபிரானுடைய பொன் போன்ற திருவடிகளைத் துதித்துக் கொண்டு இப்பெரிய சுனை நீராடலைச் செய்வாய்! என்று கூறினள்.

இதனால் நீராடுவோர் எம்பெருமான் திருநாமஞ் சொல்லித் திருவடியைத் துதித்துக்கொண்டு நீராடவேண்டு மென்பது பெறப்பட்டது.

பைங்குவ. கங.

இனி மற்றொரு மாது தன் தோழியை நோக்கி இத் தடாகத்தைச் சத்தியும் சிவமுமாகக்கொண்டு அதில் நீராடவேண்டுமென்று கூறுவாளாய் (பசுமை) புதிய கருநிறத்தையுடைய குவளைப் பூவையும் (பசுமை) புதிய செந்தாமரைப் பூவையும் (குருகு) அங்கு அழகிய பறவைக் கூட்டங்களையும், மேலும் நீர்ப் பாம்பையும், தன்பால் வந்தவர் அழுக்கைப் போக்கிப் புனிதத்தைக் கொடுத்தலையும், உடைய இத்தாமரைத் தடாகமானது (திருமேனியை ஒக்கின்ற) கருங்குவளைப் பூவாலும் அங்கு அழகிய (குருகு) கைவளைகளாலும், (அரவம்) மேலும் சிலம்பொலியாலும், அவர் அவர் வந்து தங்கள் மன அழுக்கைப் போக்கித் தூய்மை பெறத் தன்னிடம் சார்தலாலும் எம்பெருமாட்டியாகிய உமைஅம்மையை ஒத்தும், (திருமேனியை ஒத்த) செந்தாமரைப் பூக்களாலும், ஆங்காங்குத் தன்னைத் தண்குளிரக் கண்டு உருகுகின்ற அடியார் கூட்டங்களாலும் (ஒன்றோடு ஒன்று) பின்னிய பாம்புகளாலும் அவர் அவர்கள் வந்து இறைவனைக் கண்டு தங்கள் மனமாசு அகற்றித் தூய்மையைப் பெறச் சார்தலாலும், எம்பெருமானாகிய சிவபெருமானை ஒத்தும் விளங்காநின்றது. அத்தடாகமாகிய மடுவிலே இங்ஙனம் கண்ட அவாவினாலே போகுதலால் பாய்ந்து

பாய்ந்து நம் சங்கு வளைகள் ஒலிக்கவும், அதனோடு காற் சிலம்புகள் கலந்து ஒலிக்கவும், இறைவன்பால் உள்ள அன்பின் மிகுதியினாலே தனங்களில் பால் பொங்கி வடியவும், இருகையாலும் குடைந்து (அவ்வாறு குடைதலால்) அத் தண்ணீர் பொங்கி எழவும், அத்தாமரை நிறைந்துள்ள புனித நீரிலே முழுகுக" என்றாள். இதனால் நீராடுவோர் நீரை அவ்வாறு நினைந்து ஆடுக என்பது பெற்றாம். குடையும் புனல் - காரணத்தின்கண் வந்த பெயரெச்சம்.

காதார். கச.

இனி மற்றொரு மாது "தன் தோழியைப் பார்த்து எம்பெருமானைப் பாடிக்கொண்டே நீராடுக என்பாளாய்ப் பெண்ணே! நின் காதில் நிறைந்த குழைகள் ஆடவும் (பசுமை) புதிதாய்ப்பூணப்படும் அணிகள் ஆடவும், கூந்தலில் உள்ள மாலைகள் ஆடவும், அதனால் வண்டுக்கூட்டங்கள் ஆடாநிற்கவும், குளிரான இத்தண்ணீரினில்விளையாடித்திருச்சிற்றம்பலத்தைப்பாடி அதன்கண் எழுந்தருளிய நான்கு வேதப் பொருளாய் நின்ற பெருமானைப்பாடி அப்பொருளாகும் விதத்தையும் பாடி அப்பெருமான் சோதிவடிவான தன்மையையும்பாடி அவனால் சடையில் சுற்றப்பட்ட கொன்றைப் பூமாலையையும் அப்பெருமான் எப்பொருளுக்கும் முதலான திறத்தையும் பாடி அப்பெருமான் எப்பொருளுக்கும் முடிவான தன்மையையும் பாடி நம்மைப் பலபேதங்கள் செய்து வளர்த்து இப்பிறவிப் பிணியினின்றும் தூக்கிய (கையில்) வளைகளை அணிந்தாளாகிய உலகத்தாயினுடைய திருவடித் திறத்தையும் பாடி நீராடுவாய்" என்றனள்.

இதனால் நீராடுகின்றவர் எம்பெருமானையும், எம்பெருமாட்டியையும் பொது இயல், சிறப்பியல் பொருந்தப்பாடி நீராட வேண்டு மென்பது பெற்றாம்.

ஓரொரு. கரு.

இனி மற்றொரு மாது "தன் தோழியின் இயல்பைக் கண்டு வியந்து ஏனைய மாதர்களை முன்னிலைப் படுத்தித் தன் தோழியின் இயல்புகளையும், ஆண்டவன் ஆட்கொண்டு அருள் செய்யும் அருமையையும் கூறி அதனால் அப்பெருமான் திருவடியைப் பாடி முழுகுவீர்" என்று கூறுவாளாயினள்.

கச்சணிந்த அழகிய அணிகளைப்பூண்ட தனங்களை உடையோர்களே! நம் தோழி ஒவ்வொரு முறையும் எம்பெருமானை எந்தலைவன் எந்தலைவனென்று எம்பெருமானாகிய சிவபிரானது திருப்புகழையே ஒரு முறையேனும் தன் வாயால் உரையாமலிரார். அம்மட்டோ? அப்பெருமான் திருப்புகழையும், திருப் பெயரையும் பலமுறை உரைத்தலினாலே அவள்



மனம் களிப்பு மீதூரா நிற்கும். அப்படியே களிப்பு மீதூரவே அவள் கண்கள் கண்ணீரை ஒரு முறையும் ஒழியாமல் நீண்ட நீர்த்தாரைபோல் ஒழுகச் செய்யும்.

அப்படியாக அப்பெண் இப்பாரிலே ஒருமுறைதான் வந்தனையைச் செய்தவள் ஆவாள். ஆயினும் ஏனைய தேவர்களை ஒருபோதும் பணிய மாட்டாள். இதினின்றும் நாம் நினைப்பது தான் என்னையெனில்! நம் பெரிய அரசனாய் நின்ற சிவபெருமானுக்கு ஒருவர் இப்படித்தான் (பித்து) அன்பாகும் விதமாம். இது என்ன வியப்பு (அது நிற்க) இவ்வாறாகும்படித் தொண்டர்களைத் தொண்டுகொள்ளுந் திறமையுடையார் இவரேயன்றி வேறுயாருள்ளார். அதனால் அத்திறத்தை உடையாரது திருவடியை நாம் எல்லோரும் வாய் நிரம்பப்பாடி இந்த அழகிய உருவுடைய தாமரைத் தடாகத்தில் பாய்ந்தாடுக என்றனள். ஈண்டு ஆடுக என்பது செய்யுள் நோக்கித் தொக்கி நின்றது. இதனால் நீராடுவோர் இறைவனார் அன்பர்க்கருளும் பெருமையைப் பாராட்டிப் பாடி முழுகுவர் என்பது பெற்றாம்.

முன்னி. கசா.

இனி மற்றொரு மாது இந்நோன்பில் உலக நலத்தை மேற்கொண்டு மழையை வேண்டி வேண்டிக் கொள்பவளாயினாள்.

மேகமே (காலத்தில்) முற்பட்டுச் சென்று கடலை அள்ளி எழுந்து எம்மை யெல்லாம் உடையாளாகிய உமை அம்மை போல நீல நிறங்காட்டி விளங்கி அடியேங்களை ஆளுகின்ற அப்பெருமாட்டியின் சிறிய இடையைப் போல அழகாய் மின்னுதல் செய்வாய்! பின்னர் எம்பெருமான் மனையாட்டியாகிய அத்தாயினுடைய பாதங்களின் விளங்கா நின்ற அழகிய பொற்சிலம்புகள் போல் ஓசை காட்டுவாய்! அதன் பின் அப்பெருமாட்டியின் திருப்புருவம் போல விண்ணில் இந்திரவில்லை விளங்கக் காட்டிடுவாய்! பின்னர் முறையே எங்களை அடிமை கொண்டு ஆளுகின்ற இறைவியை என்ஞான்றும் பிரிதல் இல்லாமல் நின்ற எங்கள் தலைவனுடைய அன்புடைத் தொண்டர்களுக்கும், நமக்கும் எங்களால் சிந்திக்கப்பெற்றவளாகிய எம்பெருமாட்டியார் திருமுன் பெருகுகின்ற இனிய திருவருளைப் போலவே மழையைப் பொழிவாய்! என்று மழை பொழிய வேண்டினள். இதனால் நீராடுதல் முதலிய நோன்புகளைச் செய்வோர் பொது நலம் வேண்டுக என்பதாம்.

செங்கண். கள.

மற்றொரு மாது "தன் தோழியை நோக்கி நம்மைப் பாராட்டி நம்பால் வந்து நமக்கு இன்பருளும் நன்றியை மறவாமல் பாடி முழுகுவாய்" என்று கூறுவாளாயினள்.

மணத்தை ஊட்டிய கரிய கூந்தலையுடைய மாதே எம்பெருமானானவன் சிவந்த கண்களையுடைய திருமாலிடத்தும் நான்கு திசைகளையும் நான்கு முகங்களாகக் கொண்ட அயனிடத்தும் அமரர்களிடத்தும் மற்ற எவ்விடங்களிலும் இல்லாததாகிய ஒப்பில்லாத பேரின்பமானது நம்மிடத்து உள்ளதாகும்படி எங்களைக் குணங்கொண்டு பாராட்டி இவ்வுலகில் எம்முடைய வீடுகள்தோறும் எழுந்தருளிவந்து செந்தாமரைப் பூப் போன்றதும் பொன் போல பெறுதற் கரியதும் ஆன திருவடியைத் தந்தருளுகின்ற வீரனானவன் அருட் கண்ணையுடைய அரசனானவன் யார் மாட்டும் அவனே அடியேங்களாகிய எங்களுக்குப் பெறுதற்கு அருமையான அமுதத்தை ஒப்பான். அவனே எங்கட்குத் தலைவனுமாவான். அத்தகைய பெருமானைப்பாடி அழகு விளங்கத் தாமரைப் பூக்களையுடைய தடாகத்தில் நீ பாய்ந்து முழுகுவாய் என்றனள். இதனால் நீராடுவாரெல்லாம் இறைவன் தன் பெருமை நோக்காது எளியனாய் வந்து நமக்குச் செய்துவரும் நன்றியைப் பாராட்டி முழுகுவா ரென்பதாம்.

அண்ணா. கஅ.

மற்றொரு மாது தன்தோழியை விளித்து நீராடுகின்ற காலமாகிய இவ்வைகறையில் நிகழும் நிகழ்ச்சியைக் கூறி நம் திருவண்ணாமலை நாதன் எங்கும் நின்ற அருமையையும் அங்ஙனமாயினும் நமக்கு எளிவந்து நின்றருளும் பெருமையையுஞ் சொல்லிப் பாடி முழுகுவாய் என்பாளாயினள். பெண்ணே! திருவண்ணாமலை நாதனுடைய திருவடித் தாமரையை வந்து வணங்குகின்ற தேவர்கள் திருமுடியில் உள்ள மணிக்கூட்டங்கள் எம்பெருமான் திருவடியொளியை நோக்கத் தம் ஒளி மழுங்கிவிட்டாற்போல கண்ணுக்கு நிறைந்த சூரியனுடைய ஒளியானது வந்து பேர் இருளைப் போக்குதலால் அக்கதிரின் ஒளி நோக்க நட்சத்திரங்களெல்லாம் தண்ணிய நிறைந்த தன் ஒளி கெட்டு வைகறைப் போதில் ஒழிந்திடலாயின. அவ்வாறு ஒழிந்திடவே பெண்ணாகியும், ஆணாகியும், அலியாகியும் விளங்குகின்றஒளிசேர்ந்தவிண்ணுலகாகியும், மண்ணுலகாகியும், இவற்றிற்கெல்லாம் வேறாகியும் எம்பெருமான் இவ்வாறு அப்பாற்பட்டு இருப்பினும், நங் கண்ணுக்குப் பெறுதற் கரிய அமுதமாகி நின்றருளினான், அவ்வாறு நின்ற அண்ணாமலை நாதனான சிவபெருமானுடைய திருவடியைப் பாடி இந்தத் தாமரைப் பூக்களையுடைய நீர் நிலையில் பாய்ந்து முழுகுவாய் என்றனள். இதனால் நீராடுவோர் எந்தத் தலத்தில் ஆடுகின்றார்களோ அந்தத் தலத்தின் எழுந்தருளிய சிவபிரான் திருநாமமும் ஆடுகின்ற காலமும் கூறி அப்பெருமான் திருவடியைப்பாடி நீராடுக என்பது கூறினாளாயிற்று.

வடமொழி ஒத்துகள் பலரால் கவரப்பட்டுப் பின்னர்ப் பெறப்பட்டமை கூறும் அருத்தவாதமாகிய புராணக்கதைகளும் வேதங்களுக்குத் திரயீ என்ற பெயருண்மையால் முன்னர் மூன்று வேதங்களிருந்து பின் ஆக்கப்பட்ட அதர்வவேதமுஞ்சேர்ந்துபின்னர்நான்காயினமையும், "அநந்தா வைவேதாகா" "ஒத்துகள் அளவில" என்ற சுருதியால் வேதங்கள் அளவிலவெனப் பெறப்படினும் இப்பொழுதுள்ளன நான்காயினமையையும் உய்த்துணரில் ஒத்துகளுக்கும் காலத்தால் வேற்றுமையுண்மை புலப்படும்.

வடமொழி யாகமங்களில் சைவவந்தணர்க்கு முதன் மக்களாகிய அகத்தியர் கௌதமர் முதலிய ஐவர்க்கும்சிவனுர் சதாசிவமூர்த்தமாயிருந்து சிவாகமங்களை அறிவுறுத்தினர். அவர் உலகுக்குரைத்தனர் என்று கூறப்படுவதையும் முதற் சங்கத்தில் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் வீற்றிருந்தருளினவும், அவராலுணர்த்தப்பெற்றஅகத்தியர் கௌதமர்முதலியர் செய்தனவும், அவை இருக்கு முதலிய வேதம் போன்ற தலையாய வோத்து என்று தொல்காப்பிய வுரையிற் கூறப்படுவதையும் திருமந்திரம், "சதாசிவந் தத்துவ முத்தமிழ் வேதம்" என்று வடமொழி ஆகமக் கருத்தைத் தழுவிக் கூறலையும், உற்று நோக்கில் சிவனுரும் அவர்பாலறிந்த அகத்தியர் முதலிய முனிவரும் கூறிய தமிழ் ஒத்துகள் முற்காலத்திருந்தனவென்றுறுதிப் படுகின்றது. அத்தமிழோத்துகள் தமிழ்ப்பண்களோடு ஓதப்பட்டன வென்பதை வடமொழியாகமங்கள் பூஜாகாலங்களில் திராவிடகானஞ் செய்யத்தக்கது என்றும், விழாக்காலத்தில் திக்குப் பலியில் தமிழ்ப்பண்கள் ஓதத்தக்கனவென்றும் விதித்தல் விளக்குகின்றது.

அத்தகைத் தமிழ் ஒத்துகள் சிவனுரும் அவராலறிவுறுத்தப்பட்ட சைவ முனிவரும் கூறியனவாதலால் சைவநெறி கூறும் நூல்களேயாமென்று கருதக் கிடந்தமை காண்க.

இனி உமாபதி சிவாசாரியார் திருமுறைகண்ட புராணத்தில் இக் கருத்துக்களைச் சுருக்கி,

அருமறையைச் சிச்சிலிப் பண்டருந்தத்தேடு மதுபோ
லன்றிது வென்றுமுளதா முண்மைப்
பரபதமுந் தற்பரமும் பரனே யன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பறுவல் பாரி
னெரியினிடை வேவாதாற் றெதிரே யோடு
மென்புக்கு முயிர்கொடுக்கு மிடுகஞ் சாற்றுஞ்
சரியைவளை விக்குங் கன்மிதக்கப் பண்ணுங்
காமதலை கரையிலுறக் காற்றுங் காணே.

என்று தமிழ்மறையை "இது என்றுமுளது" என்றுஅதன் தொன்மையை விளக்கினமை காண்க.

கம்பராமாயணம் அகத்தியப்படலத்தில்,

உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவினி னும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சியணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்.

என்று கம்பநாட்டாழ்வார் உழக்குமறை நான்கினும் உயர்ந்ததாய்க் முக்கண்ணனார் தந்த தமிழ் மறையை உலகுக்களித்த அகத்திய முனிவன் என்று கூறித் தமிழ் மறையின் உயர்வும் வழியும் உணர்த்தினமை காண்க.

மறைநாலினு முயர்ந்து—கடவுடந்த தமிழ் என்றமையால் தமிழ் என்ற சொல் ஆகுபெயராய்த் தமிழ் மறையை யுணர்த்தி நின்றது.

இக் கருத்தைத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருமறைக்காடு, தே. முத்தமிழு நான்மறையு மானான் கண்டாய்'' என்ற கேள்வியில் முத்தமிழ் என்று முத்தமிழ் மறையையும் நான்மறை யென்று வடமொழி மறையையும் உணர்த்தினமையாற் றெளிக.

இவ்வாறே தேவாரத்தில் திருஞா. பிரமபுரம், "திருநெறிய தமிழ்வல்லார்" புகலி, "உரைக்குந் தமிழ்" சுந்தா. தே. நொடித்தான்மலை, "எழிலிசையின்றமிழால்" என்பது முதலிய விடங்களில் தமிழ்ப்பதிகமாகிய நூலைத் தமிழென்று ஆகுபெயராய்க் குறித்தமையுமிதை ஆதரிக்கும்.

தமிழ் வேதம் பிறவிப் பிணி தீர்த்தலில் மருந்து போல்வது. மருந்து தேன், பால், வெல்லம், பழம் முதலிய இனிய பொருள்களாகிய அனுப்பானத்தில் தந்தால் மருந்தின் அருமையறிந்தும் உட்கொள்ள உளமொருப்படாத பெரியரும், உட்கொள்ள விரும்பாத சிறியரும் உண்டு நோய் நீங்கி இன்புறல் வழக்கு. அதுபோல் அறிவில் சிறாரும் பாம்பும் பசுவுங் கேட்டு மகிழ்ந்து விரும்பும் இசையோடு தமிழ் மறையைக் கூறினால் எல்லவருங் கேட்டுக்கொண்டு புறவிடயங்களிலுளஞ் செல்லலொழிந்து பரம்பொருள்பால் உள்ளஞ் சென்று நின்று பழகி அன்பு முதிர்ந்து அவனருளடைவர் என்ற வுண்மை தேர்ந்த சமயகுரவர் இனிய அமிர்தம் போன்ற பண்களோடு தமிழ்மறையைப் பாடியருளினர்.

ஸ்காந்தம்.

"கீதிகாநம் சிவப்ராப்தேஷுதாராம் காரணம்பவேது |. கீதிகா நேஷு யோகஸ்யாது. யோகாதேவ சிவைக்யதா."

(இ-ள்) "சிவனை யடைதலில் பாட்டுவடிவாகிய பண்மேலான காரணமாகிறது. பாட்டு வடிவாம் பண்ணால் உள்ளத்தின் ஒற்றுமையுண்டாகிறது. ஒற்றுமையால் சிவத்தில் ஒன்றுபடல் உண்டாம்"



என்று கூறலால் தமிழ் மறையைப் பண்ணோடு ஓதல் சிவப்பெரும்பொருளை யடைதற்கு யோகம் போன்ற சிறந்த சாதனமாகின்றது.

திருஞானசம்பந்தர் தேவாரம்.

"பண்ணொன்ற இசைபாடு மடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கு மணிகண்டன்"

திருநாவுக்கரசர் தேவாரம்.

"கீதத்தை மிகப்பாடும் அடியார்க் கென்றும்
கேடிலா வானுலகங் கொடுத்த நாளோ"
அளப்பில்கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளுமாறே"

சுந்தரர் தேவாரம்.

"பாடநின் றாடுமாறு வல்லரா யவரே யழகியாரே".

"பாட்டுப் பாடிப் பரவித்திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பான் கோவில்"

என்று தமிழ் மறைகளுமிக்கருத்தை யுணர்த்தினமை காண்க.

அப்பண்களை விளக்குந் தமிழ் இசை நூல்களைப் பற்றி யாராயில் 11000 ஆண்டுகட்கு முன் முதற்சங்க அகத்தியனாரியற்றிய அகத்தியத்தில் இயல் இசை நாடகமென்ற முத்தமிழுங் கூறப்பட்டுள்ளன. இடைச்சங்கத்தில் சிகண்டியாசிரியர் இசைநுணுக்கமென்ற வழிநூலியற்றினர். கடைச் சங்கத்தில் வரி பேரிசை சிற்றிசை என்ற இசை நூல்களுமியற்றப்பட்டன. அதன்பின் இசை மரபு முதலிய இசை நூல்களுந் தோன்றின.

தமிழ்ச்சங்கங்கள் மூன்றினுண்மையைப்பற்றி இறையனார் அகப்பொருளுரையினும், தொல்காப்பியப் பொருளதிகாரவுரையினும், சிலப்பதிகாரவுரையினும்,பிறவிடங்களிலுங்கூறப்பட்டுள்ளன. அவற்றைப்பற்றி நோக்கில் தலைச்சங்கம் கி. மு. 9990முதல் 5550வரையும் இடைச் சங்கம் கி. மு. 5550 முதல் 1850 வரையும் கடைச்சங்கம் கி. மு. 1850 முதல் கி பி. 10வரையும் இருந்ததாய்க் குறிக்கப்படுகின்றன. இவற்றை மெய்ப்பித்தற்குப் பல ஆங்கில சரித்திராசிரியர் கூற்றுகளும் தமிழ் வடமொழிகளிற் பல நூல்களுமிருக்கின்றன.

நாம் தென்மொழி வடமொழி யென்ற இருமொழிகளிலும் பற்றுடையாதலால் உண்மையில் அவ்வவற்றின் பெருமைகளைக் கூறிப் போற்றுகின்றோம். வடமொழியில் மிக்க பற்றும் தமிழில் வெறுப்புமுடையரும், தமிழின் பெருமையை அறியாதவரும் தாய் மொழியி லபிமானமற்றவரும், ஆங்கிலமொழி நூல்களிற் பயிற்சி யில்லாதவரும், வடமொழி தென்மொழிகளின் உண்மையியல் போராதவரும் ஆகிய சிலர் தமிழ்நூல்களிற் கூறப்படுவனவற்றைப் பிரமாணமாய் நம்பாமல் இடர்ப்படுகின்றனர். அன்னவர் வடமொழி நூல்களைப் பிரமாணமன்றென்பாரை யென்ன குறைகூறுவரோ அக்குறைக்குத் தாமும் இலக்காவர் என்பதைக் கருதியுணர்ந்தாலவ்விடர் நீங்குமென்க.

இனி இசையைப் பற்றிப் பேசில் தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழிசை(சுரம்)களும்.

அவ்விசைகளில் முதலிசை (சுத்தசுரம்) வீற்றிசை (விகிர்தி சுரம்) என்பவற்றின்மாறலால் தோன்றிய ஏழுபாலை (மேளகர்த்தா-ராகாங்கராகம்)களும், ஏழுபாலையினின்று தோன்றிய பண்கள் (ராகம்) 103. உம் உள. அவை பண் 17 பண்ணியல் 70 பண்டிறம் 12 பண்டிறத்திறம் 4 என இசையின் எண் வகையால் நால்வகைப்படும். இவற்றை வடமொழியார் முறையே சம்பூர்ணம், ஷாடவம், ஔடவம், சதுர்த்தம் (சுராந்தரம்) என்ற பெயரால் வழங்குகின்றனர். இவ்வேழுபாலைகளும் இசைப்புலவன் அறிவின் பெருமைக்குத் தக்கபடி பல்லாயிரம் பண்களாகிய அலைகளைத் தோற்றுவிக்கத் தக்க கடல்கள் போன்றன.

இப்பொழுது வடமொழியில் சங்கீதத்துக்கு முதல் நூலாய் விளங்கும் சங்கீதரத்நாகரத்தில் பண் தக்கராகத்தில்-1 இந்தளத்தில்-1 நட்டராகத்தில்-1 சாதாரியில்-2 பஞ்சமத்தில்-7 கௌசிகத்தில்-9 வகைகளும் வேறு வகைகள் 10உம் ஆக 31 ராகாங்க ராகங்களாக வகுத்து அவற்றை ராகாங்க பாஷாங்க கிரியாங்க உபாங்கராகங்களாகப் பகுத்து அவற்றில் நூற்றுக்கணக்கான ஜன்யராகங்களும் (கிளைப்பண்) விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன அஜ் ஜன்யராகங்களுள் மற்றபண்களும் கூறப்பட்டுள்ளன. அன்றியும் தக்கராகம் கௌசிகம் என்ற ராகாங்க ராகங்களில் ஜன்யராகங்களுக்குத் தக்க விபாஷாகே வாரவர்த்தநீ மாளவ கைசிக தேவாரவர்த்தநீ என்பது பெயரிட்டு அவை தேவாரத்தில் வழங்கும் பண்கள் என்பது குறிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு வழி நூல் செய்வதாய்க் கூறிப் புகுந்த ராமா மாத்தியர் சுரமேள களாநிதியில் 20 மேளங்களும் 45 ஜன்யராகங்களும் கூறினர்.



பின்னர்த் தமிழ் ஏழுபாலைகளில் செம்பாலைமுதல் 6 பாலைகளையும் உழையை (சுத்த மத்திமத்தை) வைத்து 6 வட்டங்கள் (சக்கரங்கள்) ஆகவும் மேற்செம்பாலையிலுள்ள வேற்றுழையை (பிரதிமத்திமத்தை) வைத்து 6 வட்டங்களாகவும் அமைத்து அவற்றால் பூர்வமேளம் 36 உத்தரமேளம் 36 ஆக 72 மேளங்களைக் கற்பித்து அதில் நூற்றுக்கணக்கான ஜன்யராகங்களும் வடமொழியில் விரிக்கப்பட்டுள்ளன. கி. பி. 1620ல் இருந்த வெங்கிடமகி கூறிய மேளங்களும் இத்தகையனவே.

மேற்கூறிப் போந்தவற்றால் முதல் சங்க கால முதற்றமிழில் ஒத்து (மறை)களும் இசைநூல்களுமுள வென்றும் வடமொழியாகமம் தோன்று முன்னரே தமிழிற் கடவுட் புகழ்ப்பாக்களுள வென்றும், அவை தமிழ்ப் பண்களோடு பாடப்பட்டனவென்றும், சிவத்தளிகளில் பண்களோடு ஓதப்படும் தமிழ்ப் பாக்களும் அவ்வோத்துகளின் பகுதிகளேயாமென்றும், அத்தகைப் பழமை வழக்கைப் பின்பற்றிய தேவார வோத்துகள் பண்களோடு சமய குரவர்களாற் பாடப்பெற்றும் சிவத்தளிகளில் ஓதப்பெற்றும்வருகின்றன வென்றும் அறியக் கிடந்தமை காண்க. (இதனால் முதற் சங்க காலத்துக்கு முன் தமிழில் ஓத்துகளும், நூல்களும் இருக்கவில்லை யென்று கூறியதாக வாகாது)

இனித் தமிழ்மறை பண்டைக் காலந்தொட்டே பாடி ஆடி அன்பு செய்தற்குரிய பண்களோடுளது என்பதை,

திருநாவுக்கரசர் தேவாரம்.

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
  திருமலர்மே லலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டமாடி
  நான்முகனு மிந்திரனு மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேறாய்

கழுக்குன்றத் துச்சியாய் கடவுளே நின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

என்றுணர்த்தினமையாற் காண்க. வடமொழி மறை ஓதத் தக்கதேயன்றி பாடியாடத் தக்க பண்களோடுளதன்று. அன்றியும் அதில் இந்திரன் மால் அக்கினி முதலியர்க்குரிய வேள்விகளும் புகழ்மொழிகளும் கலந்துண்மையால் அன்னவர் கடவுளைப்பாடியாடிப் போற்றற்கவை பற்றுக்கோடாகாவென்றோர்க.

இனித் தமிழ் ஆகமத்தைப்பற்றி ஆராயில் பிரமசூத்திரத்துக்கு சித்தாந்த சைவ பாடியமியற்றிய ஸ்ரீ கண்டாசாரியர் "நாம் வேதாகமங்களுக்கு வேற்றுமை காண்கிலம்" வேதமும் ஆகமம் என்றழைக்கப்படும் என்று கூறியவாறே திருமூலநாயனாரும் வேதம் ஆகமம் என்ற சொல்லை வேற்றுமையின்றிப் பல சொல்லொரு பொருட் கிளவிகளாகவே வழங்குகின்றனர்.

திருஞானசம்பந்த மூர்த்திகள் திருவாவடுதுறைக் கெழுந்தருளிச் சிவத்தளிக்கு வந்தபொழுது இவண் தமிழ் மணம் வீசுகின்றதே யென்று நந்தியினருகிருந்து கூறக்கேட்டோர் அவண் அகழ்ந்து நோக்கத் திருமந்திரம் அகப்பட்டதென்ற சரித்திரத்தால் திருமந்திரம் தோன்றிய காலம் தேவாரத்துக்கு நெடுநாள் முந்தியதென்றும் வடமொழி மறையை விளக்கலால் அதற்குப் பிந்தியதென்றும் வெளிப்படுகின்றது. அன்றியும் திருமந்திரத்தில் திருமூலர் வரலாறு என்ற பகுதியில் சிவனார் உமைக்கருளியது தமிழ் வேதமென்றும், நந்திகேசுரர் தமக்கு அவ்வாகமத்தை அருளியதாயும் அம்முத்தமிழ் வேதத்தை நெடுநாட்டாம் ஆதரியாமலிருந்து பின்னர் உணர்ந்து அதை உரைப்பதாயும் கூறுகின்றனர்.

இக்கருத்துகளைத் திருமந்திரத்தில்

"மாலாங்கனே யிங்கு யான்வந்த காரணம்
நீலாங்கமேனி நேரிழையா ளொடு
மூலாங்கமாக மொழிந்த திருக் கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே"
"சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்"



"அப்படி நல்கு மருணந்தி தாள்பெற்று"
"சிந்தை செய்தாகமஞ் செப்பலுற் றேனே"

என்பது முதலிய சொற்றொடர்களுணர்த்தும். ஆதலால் திருமூலர் திருமந்திரம் தமிழ் ஆகமமென்பது தெளிவு.

இனிச் சிலர் வடமொழி வேதங்களும் நூல்களும் மட்டும் பதி பசு பாசவியல்களையும் பதியையடையும் நெறியையு முணர்த்துமென்றும், அவற்றானே வீடுபேறடையலா மென்றும் தமிழ் மொழியில் அவ்வாறுணர்த்தும் நூல்களிலவென்றும் அவற்றால் வீடுபேறடைய முடியாதென்றும் கூறுகின்றனர். நீண்ட வாராய்ச்சியில்லார் அதை நம்பி மயங்குகின்றனர். மேற் கூறிப் போந்தவற்றால் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் அகத்தியர் கௌதமர் முதலிய முனிவரும் தமிழிற் றலையாய வோத்துகளியற்றியதாயும், மலரவன் இந்திரன் முதலிய தேவர்களும் தமிழ்மறைபாடி யாடியதாயும், நந்திகேசுரர் முதலிய சிவகணநாதரும் தமிழ் வோத்துகள் கூறியதாயும் வெளிப்படலாலும், முருகக் கடவுளவதாரமாகிய திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய நால்வரும் தமிழ் வேதம்பாடி அவற்றில் அரிய வுண்மை ஞானப் பொருள்களைத்தினையும் உணர்த்தி வீடுபேறடைந்ததாலும், அகத்திய முனியவர் அத்தமிழ் மறையைத் திரட்டிச் சிவாலய முனிவருக்குத் தர அவர் ஓதியருள் பெற்றமையாலும், திருமூல நாயனார் எல்லா ஆகமப் பொருள்களையும் சுருக்கித் தமிழாகமமாகிய திருமந்திரத்தி லுணர்த்தினமையாலும், அவரோடு நந்திப் புத்தேளிடம் தமிழ் மறை கற்று அருள் பெற்ற உடன் மாணக்கர் சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்ரம பாதர், முன்னையர் எழுவர் என்றும், திருமூலர்பாற் கற்ற மாணக்கர் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கி, கஞ்சமலைச் சித்தர் என்ற எழுவர் என்றும், திருமந்திரங் கேட்டார் மாலாங்க முனி முதலிய பெரியார் என்றும் வெளிப்படலானும், மாற்றார் கூற்றுச்செல்லாத வெற்றுரையாமெனத் தேர்ந்து மயக்கம் நீங்கித்தமிழ் வேதாகமங்களையும் போற்றியோதி யுணர்ந்து ஒழுகுவார் வீடுபேறடைவர் என்பது திண்ணம்.

இவ்வுண்மையை,

திருமந்திரம்.

அவிழ்க்கின்ற வாறு மதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்றவாறுந்
தமிழ்ச் சொல் வடசொல்லெனு மிவ்விரண்டும்
உணர்த்து மவனை யுணராலுமாமே.

திருஞானசம்பந்தர் - தேவாரம்; அச்சிறுபாக்கம்.

தம்மலரடி யென் றடியவர் பரவத்
தமிழ்ச் சொல்லும் வடசொல்லுந் தாழ்நிழற்சேர
அம்மலர்க் கொன்றை யணிந்தவெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சி கொண்டாரே.

என்பது முதலிய மறைமொழிகளாற் கண்டு தெளிக.

## முடிவுரை.

இருக்கு முதலிய வேதங்களாகிய அபரவித்தையும் உபநிடதங்கள் காமிகாதி யாகமங்கள் ஆகிய பரவித்தையும் முறையே உலகர்க்கும் சத்திநி பாதர்க்கும் பயன்படுவன. விளக்கிக் கூறில் வேதங்கள் பல கன்மங்களையும் அவற்றுக்குரிய இந்திரன் அக்கினிமுதலிய தெய்வங்களையும் புகழ்ந்து கூறினும் அவற்றுக்குப் பலன் றருபவனும் தலையாய பொருளுமாகச் சிவபரம்பொருளொன்றையே கூறுகின்றன வென்பது வேதங்களை நுணுகி யறிவார்க்குப் புலனும். ஆதலால் அக் கருத்தே வேதத்தின் சாரமாம். அப்பொருளொன்றையே தலைமைத்தாய்க் கூறுவதாகம மாதலால் அது வேதசாரமென்னப்பட்டது. உண்மை முடிபுமதுவாதலால் அது சித்தாந்தம் என்னப்படுகின்றது. சரியை கிரியை யோகங்களை ஆங்காங்கு சுருக்கிக் கூறுவதன்றி வேதகன்மங்களையுங் குறிப்பாலுணர்த்தினும் ஞான பாதப்பொருளையே மிகுத்துக் கூறலால் தமிழ்மறைகள் நான்கும் தமிழாகமமாகிய திருமந்திரமும் பரவித்தை யென்னப் படுகின்றன. ஆதலால் இருக்கு முதலிய வேதங்களும் அவற்றின் ஞானகாண்டமாகிய உபநிடதங்களும் காமிகாதி ஆகமங்களும் தேவார திருவாசகங்களாகிய தமிழ் மறைகள் நான்கும் தமிழாகமமாகிய திருமந்திரமும் ஆகிய ஐந்தும் பிரமாணங்களேயாம். அவை அவ்வவற்றிற் குரிய பரிபாகிகளால் ஓதியுணர்ந்தனுஷ்டிக்கத் தக்கனவென்பதே அவற்றினுண்மை. அவற்றினுண்மைப் பொருள் பரசிவ மொன்றே.

முற்றிற்று.

உ

# சிவபாரம்யம்.

(ஸ்ரீ வியாஸர் செய்த ப்ரஸங்கம்)

ஸ்ரீ உ. வே- T. V. ஸ்ரீநிவாஸாசார்யர் மொழிபெயர்த்த
துரோணபர்வத்து * 202-வது அத்தியாயத் திரட்டு.

(சிவபரத்துவ நிரூபணசிகாமணி
பொன்னேரி திரு, தி. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள்.)

(அஸ்வத்தாமா) 'எல்லாரையும் நாசம் பண்ணக்கூடியதும் அத்யந்தம் உக்கிரமுமான அஸ்திரம் என்னால் விடப்பட்டது. மனிதத் தன்மையுடையவர்களான கேசவர் அர்ஜுனன் இருவரையும் ஏன் இந்த அஸ்திரம் எரிக்கவில்லை? பகவானே! என்னால் கேட்கப்பட்ட தேவரீர் இதனை உள்ளபடி சொல்லும். மகரிஷியே! கேட்க விரும்புகிறேன்' என்று வினவ, வியாஸர் சொல்லலானார்.

"பெரிதும் ஆச்சரியத்தினாலே என்னை நீ கேட்பதுமான இவ்வித விஷயத்தை முழுதும் நான் உனக்குச் சொல்வேன். மனத்தை ஒரேயிடத்தில் நிலைநிறுத்திக் கேள். உலகத்தைப் படைத்தவரான ஸ்ரீமந் நாராயணர் ஏதோ கார்யார்த்தமாகத் தர்மருக்குப் புத்திரராகப் பிறந்தார். அந்த நாராயணர் இமய மலையை அடைந்து கைகளை உயரத் தூக்கிக்கொண்டு நெருப்புக்கும் ஆதித்யனுக்கும் ஸமானராகவும் மஹா தேஜஸ்வியாகவும் அறுபது லக்ஷத்தறுபதினாயிரம் வருஷம் உக்கிரமாகத் தவம் புரிந்தார். அப்பொழுது அந்தப் புண்டரீகாக்ஷர் வாயுபக்ஷணம் செய்துகொண்டு தம் தேகத்தை உலர்த்திவிட்டார். பிறகு, முன் செய்த தவத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கான ஒரு பெரிய தவத்தைச் செய்து தேஜஸினால் ஆகாசம் பூமி இவைகளின் மத்தியிலுள்ள இடைவெளியை நிரப்பினார்.

அப்பா! அப்படிப்பட்ட தவத்தினாலே அந்த நாராயணர் எப்பொழுது பிரம்மஸ்வரூபியானாரோ அப்பொழுது உலகங்களுக்கெல்லாம் காரணரும் உலகங்களுக்கெல்லாம் நாதரும் ஒருவராலும்

* சென்னை: கணேச அச்சுக்கூடம் 1922ம் வருஷப் பதிப்பு.

ஜயிக்க முடியாதவரும் எல்லாத் தேவர்களாலும் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவருமான விஸ்வேஸ்வரரைக் கண்டார்.

அணுக்களைக்காட்டிலும்சிறிய அணுவாகவிருக்கின்றவரும்பெரிய பூதங்களைக்காட்டிலும்மிகவும்பெரியவராயிருக்கின்றவரும் ருத்ரரும் பிரம்மாதிகளுக்கும் சிறந்தவரும்பக்தர்களுடையபாபத்தையபஹரிக்கின்றவரும் மங்களங்களுக்குக் காரணமாக விருக்கின்றவரும் ஜடைதரித்தவரும் அந்தர்யாமியாக விருந்துகொண்டு பிராணிகளுக்கு அறிவை யுண்டுபண்ணுகின்றவரும் ஸ்தாவர ஜங்கமங்களுக்கு முக்கிய காரணரும் ஒருவராலுந் தடுக்கமுடியாதவரும் ஒருவராலும் அவமதிக்க முடியாதவரும் பார்க்கமுடியாதவரும் ஒருவராலும் அடையமுடையாதவரும் துஷ்டர்களிடத்தில் அடக்க முடியாத கோபமுள்ளவரும் பெரிய வடிவமுள்ளவரும் எல்லாப் பிராணிகளுடைய சுபாசுபங்களான கர்மங்களுக்கும் சாக்ஷியாக விருக்கின்றவரும் வில்லையும் இரண்டு அம்புப் பெட்டிகளையுமணிந்தவரும் பொற்கவசம் பூண்டவரும் முடிவில்லாத வீர்யமுடையவரும் பிநாகமென்னும் வில், வஜ்ரம், பிரகாசிக்கின்ற சூலம், கோடாலி, கதை, நீண்ட வாள் இவைகளையுடையவரும் மஞ்சள் நிறமுள்ள ஜடாமண்டலத்தையும் சந்திரனையும் முடியில் தாங்கியவரும் புலித்தோல் தரித்தவரும் பரிகத்தையும் தண்டத்தையும் கையில் கொண்டவரும் மங்களகரமான தோள்வளைகளை யணிந்தவரும் ஸர்ப்பத்தை யஜ்ஞோபவீதமாக அணிந்தவரும் எல்லாப் பிரதம கணங்களாலும் பூதகணங்களாலும் விளங்குகின்றவரும் ஒன்று சேர்ந்திருக்கின்ற தவங்களின் நல்ல புதையல் போன்றவரும் பேசுவதில் ஸமர்த்தர்களான (பிரம்மாதிகளாலே) இஷ்டமான வாக்குக்களாலே நன்றாகஸ்தோத்திரம் செய்யப்பட்டவரும் நீர், திசை, ஆகாயம், பூமி, சந்திரன், சூரியன் இவற்றின் வடிவமாயிருப்பவரும் தீயும் காற்றும் போன்றவரும் கெட்டநடையுள்ள ஜனங்களால் பார்க்க இயலாத தேவநாதரும் பிரம்மத்வேஷிகளை நாசம் செய்கின்றவரும் அழிவற்ற சுகத்திற்குக் காரணமானவரும் நன்னடையுள்ளவர்களும் பாவம் க்ஷீணித்தவுடன் மனத்தினாலே சோகத்தைவிட்டவர்களுமான பிர்ம்ம நிஷ்டர்களால் நேரில் தரிசிக்கப்படுகின்றவரும் தர்ம ஸ்வரூபியும் ஸ்தோத்திரம் செய்யத்தக்கவரும் விஸ்வரூபியுமானவரைத்



தவத்தினால் அவரிடத்திலேயே அசஞ்சலமாக மனத்தைச்செலுத்தி அவரிடத்திலுண்டான பக்தியினாலே கண்டார்.

அப்படிப்பட்ட ஈசானரைக்கண்டுவாஸுதேவர்வாக்கு மனம் புத்தி தேகம்இவைகளால்ஸந்தோஷமடைந்துபூரித்தார். நாராயணர், ஜபமாலைகளை யணிந்தவரும் தேஜஸுகளுக்கெல்லாம் உத்தமமான நிதியாகவிருக்கின்றவரும்உலகங்களுடைய ஸ்ருஷ்டிக்குக் காரணருமான ருத்திரரைக் கண்டு நமஸ்கரித்தார். பக்தர்களுக்கு வரத்தைக் கொடுக்கின்றவரும் பெரிய அழகான அங்கங்களையுடைய பார்வதியோடுகூடி விளையாடுகின்றவரும் பிரபுவும் மஹாபுருஷரும் பூதங்களுடைய கூட்டங்களாலும் பிரதம கணங்களாலும் சூழப்பட்டவரும் பிறப்பில்லாதவரும் ஜகதீசரும் அவ்யக்தஸ்வரூபரும் காரணஸ்வரூபரும் உத்தம பதத்தினின்று எப்பொழுதும் நழுவாதவரும் அந்தகனென்ற அஸுரனை ஸம்ஹரித்தவரும் முக்கண்ணருமான ருத்திரரைப் புண்டரீகாக்ஷர் பக்தியுடன் நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்யலானார்.

‘தேவரே! ஸர்வோத்தமரே! ஆதிதேவரே! முற்காலத்தில் உம்முடைய புராணஸ்ருஷ்டியான இந்தப் பூமியை அடைந்து எவர்கள் பாது காத்தார்களோ அப்படிப்பட்ட லோகரக்ஷகர்களும் பிராணிகளை ஸ்ருஷ்டித்தவர்களுமான தக்ஷன் முதலானவர்கள் உம்மிடத்தினின்றே உண்டானார்கள். தேவர்களையும் அஸுரர்களையும் நாகர்களையும் ராக்ஷஸர்களையும் பிசாசர்களையும் மனிதர்களையும் கருடர்களையும் கந்தர்வர்களையும் யக்ஷர்களையும் பற்பலவிதமான பூதஸங்கங்களையும் அவ்வாறே இன்னும் மற்ற எல்லாவஸ்துக்களையும் தேவரீரிடத்தினின்றே உண்டானவையாக நாங்கள் அறிகிறோம். இந்திரன், யமன், வருணன், குபேரன், பிதிருக்கள், த்வஷ்டா, ஸோமன் இவர்களைத் தேவதையாக உத்தேசித்து அனுஷ்டிக்கப்படுகிற கர்வமானது உம்பொருட்டே. ரூபம், ஒளி, சப்தம், ஆகாயம், காற்று, ஸ்பர்சம், ரஸம், ஜலம், கந்தம், பூமி, காலம், வேதங்கள், யாகங்கள், பிராம்மணர்கள், ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய அனைத்தும் உம்மிடத்தினின்றே உண்டாயிருக்கின்றன. ஸமுத்திர ஜலத்தினின்று நீர்த்திவலைகள் எவ்வாறு வெளிப்பட்டு வேற்றுமையடைந்து பிரளயகாலத்தில் எவ்வாறு மறுபடியும் அந்த ஸமுத்திர

ஜலத்தோடேயே ஒன்று சேர்கின்றனவோ அவ்வாறே கற்றறிந்தவர்கள் உம்மிடத்தினின்றே ப்ரபஞ்சத்தினுடைய உத்பத்தியையும் லயத்தையும் அறிகிறார்கள். இவ்வுலக மனைத்தும் உம்மிடத்திலேயே தோன்றி உம்மிடத்திலேயே ஸாயுஜ்யமடைகிறது. அதில் அத்புதமானவையும் அழிவற்றவையும் பிராணிகளுடைய ஹ்ருதய கமலத்தில் வஸிக்கிற ஸ்வபாவமுள்ளவையுமான இரண்டு பறவைகள் வஸிக்கின்றன. கீழாகப்பரவிச் செல்லுகின்ற கிளைகளோடுகூடிய ஸம்ஸார ரூபமான அரசமரமானது ரக்ஷகமான ஏழுதோல்களுள்ளது. சொற்களும் பொருள்களும் தேவதைகளும் லோக பாலர்களும் முற்காலத்தில் இவ்வுலகங்கள் அனைத்தையுந் தரித்து உம்முடைய ஸாயுஜ்யம் பெற்றவர்களும் அவர்களைக் காட்டிலும் மேன்மையான வஸ்துவும் உம்மிடத்தினின்றே உண்டாயின. அவர்களைக் காட்டிலும் நீரே பரம்பொருள். லோகபிதாமஹரே! ஈசரே! நடந்தது நடக்கின்றது இனி நடப்பது முதலிய எல்லாவஸ்துக்களும் நீரே. தேவரீர் அவமதிக்க முடியாத பரம் பொருள். இந்த உம்மிடத்தினின்றே எல்லா உலகங்களும் உண்டாகின்றன. பக்தனாகவந்தடைகின்ற என்னிடத்தில் நீர் பக்ஷமுள்ளவராயிருக்க வேண்டும். தேவநாதரே! தேவரீரை ஆத்மாவுக்கு ஆத்மாவாக நான் அறியவில்லை. இவ்வாறு அறிகின்ற மனிதன் நிர்மலமான பிரம்மஸ்வரூபத்தை அடைகிறான். உம்முடைய நன்கு மதித்தலையடைய விரும்பி உம்மை நாடி உமக்குத் தக்கபடி உம்மைத் துதித்தேன். என்னால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவரான தேவரீர் அடைவதற்கு மிகவும் அரியவையும் நான் விரும்புகின்றவைகளுமான வரங்களைக் கொடுக்க வேண்டும். கபடம் புரிதல் கூடாது' என்று வேண்டினார்.

பிநாகமென்கிற வில்லைத் தரித்தவரும் மனத்தினாலே நினைக்கமுடியாத உருவமுள்ளவரும் ரிஷிகளால் துதிக்கப்பட்டவருமான தேவதேவர் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு, தேவதைகளுள் தலைவராயிருக்கின்ற அந்த விஷ்ணுவின்பொருட்டுவரங்களைக் கொடுத்தார்.

பகவான், 'நாராயணரே! என் அநுக்ரஹத்தினால், மனிதர்கள் தேவர்கள் கந்தர்வர்கள் இவர்களைக் காட்டிலும் மனத்தினால் சிந்திக்க முடியாத பலம் ஸ்வரூபம் இவைகளோடு கூடிய



வராக நீர் ஆகப் போகிறீர். உம்மைத் தேவர்களும் அசுரர்களும் ஸர்ப்பங்களும் பிசாசங்களும்கந்தர்வர்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் ஸுபர்ணகளும் அவ்வாறே நாகர்களும் இன்னும் பற்பல ஜாதிகளில் தோன்றின எல்லாப் பிராணிகளும் ஸகிக்கமாட்டார்கள். உம்மை யுத்தங்களில் தேவனாக விருந்தாலும் ஒருவனும் ஜயிக்கமாட்டான். என் அனுக்ரஹத்தினாலே ஒருவனாவது உம்மை ஆயுதத்தினாலும் வஜ்ரத்தினாலும்நெருப்பினாலும்நீரினாலும் ஈரமானதாலும் உலர்ந்ததாலும் ஜங்கமத்தாலும் ஸ்தாவரத்தாலும் கையினாலும் காலாலும் கட்டையினாலும் மண்ணாங்கட்டியினாலும் எவ்விதத்தாலும் ஹிம்ஸிக்கமாட்டான். மேலும், யுத்தத்தை நீர் அடைவீராயின் என்னைக் காட்டிலும் மேற்பட்டவராவீர்' என்று கூறினார்.

பிறகு, சூலபாணியான ருத்திரருடைய அனுக்ரஹத்தினாலே இவை முதலான வரங்களைப் பெற்று அந்தத் தேவரே மாயையினால் உலகத்தை மயக்கிக்கொண்டு ஸஞ்சரிக்கிறார். அவருடைய தவத்தினாலே நரனென்று பிரஸித்திபெற்ற மகரிஷி தோன்றினார். இந்தத் தேவரோடு அர்ஜுனனை ஸமானனென்று எப்பொழுதும் நீ அறிவாயாக. பிரம்மா விஷ்ணு ருத்திரர் இவர்களுள் விஷ்ணு ஸ்வரூபிகளான இந்த நரநாராயணரிஷிகளிருவரும் மிகுந்த தவமுள்ளவர்கள்; உலக வியாபாரத்தை நடத்துவதற்கும் அஸுரர்களை நாசம் செய்வதற்கும் தர்மங்களை நிலை நிறுத்துவதற்கும் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கின்றனர். வித்வானே! மகாபுத்திமானே! அவ்வாறே செய்கையினாலும் பெருந்தவத்தினாலும் தேஜஸினாலும் வாக்குக்களாலும் நீ முழுதும் ஒத்தவனாக அந்த ருத்திரரிடமிருந்தே தோன்றியிருக்கிறாய். நாராயணர் போலவே கற்றறிந்தவனான நீ உலகம் முழுமையும் ஈஸ்வர மயமென்றே யறிந்து அவருக்குப் பிரியத்தைச் செய்யும் எண்ணத்தோடு நியமங்களாலே தேகத்தை இளைக்கச் செய்தாய். சத்துருக்களுடைய கர்வத்தைப் போக்குகின்றவனே! நிர்மலமான ஹவிஸைச் செய்து மகாபுருஷ ஸ்வரூபரான ஈஸ்வரரை ஜபஹோமாதிகளாலும் காணிக்கைகளாலும் நீ பூஜித்து வந்தாய். வித்வானே! அவ்வாறு, என்னால் பூஜிக்கப்பட்ட பூர்வ தேவர்மிக்க ஸந்தோஷமடைந்து உன்மனத்திலிருக்கும் அபீஷ்டங்களான வரங்களனைத்தையுங் கொடுத்தார். அவ்விருவர்களுக்கும் உனக்கும் பிறப்பு, செய்கை, தவம், யோகம் இவைகள் பரிபூர்ணமாயிருக்கின்றன. அவ்விருவராலும் ருத்திரர் லிங்கத்தில் அர்ச்சிக்கப்பட்டார். தேவதைகளுக்கெல்லாந் தேவரும் நினைத்தற்கரிய உருவமுள்ளவரும் ஒருவராலும் ஜயிக்கமுடியாதவரும் விஷ்ணுவுக்கு உத்பத்தி ஸ்தானமாயிருக்கின்றவருமான ருத்திரதேவர் உன்னால் யுகந்தோறும் விக்ரஹத்தில் பூஜிக்கப்பட்டிருக்கிறார். எவன் பிரபுவான ருத்திரரை ஸர்வரூபி யென்றெண்ணி

லிங்கத்தில் பூஜிக்கிறானோ அவனிடத்தில் ஆத்மயோகங்களும் சாஸ்வதமான சாஸ்திரயோகங்களும் நிலைபெற்றிருக்கின்றன. இவ்வாறு தேவர்களும் சித்தர்களும் பரமரிஷிகளும் பூஜித்துக்கொண்டு உலகத்தில் மேலானவரும் சாஸ்வதருமான ஸ்தாணுவைக் குறித்தே வேண்டுகிறார்கள். அப்படிப்பட்ட நீயோ ருத்திரபக்தன். கேசவரோ ருத்திரரிடத்திலிருந்து அவதரித்தவர். சாஸ்வதரான ஸ்ரீவாஸுதேவரே யஜ்ஞங்களால் பூஜிக்கத்தக்கவர். எவன் எல்லாப் பிராணிகளுக்கும் உத்பத்தி ஸ்தானமென்றே எண்ணி ப்ரபுவினுடைய லிங்கத்தை அர்ச்சிக்கிறானோ அந்தப்பக்தன்மீது அதிகமான பிரீதியை விருஷபத்வஜர் பாராட்டுகிறார்" என்று கூறினார்.

மகாரதரான துரோண புத்திரர் அவருடைய அந்த வார்த்தையைக் கேட்டு ருத்திரரை நமஸ்காரஞ் செய்தார். கேசவரையும் நன்கு மதித்தார். ஜிதேந்திரியரான அந்த அஸ்வத்தாமா ரோமாஞ்சங்கொண்டு வியாசரை வந்தனஞ் செய்து சேனையைப் பார்த்துப் போரினின்று ஓயச் செய்தார்.

---

# உண்மைத் துறவறம்.

(இலங்குன்றம், திரு, சே. நரசிம்ம சர்மா அவர்கள்)

பரந்த இந்நிலவுலகின் கண்ணே, பிறந்த மக்கள் அனைவருக்கும், அறம், பொருள், இன்பம், வீடு (தர்மார்த்த காம மோக்ஷம்) என்னும் நான்கு உறுதிப் பொருள்களென, ஆன்றோர் கூறியுள்ளது யாவரும் நன்கறிந்ததே. அவற்றுள், முதலாவதாக வரும் அறம் என்னும் பொருள் இல்லறமென்றும் துறவறமென்றும் இரு வகைப்படும். இல்லறமாவது ஒருவன் கற்புடைப் பெண்ணொருத்தியை மணந்து, ஒழுக்கந் தவறாது, இயன்ற அளவு தருமம் புரிதல், பெரியோர்களுக்குக் கீழ்ப்படிதல், துறவிகளை ஆதரித்தல் ஆகிய நல்லறங்களைத்தினந்தோறும் செய்து இனிதுவாழ்தலாம். துறவறமென்பது, "இல்லமிளமை யெழில் வனப்பு மீக்கூற்றஞ், செல்வம் வலியென் றிவையெல்லாம்—மெல்ல, நிலையாமை கண்டு நெடியார் துறப்பர், தலையாயார் தாமுய்யக் கொண்டு".

என்கிறபடி இவ்வுலகப் பொருள்களின் நிலையாமை கண்டு, பிறப்பு துன்பத்தையே விளைவிக்குந்தன்மைவாய்ந்ததென்றும், அப்பிறப்பினை ஒழித்தலே தன் கடமையென்றும், கொண்டு பற்றினை அறவே ஒழித்து, மறுமைப் பயன் கருதித்தவஞ் செய்யும் விழுமிய நெறியாம். இனி, அத்தகைய துறவறத்தின் பெருமைபற்றிச் சிறிது ஆராய்வது பொருத்தமாகும். துறவறத்தின் பெருமை அளவிறந்தது.



"அறந்தான்இயற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தான் அவனிற் சதகோடி யுள்ளத்துறவுடையோன்
மறந்தான் அறக்கற்றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை யென்சொல்லுவேன் கச்சியேகம்பனே"

என்று பட்டினத்தடிகளும்,

"பிறப்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
துறப்பதாம் தூநெறிக்கட் சென்று"

என்று ஔவைப் பிராட்டியாரும்,

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று"

என்று தமிழ் வேதமும், கூறுவனவற்றை நோக்கின், துறவறத்தின் பெருமை நன்கு விளங்கும். மேலும்,

"பெண்ணாகி வந்தொரு மாயப் பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடித்தடத்துப்
புண்ணாங் குழியிடைத் தள்ளியென் போதப் பொருள் பறிக்க
எண்ணாதுனைமறந் தேனிறைவா கச்சி யேகம்பனே"

என்றிவ்விதமாகப் பலவாறாய், இல்லாளுடன் கூடி அனுபவிக்குமின்பத்தை, வெறுத்துப் பேசியிருப்பதை நோக்கின், 'இல்லறமல்லது நல்லறமன்று' என்று கூறியிருப்பது உபசார வார்த்தையேயாகும் என்றே கருதவேண்டியிருக்கின்றது. அதுடன், இல்லறநெறி தவறாதிருப்பவன் அடையக்கூடியது சுவர்க்காதி பதவிகளேயாம். சொர்க்க முதலியன சிறந்தவாழ்விலேசேர்ந்தவையாகா. ஏனெனில் சுவர்க்கத்திலேயும், 'நோயுண்டனங்களுண்டு நோய்கட்கெல்லாந் தாயான, காயமுண்டு கைதொழவேண்டுனருமுண்டு கற்பத்தே, மாயுந்தன்மை யுண்டென்றால் வானோர்க்கென்ன வளனுண்டே'? என்று சொல்லப்படுகிறபடியால், அவ்வாழ்வு பெரிதல்ல; ஆகவே, துறவறமே மேலானது என்பது ஒருதலை. விரிக்கிற் பெருகுமாகலின், விட்டு மேலே செல்லுவோம்.

அகம், புறம் எனப்படும் முறையே உடம்பு, செல்வம் ஆகிய இவ்விரண்டின்கண்ணே உள்ள பற்றதனை அறவே ஒழித்தலே உண்மைத் துறவெனப்படும். உலகப்பற்று ஒழிந்தவிடத்து பிறப்பும் ஒழியும்.

"நன்றாய்ஞானங் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த்
தொன்றாய்க்கிடந்த வரும்பெரும்பாழ் உலப்பிலதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்ப துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்
அன்றேயப்போதே வீடு மதுவே வீடுவீடாமே."

என்பதும், இதையே உறுதிப்படுத்தும்.

நான், எனது என்னும் செருக்கொழிந்து, "விடுவிட வேண்டியவைகளை யெல்லாம் ஒருங்கே, அடு ஓசை முதலிய ஐம்புலன்களையும்" என்றவாறு ஐம்பொறிகளை வாயிலாகவுடைய ஐம்புலன்களும் அவிந்து, இறைவன்றிருவருளை நினைந்துருகிப் பிறவாமையாகிய பெறும்பேறு பெறுதற்குத் தவம் புரிதலே, பற்றினை ஒழித்தலென்னப்படும். அவ்வாறு, உயரிய துறவறத்தைப் பூண்டொழுகிய பெரியார் "பிறப்பென்னும் பேதைமைநீங்கிச் சிறப்பென்னும்செம்பொருள் காணும் மெய்யறிவு" பெறுவர். இத்தகைய மெய்யறிவு பெற்றோர், உலகிலனைவரும் கண்டு வணங்கத் தக்க பெரியோராய் வாழ்ந்து வீடுபெறுவர் என்பதே ஆன்றோர் துணிபு.

எப்போதும் மகிழ்வுற்றிருத்தல், தீங்கிழைத்தவனுக்குப் பொறுமையுடன் நன்மை புரிதல், மனத்தைக் கவரத்தக்க பொருள்கள் எதிரிலிருந்தாலும் அவைகளில் விருப்பமில்லாதிருத்தல், பிறர் பொருளை அபகரியாதிருத்தல், சரீரசுத்தியுடனிருத்தல், பெண்களிடத்தில் ஆசை வையாமலிருத்தல், சாத்திர உணர்ச்சி கைவரப் பெற்றிருத்தல், ஆத்மஞானபரனாயிருத்தல், பிறர் மனம் நோகத்தக்க தீய செய்கைகளைச் செய்யாதிருத்தல், அப்படிச் செய்பவர்களிடத்துக் கோபங்கொள்ளாதிருத்தல், உண்மை மொழிதல் முதலியன உண்மைத் துறவிகளுக்கின்றியமையாத சிறந்த குணங்களாகும். தான் கொண்ட ஆசானால் உபதேசிக்கப்பட்டுத் தனக்குரிய நெறி தவறாமல் எப்போதும் ப்ரம்மத்யான பரனாயிருத்தல், தனித்திருத்தல், நகர கிராமங்களிலே தங்காதிருத்தல், உலகத்தாருடைய உணவுப் பொருள்களை விரும்பாதிருத்தல், பிரம்மஞான நூல்களை ஓதல் முதலியன நித்தியானந்த வாழ்வினைப் பெறுதற்குரிய தருமங்களாகும். (தொடரும்)

---

## சிவநேசனுக்கு வாழ்த்து.

(காரைக்குடி திருவாளர், ராம. உ. ராமசாமி செட்டியார் அவர்கள்)

சீர்தரு பலவான் குடிநகர்த் தலைவர் திகடரு குமாரக ணேசர்
சார்வுற நிறைந்த வருளினாற் றிங்கட் டாழ்வுறு முறைவெளி வந்து
பாரினி லுலாவு மாசிவ நேசன் பகர்பொரு ளாய்ந்திடு மேலோர்
நேர்பெறு மின்மை யின்பமுஞ் சுகித்து நீடருட் சுகத்தினில்
[வாழ்வார்.

உ

திருத்தென்குடித் திட்டைத்

# திருவிழாச் சிறப்பு.

(208-ம் பக்கத் தொடர்ச்சி)

நன்கு நடைபெறுவதாக; இறைவன் திருவருளால் நடைபெறும் தருணாலய கும்பாபிஷேகம் சிறப்புறுக; வித்தியாசாலை பலர்க்கும் பயனுறுத்திச் செவ்வன் நடைபெறுக; மணிவாசக சங்கத் திருவிழா இனிது நிறைவேறுக; நிகழ்ச்சிகள் யாவும் புகழ்ச்சியாய் நிறைவெய்திப் புண்ணியம் கைவரப்பெற்றுச் சுகவாழ்வுறுக; சிறப்பாக நடைபெறும் வண்ணம் ஸ்ரீ உலகநாயகி சமேத பசுபதிநாதரைப் பிரார்த்திக்கிறோம். என்னும் வாழ்த்துகள் வரைந்துய்த்து மகிழ்வூட்டினர்.

அனைவர்க்கும் 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் மனமார்ந்த வந்தனங் கூறினர்.

மகாபிடேகம் மாண்புற நடைபெற்றது. அன்றிரவு விநாயகர், சோமசேகரர், வல்லிதேவசேனாசமேதராக குமரவேள், சண்டேசர் ஆகிய கடவுளர், திருவாபரணங்களாலும், மலர் மாலைகளாலும் திவ்யாலங்கார வைபவத்துடன் திருவுலாப் போந்து திருக்கோயில், திருக்குளமாதிய திருவீதிவலம் வந்தருளினர். மங்கல வாத்தியங்களும் ஆரியம் தென்றமிழ் ஆகிய இருபெருமறைகளும் முழங்கின. ஆயிரக்கணக்கான பலஅன்பர்கள்கொண்டாடி அகமிகமகிழ்ந்தனர்.

யாகசாலைக்கு மேள தாள விருதுகளுடன் சிவாசாரியர்களை வரவேற்றும் யாக பூஜைக்குரிய பூஜா திரவியங்களைக் கொண்டு சேர்ப்பித்தும், சிவநேசத்திருவாளர்களான:-அமராவதிபுதூர், வயி. நாக. ராம. அ. வேங்கடாசலச்செட்டியார், தேவகோட்டை, தி. அ. சு. அ. சுப்பிரமணியன் செட்டியார் ஆகிய இருவர்களும் முன்னின்று மிக மேன்மையாக கும்பாபிடேகத்தை நடாத்துவித்தனர். மகாபிடேகத்தை திருவாளர்களான:— கோநகர், சு. மு. மகாதேவமுருகப்ப செட்டியார், அரு. நாராயணன் செட்டியார், தேவகோட்டை வெ. கரு. சோம. சோமசுந்தரம் செட்டியார், பலவான்குடி, அரு. ப. நாராயணன்செட்டியார் ஆகியவர்கள் மேற்கொண்டு நன்றாற்றினர். திருவுலாவை திருவாளர்களான:—விசுவநாதபுரம், பழ. ப. அ. அண்ணாமலை செட்டியாரும், தேவகோட்டை, வ. பெரி. வ. நா. பெ. மு. முத்தைய செட்டியாரும் சிறப்புறச் செய்வித்தனர். மணிவாசக சங்கத்தை திருவாளர்களான:—புதுவயல், வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியாரும், தேவகோட்டை, பாலகவி, இராம

நாதச் செட்டியாரும் மாண்புடன் கூட்டி நடாத்தினர். விருந்தினர்களை, திருவாளர்களான:— பலவான்குடி பெ. அ. சித. சிதம்பரம் செட்டியார், வெ. சு. முத்துவள்ளியப்ப செட்டியார், கோனபட்டு, கி. நா. ராம. நாராயணன் செட்டியார், அரு. பெரி. ராம. இராமன் செட்டியார், ஆத்தன்குடி ராம. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் ஆகியவர்கள் வரவேற்றுபகரித்தனர். வேண்டும் பொருள்களை தனவணிக அன்பர் பலர் பண்டகசாலையிற் சேகரித்து உரியமுறையாற் பரிபாலித்து எடுத்து வழங்கி யுபகரித்தனர். உள்ளூர் வாசிகளிற் பலர் அன்புடன் முன்வந்து ஊக்கமாக காரியங்களிற் கலந்து கொண்டனர். வரவு செலவு கணக்குகளை கோனபட்டு, சிவாச் செட்டியாரவர்களின் குமாரர் திருவாளர் பழ. ப. பழநியப்பசெட்டியார் கைக்கொண்டு கண்ணியமாக நடாத்தினர். எல்லாவகையாலும் திருவிழா சிறப்பாக நிறைவேறியது.

யாவர்க்கும் எல்லா நலங்களும் மிக்கோங்கவும், புதிய திருப்பணி இனிதே நிறைவேறி மகா கும்பாபிடேகமும் திருவிழாவாதியனவும் மகோன்னதமாக நடந்து சிறப்புறவும் யாவர்க்கும்மேலாம் அளவிலாச் சீருடைய இறைவர் பேரருள் புரிவாராக.

---

# மதிப்புரை மஞ்சரி.

நான் கண்டதும் கேட்டதும்:— இது, சென்னை, மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதி சிறுவர்களும் எளிதில் படித்துணரும் படியாக இலகுவான நடையில் பெரிய எழுத்தில் பதிப்பித்து கிரௌன் 18 பவுண்டு கிளேஸ் 1-க்கு 16-ல் பன்னிரு பாரங் கொண்ட புத்தகமாக வெளியிட்டது. தமிழ் தந்தவளம், வறுமைப் புலி, விதியின்திறம், லாடுலட்டுச் சுமை, பங்கா இழுத்த பாவலர், பரிவட்டத் தியானம், மாணங்காத்த மைந்தர், பரம்பரைக் குணம், வெங்கனூர்க் கோயிற் சிற்பம், மருதபாண்டியர், முள்ளால் எழுதிய ஓலை, டிங்கினனே, என்னும் பன்னிருவரலாறுகளைத் தன்னகத்தே கொண்டது. முற்றும் படித்தேன். படிக்கப் படிக்க மனத்திற்கு உருக்கமும் அன்பும் இன்பும் உண்டாகின்றன. ஆண், பெண், இருபாலாரும் பண்டிதர்களும் பிறரும் படித்துப் பயன் பெறத் தக்க இப்புத்தக முகப்பில் ஐயரவர்களின் திருவுருவச் சித்திரமும் திகழ்கின்றது. இப் புத்தகத்தின் விலை அணா ஆறு. சென்னை திருவேட்டீசுவரன்பேட்டை தியாகராஜ விலாசத்தில் ஐயரவர்களிடம் பெறலாம்.



திருமயிலை யமக வந்தாதி மூலமும் பழைய உரையும்:—இது தொண்டை நாட்டில் என்பு பெண்ணுருவாகக் கண்ட திருத்தலமாகிய மயிலாப்பூரில் திருக்கோயில் கொண்டருளும் கபாலீசுவரர் மீது இற்றைக்கு இருநூறு ஆண்டுகட்கு முன்னர் தாண்டவராயக் கவிராயர் இயற்றியது.

இதனை சென்னை மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் ‘சிவநேசன்’ அச்சுக்கூடத்திற் பதிப்பித்து சிவநேசனுடன் சேர்த்து வெளிவரச் செய்தார்கள். இப்பெற்றி சிவநேசச் செட்டியாரின் அன்புக்கெளியவராகிய திருமயிலைநாதரின் திருவருளேபோலும். பொருட் செறிவுள்ள இந்நூலையும் இதேபோல இன்னும் பன்னூல்களையும் என்பால்தந்துபார்க்கவும்பதிப்பிக்கவும் செய்யும் ஐயரவர்களின் பெருங் கருணையானது என்னையும் அவர்களுடைய நன்மாணாக்கர் குழுவில் சேர்க்கும் என்னும் நம்பிக்கையையுண்டுபண்ணுவதாகவிருக்கிறது.

இந்நூல் முற்றும் முடிந்து புத்தகமாகிக் கொண்டிருக்கிறது. இந்நூலின் சிறப்பும் இந்நூலிற் காணப்பெறும் வேறு சிறப்புகளும் பலவாம். அவைகள் என்னால் எடுத்து விளக்குதற்கரியன. அவைகளை முற்றும் விளக்கி ஐயரவர்கள் எழுதியுள்ள முகவுரை இதனோடிணைத்திருப்பதால் அதைப்படித்து அன்பர்கள் இதன் அருமை பெருமைகள் முழுதும் அறியலாம்.

தமிழுக்கு அனுதினமும் அயராதுழைத்துத்தமிழை வளர்த்து தமிழ்த்தாயெனப் போற்றப்பெறும் ஐயரவர்கட்குத் தமிழுலகம் என்றும் மாறாதுநன்றி பாராட்டுங் கடப்பாடுடையதாகும். நல்ல கிளேஸ் பிரிண்டிங் டிம்மி 1-க்கு 8 முகவுரை முதலியவற்றுடன் 10 பாரங் கொண்ட இப்புத்தகத்தின் விலை அணா ஆறு. சென்னை திருவேட்டீசுவரன்பேட்டை தியாகராஜ விலாசத்தில் ஐயரவர்களிடம் பெறலாம்.

ஈழகேசரி:— இது யாழ்ப்பாணம் மயிலிட்டி தெற்கு “திருமகள் நிலையத்தில்” செந்தமிழ்ச் செல்வர், நா. பொன்னையா அவர்களை ஆசிரியராகக் கொண்டு, ஒவ்வொரு ஞாயிறுதோறும் வெளிவரும் வாரத்தாள். உலக முன்னேற்றத்திற்கு நல்லகல்வியும் ஒற்றுமையும் வேண்டுமென்னும் நன்னோக்கங்கொண்டது. சைவத்தையும் தெய்வத்தையும் பெரியாரையும் மெய்ம்மையாகப்போற்றுவது. இதன் தாது ஆண்டு மடல் வரப்பெற்று மகிழ்வுற்றேம்.

? முகப்பில் பாரதமாதா வெற்றிக்கொடி கொண்டு மிளிர்கின்றாள். உள்ளாக முதலில் நடராஜராஜர் திருவுருவமும் அதன் தத்துவங்களை விளக்கும் பெரியார்களின் திருவாக்குக்களும் திகழ்கின்றன. அகத்தியமாமுனிவரின் அழகிய திருவுருவம் ஒருபால் மிளிர்கின்றன. காண்டொறுங் காண்டொறும் மனம் இன்புறுகின்றது. சித்தாந்த சிகாமணி காசிவாசி செந்திநாதய்யரவர்களின் சிவவேடப் பொலிவு செப்புந்தரமன்று. திருக்கோணேஸ்வர ஆலயம், திருக்கேதீஸ்வரர் ஆலயம், பலவேறு மண்டபம், துறைமுகம், பூந்தோட்டம் ஆகியவைகளின் நிழலுருவங்களும், மந்திராதேவி, அரசர் பெருமான், புத்தபகவான் வித்துவப்பெரியார்கள், தத்துவப்பெரியார்கள், ஞானவீரர்கள், கானவேடுவர்கள், தேசியத் தலைவர்கள், பிரமுகர்கள், வரியவர்கள், முதலானோரின் உருவங்களும் பிறவும் வேறு வேறு பல உருவங்களும் தன்னகத்தே கொண்டு நல்ல வாழ்த்துரை, வரலாற்றுரை, கட்டுரைகளையும் தாங்கி வந்துள்ள இம்மடல் பார்க்க அழகும் படிக்க இனிமையும் வாய்ந்தது. மிக்க பயனுடையது.

தாதுவருஷ வாக்கிய பஞ்சாங்கம்:— யாழ்ப்பாணம் கொக்குவில், இரகுநாதையர் சோதிட பரிபாலன மடத்திலிருந்து எகூ ஆண்டுகளாக வெளிவருவது. வருடம், மாதம், தேதி, திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணங்களையும், விரதாதி நிரூபணங்களையும் விளக்குவதுடன் நன்முகூர்த்தங்கள், விதிவிலக்குகள், பலாபலன்களை யெல்லாம் நன்குவிளக்கிச் சிறிதளவு சோதிடப்பயிற்சியுடையாரையும் பெரியசோதிடராக்கும் நல்ல ஆசான் போன்று சோதிட நூல்களிலுள்ள பல ஆதாரங்களுடன் 135 விஷயங்களைக் கொண்டு பிரீண்டிங் டிம்மி 1-க்கு 8-ல் 13 பாரங்கொண்ட புத்தகமாக பிரமஸ்ரீ இரகுநாதையரவர்கள் தத்தபுத்திரர், சிவராமலிங்கையரவர்களாலும், பௌத்திரர், ச. பஞ்சாக்ஷர ஐயரவர்களாலும் கணிக்கப்பெற்றது. இதன் விலை அணா நான்கு. இப் பஞ்சாங்கம் பல ஆண்டுகளாக எமக்கு வந்து எம்மை மகிழ்விக்கின்றது.

சித்தன்:—இது கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், சுகாதாரம், வைத்தியம் முதலிய விஷயங்களையும், அறிவு வளர்ச்சிக்கேதுவான பல கட்டுரைகளையும், இன்பக் கதைகள், உலக அதிசயங்கள், பெரியாரின் ஜீவிய சரிதைகள், செந்தமிழ்ப் பாக்கள், பெண் மக்கள் பகுதி, நாடகம், சினிமா இன்னும் பல அறிய விஷயங்கள் பொதிந்து வெளிவரும் மாதப் பத்திரிகை. இதன் ஆசிரியர் டாக்டர், C. P. சாமி. வருடசந்தா அணா 8. தனிப்பிரதி அணா 1. மானேஜர் 'சித்தன்' பழநி S. I. விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

---



ச:— "தேவர்களும் அஸுரர்களும் சமுத்திரத்திலிருக்கும் பெரிய ஆமையைப் பார்த்து, 'நீ இந்த மலைக்கு ஆதாரமாக இருக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டனர். அந்த ஆமையும், 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி மந்தர மலைக்கு முதுகு கொடுத்தது. அந்தக் கூர்மத்தின் முதுகிலிருந்த அந்த மலையை இந்திரன் வச்சிராயுதத்தினால் மேலே அமுக்கினான்.........வாஸுகியின் ஒரு கோடியாகிய முகத்தை அசுரசிரேஷ்டர்கள் பிடித்துக்கொண்டனர். .........நாராயணர் எங்கே யிருந்தாரோ அந்த வாலின் பக்கத்தில் தேவர்களெல்லோருஞ் சேர்ந்து நின்றனர்......கடைந்தபோது.... விஷம் உண்டாயிற்று. தேவர்களும் அசுரர்களும் விஷத்தால் தகிக்கப்பட்டு, பயந்து வ்யஸன மடைந்து அவ்விடம் விட்டோடினர்.... பிரம்மா....ருத்ர மூர்த்தியைத் தியானஞ் செய்தார்...ருத்திரமூர்த்தி உலகங்களுக்கு ஹிதஞ் செய்யக் கருதி.........அந்த, விஷத்தைப் பானஞ் செய்தார்" என்பது பாரதம் ஆதி 18-வது அத்தியாயம். 'விஷத்தைத் தேவர்கள் கண்டு...அருகிருந்த.......பதுவானிடத்தில் முறையிடாமல்......கயிலாசத்திலிருந்த சிவனிடத்தில்......முறையிட்டார்கள்' என்பது கூரேச விஜய விஷபானக்கட்சிக் குறிப்பு. நாராயணர் தலைவராக விருந்திலர்; வாசுகியின் வாலைப் பிடித்துக் கொண்டு தேவருடன் சேர்ந்திருந்தனர்; உருத்திரர் அசுரரிடஞ் சேர்ந்திலர்; அவர் அப்போது கயிலாசத்திலிருந்தார்; விஷபானஞ் செய்தது அவரே யென்பன அவற்றால் விளங்குகின்றன.

2. ஆ:—விஷ்ணு தம் ஹுங்காரத்தால் அவ்விஷவேகத்தை யடக்கினார். அங்ஙனம் வேகம் அடங்கிய விஷத்தைச் சிவன் சாப்பிட்டது அதிசயமன்று.

ச:—விஷ்ணுவே அவ்விஷத்தை யுண்டாரென்றும் அதனாலவருடம்பு முழுதுங் கருகிய தென்றும் பூர்வபட்சஞ் சொல்லும். 'விடமெலா முண்டதா லெம் விண்டுமெய் கருமை யானான்' என்றது கூரேச விஜயம். அவர் ஹுங்காரத்தால் அவ்விஷம் வேகமடங்கியது உண்மையானால் அவர் அதைத் தின்றதுங் கருகி அழகிழந்தது தான்புறவேண்டாம். 'வருகனல்வல் விடந்தாக்கி மாயவன் வெண்ணிற மேனி - கருகினனன்று தொடங்கிக் கரியனெனப் பெயர் பெற்றான் - திருமலரோனுடற் பொன்மை தீர்ந்துபுகை நிறமுற்றான் - வெருவுதிசைக் கிறையோரும் வேற்றுரு வெய்தியழுதார்' என்ற காஞ்சிப் புராணத்தால் அவ்விஷம் வெளியிலிருந்தே தன் வேகத்தால் விஷ்ணுவைக் கருக்கிக் கிருஷ்ணனாக்கியது தெரிகின்றது. எப்படியும் அவ்விஷவேகம் விஷ்ணுவின் ஹுங்காரத்தால் அடங்காமை வெளி. ஆகவே, வேறெவ்வகையானும் வேகமடங்காத அவ்விஷத்தையே சிவபிரானருந்தித் தம்பெருமையை வெளிப்படுத்தினாரென்க.

3. ஆ:— விஷ்ணு அவ்விஷத்தின் பெரும்பகுதியைத் தாமே யருந்தி எஞ்சிய சிறு பகுதியையே சிவனிடங் கொடுத்தார். அச்சேஷத்தை யுண்ட சிவனுக்குச் சிரேஷ்டத்துவஞ் சித்தியாது.

ச:— பெரும் பகுதியை யுண்ட பெருமாள் சிறு பகுதியை மிச்சம் வைக்கக் காரணமென்ன? ஒரு பகுதியால் உடல் கருகியதைக் கண்டதும் மற்றொரு பகுதியால் உயிருங் கருகி மரணமேற்படுமென்று பயந்தே அவர் அது செய்திருத்தல்வேண்டும். அப்படியானாலும் சிவபிரான் அச்சேஷத்தைச் சாப்பிட்டு அவ்விஷ்ணுவுக்கும் ஏனையோர்க்கும் உயிர்ப்பிச்சை தந்தாரென்பது தப்பாது.

4. ஆ:—விஷ்ணு உண்டு மீந்த சேஷத்தைச் சிவன் வேண்டிப் பெற்றானென்பதே தீர்வு.

ச:— விஷ்ணு விஷத்தை யுண்டு உடல் கருகித் துடித்ததைச் சிவபிரான் பார்த்திருந்தும் அவ்விஷத்தைத் தாமும் பானம்பண்ண ஆசைப்பட்டாரென்பது பொருந்தாது.

5. ஆ:— 'கேசி விஷஸ்ய பாத்ரேண யத்ருத்ரேணாபிபத்ஸஹ' என்ற சுருதி மயிரழகாற் கேசியென்ற பெயரையுடைய விஷ்ணு விஷத்தை ருத்ரனாகிய பாத்திரத்தால் உண்டாரென்று காட்டுகிறது. உருத்திரனை ஒரு பாத்திரமென்றே அது குறிப்பிட்டது காண்க.

ச:— கேசம் - ரோமம். கேசி - ரோமத்தை யுடையவன். எல்லாருடைய ரோமங்களையும் போன்றதே விஷ்ணுவினுடைய ரோமமும். நரை மயிரும் அவர் தலையிலுண்டு. ஆனால், சிவபிரானுடைய ரோமம் வெகுவிதமான விசேஷங்களை யுடையது. ஆகையாற்றான் அவர் ஹிரண்யகேசி ஊர்த்வகேசி வ்யோமகேசி யென்றெல்லாம் அழைக்கப்பட்டார். இன்னும் 'உலகத்தில் சூரிய சந்திரர்களுடைய பிரகாசிக்கின்ற காந்திகள் கேசம் என்று பெயருடையவை. அவைகள் முக்கண்ணரிடத்தில் நிலைபெற்றிருப்பதால் அவர் வ்யோம கேசர் என்று சொல்லப்படுகிறார்' என்று அவரது வ்யோம கேசநாமத்துக்குத் துரோணம் 203-வது அத்தியாயம் வேறு பொருளுங் கண்டுளது. ஆகவே அச்சுருதியிலுள்ள கேசி பதம் சிவபிரானையே குறிக்கிறது. அதிலுள்ள ருத்ரபதம் ஆலால சுந்தரரைச் சுட்டும். அவர் சிவபிரானின் பிரதிபிம்பமாகலின் அங்ஙனம் உபசரிக்கப்பட்டார். அவர் விஷத்தைச் சுமந்து வந்ததாற் பாத்திரமானாரென்க. பூர்வபட்சம் ஹ்ருஷீகேச நாமத்துக்கும் வ்யோமகேச நாமத்துக்கும் போற் பொருள் விரிப்பதுண்டு. விஷவேகத்தால் விஷ்ணுவுடல் வெந்து கருகிய பிறகும் அப்பதம் அவருக்கு அவ்வருத்தத்தோடு பொருந்துவ தெங்ஙனம்? ஒருக்கால் விஷ்ணு வெள்ளையா யிருந்தகாலத்தில் அவருக்கு அந்த ஹ்ருஷீகேசநாமம் பொருந்தி யிருக்கலாம்.



6. ஆ:— விஷவேகத்தால் விஷ்ணுவுடம்பு கருகியது இழிவாயின் சிவன் கண்டங் கருகியதும் இழிவாகும்.

ச:— விஷ்ணு வுடம்பு பிராகிருதம். ஆகலின் அது இரத்தம் மாமிசம் கருமயிர் நரைமயிர் காதுக் குறும்பி முதலிய அசுத்தங்களெல்லாம் நிறைந்தது. 'வன்கபான் மிசை - யூறுசெங்குருதியானிறைத்த காரணந்தனை', 'புண்புரிந்த வாகத்தான்' என்பன பிரபந்தம். 'திருமாலானவர் ஒன்று வெண்மையும் மற்றொன்று கருமையுமாகிய இரண்டு கேசங்களைத் தலையிலிருந்தெடுத்தார்' என்பது பாரதம் ஆதி 214வது அத்தியாயம். 'விஷ்ணுவின் காதுக் குறும்பியிலிருந்து பிறந்து' என்பது ஸபா 44வதும், 'பிரமதேவருக்குப் பிதாவும் மஹாத்மாவுமான புருஷோத்தமர், தம்முடைய கர்ணமலத்தினின்று உண்டான......மதுவென்கிற மஹாஸுரனையும்... கொன்றார்' என்பது பீஷ்மம் 67வதும் அத்தியாயங்கள். விஷம் அத்தகைய வுடம்பிற் கலந்து அதனைக் கருக்குதல் விஷ்ணுவுக்கு இழிவேயாகும். சிவபிரான் திருமேனி ஞானமயம். ஆகலின் அது பளிங்கு போன்றது. விஷம் அதனைப் பாதிக்க ஏதுவொன்றுமில்லை. விஷம் நீல வண்ணம். அது அப்படிக மிடற்றில் நின்று தன்னிறத்தை வெளியிற் காட்டிற்று. அவ்வளவே. மேலும் வேதத்தில் விஷத்தாலான நீலகண்டம் வந்திக்கப்பட்டதுபோன்று விஷத்தாலான கரிய மேனி வந்திக்கப்படவில்லை. விஷத்தாற் கருகிய மிடறுடையானென்று சிவபிரானைத் துதிக்கும் 'பெருகும் புனலண்ணாமலை பிறை சேர்கடனஞ்சைப் - பருகுந்தனை துணிவார் பொடியணிவாரது பருகிக் - கருகும் மிடறுடையார் கமழ்சடையார் கழல் பரவி - யுருகும் மனமுடையார் தமக்குறு நோயடையாவே' என்ற தேவாரம்போல் விஷத்தாற் கருகியவுடலானென்று விஷ்ணுவைத் துதிக்கும் பிரபந்தமுண்டா?

7. ஆ:— விஷ்ணுவின் மந்திரத்தைச் செபித்துச் சிவன் விஷமுண்டான்.

ச:— விஷ்ணுவே விஷவேகத்தாற் கருகியது பிரத்தியக்ஷம். ஆகலின் அவர் மந்திரம் சிவபிரானைக் காத்ததென்பது வெறுஞ்சொல்.

8. ஆ:— கருடமந்திர ஜபத்தாற் சிவன் விஷத்தைத்தின்றான்.

ச:— சிவபிரானே ஹநுமானாக வவதரித்தாரென்று பூர்வபட்சஞ் சொல்லும். அந்த ஹநுமான் கருடனைக் கர்வபங்கஞ் செய்தானென்ற கதையும் அதற்குடன்பாடு. அவதார மூர்த்தியாகிய ஹநுமானால் அவமானமடைந்த கருடனின் மந்திரத்தை மூல்மூர்த்தியாகிய சிவபிரான் செபித்தாரென்பது சிரிப்புடையதே. 'அஸுரச்ரேஷ்டனான காலநேமி........வருணன்......முதலான

தேவர்களைத் தன் வன்மையினால் ஜயித்து அவர்களின் வேலைகளை யெடுத்துக்கொண்டான்' என்ற ஸபா 51வது அத்தியாயத்தாலும், "கார்த்தவீரியார்ஜுனன்...ஸமுத்திரத்தின் மீது...பாணங்களை.... எய்தான். ஸமுத்ரராஜன் அவனுக்கு நமஸ்காரஞ் செய்து கை கூப்பிக்கொண்டு, 'வீரனே! பாணங்களை விடாதே......பிரபுவே!... அபயங்கொடு' என்று கேட்டான்" என்ற ஷெ 96வது அத்தியாயத்தாலும் வருணனது இழிநிலைவிளங்குகிறது. அந்தப் பர்வத்து 9-வது அத்தியாயம் 'வினதையின் புத்திரரான கருடனும் அவர் வேலைக்காரரும்......வருணனைச் சலிப்பின்றிப் பணிகின்றனர்' என்பதால் சாமானியனாகிய வருணனைப் பணியும் அதிசாமானியனே கருடனென்பது விளங்கும். அதன் 51வது அத்தியாயம் 'கால நேமி........கருடனை......அடித்தான்......கருடன் களைத்திருந்ததைக் கண்டு' என்று கருடன் சாமார்த்தியத்தை இவ்வளவுதானென்று அளந்தும் விட்டது. 'கருடன்........சிறகுகளினாலும் மூக்கினாலும் நகங்களினாலும் கிருஷ்ணனையும் அர்ஜுனனையும் அடிப்பதற்கு ஆகாயத்திலிருந்து இறங்கினான்' என்ற ஆதி 253வது அத்தியாயம் கருடனுக்குத் தன் தலைவனையும் எதிர்க்கும் மயக்கமுஞ் செருக்கும் உள்ளென்கிறது. "மகாதேவர் அவர்கள்மேல் கிருபை வைத்து, 'அமிருதத்தைக் கொண்டுவரும் கருடனை உங்கள் தவத்தினால் உண்டாக்குவீர்கள்' என்று சொன்னார்" என்ற அநுசாஸனம் 45வது அத்தியாயத்தில் கருடஜனனமே சிவாநுக்ரஹலப்தமென்பது தெரிகிறது. இன்னவியல்புடைய கருடனின் மந்திரத்தைச் சிவபிரான் செபித்தாரென்பது கீழ்களின் பேச்சேயாகும்.

9. ஆ:— இரணியன் ஏவிய அட்டநாகங்களாற் பிரகலாதர் கடியுண்டும் அவ்விஷத்தாற் செத்திலர். அஃதறிந்தோர் சிவன் ஒரு நாக விஷத்தைத் தின்றானென்பதை விசேடமாகக் கூறார்.

ச:—பிரகலாதன் விஷ்ணுவினம்சம். 'திருமால் புவிமேற் றனது கலையாலே', 'கனகன் புதல்வ னெனவுலகங் கருதும் பிரகலாதனப்பேர் - வனைய விருந்தனன்று' என்பதும், 'கதிரவன் மண்டலச் சோதி யநந்த மெனுந் தன்கலையோர் கலையினாலே - வதிபிரகலாதனை யிரணியற்கு மைந்தனென வகுத்தான்' என்பதுங் கூரேச விஜயம். விஷ்ணு முழுப்பொருள். பிரகலாதன் அதிலொருகூறு. ஆலால விஷத்தை விஷ்ணு தின்றாரென்பதும் அதனால் அவருடம்பு கருகிக் கெட்டதென்பதும் பூர்வபட்சம். அட்டநாக விஷத்தாற் பிரகலாதனுடம்பு கெடவில்லை யென்றும் அது சொல்லும். அருகிருந்தவர்களும் பாதிக்கப்பட்டிலர். அங்ஙனம் கூற்றுப் பொருளையும் ஹிம்சியாத அட்டநாக விஷத்தினும் முழுப் பொருளையே ஹிம்சித்த ஆலால விஷம் பல் கோடி மடங்கு கொடியதென்பது நன்கு போதரும். ஆகவே, தன்வெளிப்பாடு மாத்திரத்தில் அரி



பிரமாதி ஸமஸ்த தேவர்களையும் வாட்டிப்பீடித்த அவ்வாலாலத்தைச் சிவபிரான் நுகர்ந்தது பெரு விசேடமேயாமென்க. 'த்ரைலோக்யம் மோஹிதம் யஸ்ய கந்தமாக்ராய தத்விஷம் | ப்ராக்ரஸல் லோகரக்ஷார்த்தே ப்ரஹ்மணோவசநாச்சிவ: | ததார பகவாந் கண்டே மந்த்ர மூர்த்திர் மஹேச்வர: | ததாப்ரப்ருதி தேவஸ்து நீலகண்ட இதி ச்ருதி: |' (மூன்று லோகங்களும் அவ்விஷகந்தத்தால் மோகமடைந்தன. லோகசம் ரக்ஷணார்த்தம் பிரமாவின் பிரார்த்தனையால் மந்திர மூர்த்தியும் மகேசுவரரும் பகவானுமாகிய சிவபிரான் அவ்விஷத்தைத் தம் கண்டத்திற்றரித்தார். அதுமுதல் அவர் நீலகண்டரானார். இது சுருதி) என்பது பாரதம்.

10. ஆ:— விஷத்தைப் போதைக்காகப் பானம் பண்ணுஞ் சாம்பிரதாயம் சித்தர்களுக்கும் உண்டு. அங்ஙனமாகச், சிவன் அதைப் பானம் பண்ணியது சாமர்த்திய மன்று.

ச:—அப்படியானால் அவ்விஷத்தை விஷ்ணு உண்டுவிட்டாரென்று பூர்வபட்சம் என் பெருமை கூறிக்கோடல்வேண்டும்?

11. ஆ:— பூதனையின் ஸ்தன்ய விஷத்தைக் கிருஷ்ணர் குடித்துஞ் செத்திலர். அதனினுங் கொடியதா ஆலாலம்?

ச:— சருவான்மாக்களுக்குங் கேடு செய்ய வல்லது எதுவோ அதுவே விஷம். அவ்வாறு செய்தது ஆலாலமொன்றே. பூதனையின் ஸ்தன்ய விஷம் யாரையும் புண்படுத்தியதில்லை. ஆகையால் கிருஷ்ணரும் அதனால் மொத்துண்டிலர். கிருஷ்ணர் வயிறு அந்த விஷத்தைச் சீரணஞ் செய்துகொள்ள வல்லதாயிருந்தது. ஆலாலம் மூல விஷ்ணுவையே கருக்கியது. கிருஷ்ணர் அவ்விஷ்ணுவின் ஒரு மயிர். 'ஆரணங் கலைகட் கெட்டா தகன்றபூரணனு மாதி - நாரணன் சிரத்தி லார்ந்த நளிருரோ மத்தினொன்று - வாரணந் தன்னிற் போட மால்கலை யாகப் பார்மேற் - காரண னவதரித்தான் கண்ணனாய் விண்ணோர் போற்ற' என்றது கூரேச விஜயம். ஸ்தன்யவிஷம் அக்கிருஷ்ணரை வருத்தாமையால் அம்மூல விஷ்ணுவின் மயிரைத் தானும் அசைக்கவில்லை யென்பது பெறப்படும்.

12. ஆ:—சிவன் விஷமுண்டபோது உமை அவன் கழுத்தைப் பிடித்தாள். அதனால் அவ்விஷம் அவன் கழுத்தில் நின்றுவிட்டது. அது அவன் வயிற்றிற் போயிருந்தால் அன்றே செத்திருப்பான். அவளும் அமங்கலையாயிருப்பாள்.

ச:— 'ஈசுவரர், லோக ஹிதத்திற்காக அந்த விஷத்தைத் தம் கழுத்தினுள் நிறுத்தினார்' என்ற ஆதி 18வது அத்தியாயத்தால் பார்வதியார் கழுத்தைப் பிடித்தாரென்பது அடிபட்டது. சிவ

பிரான் வயிறு அகில லோகங்களுக்கும் ஆகாரம். அவர் விஷத்தைத் தம் வயிற்றுட் செலுத்தியிருந்தாராயின் அவை யெல்லாம் எரிந்து போயிருக்கும். ஆகையாற்றான் அவர் அதைக் கண்டத்தில் வைத்தருளினார். அம்மேற் கோளிலுள்ள 'லோகஹிதத்திற்காக' என்பதைக் கவனித்திடுக. அரிபிரமாதியனைவருஞ் சாகின்றவர். லக்ஷ்மி சரஸ்வதியாதி யனைவரும் அமங்கலிகளாக வேண்டியவர்கள். பார்வதீபதி யொருவரே சாகாதவர். பார்வதீ தேவியாரொருவரே அமங்கலியாகாதவர். ஆலகால சரிதமே அவ்விரண்டற்கும் போதுமான சான்றாகும். 'எவள் மஞ்சள், மை, புஷ்பம் முதலிய ஸுமங்கலி லக்ஷணங்களோடு கூடியவளாயிருந்து பர்த்தாவின் பாதங்களில் மனம் வைத்து அவன் கொடுத்த தர்ப்பண ஜலத்தைப் பானஞ் செய்பவளாகக் கணவன் முன்னிலையில் மரணமடைகிறாளோ அவள் பார்வதீ லோகத்தை யடைகிறாள். பார்வதிக்குத் தோழியாயிருந்து அந்தப்பர்வதராஜ கன்னிகையுடன் கூட மகிழ்ந்திருக்கிறாள்' என்ற ஆதி 172-வது அத்தியாயத்தால்பார்வதீ தேவியார் சர்வமங்கலையென்பது விளங்கவில்லையா?

---

## 8. கால கர்வா பஹறத்வாத்.

### தென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலின்.

*பொருள்:—தெற்குத் திசையின் கடவுளாகிய எமனையுதைத்து அவனுயிரை வாங்கலானும் என்பது.*

மிருகண்டு என்ற முனிவர் தமக்கு நெடுங்காலம் பிள்ளையில்லாமலிருந்ததனாற் சிவபிரானைக் குறித்துத் தவஞ்செய்தார். சிவபிரான் பிரசன்னராகி அவரைப்பார்த்து 'உனக்கு நூறுவயதுவரை சீவித்திருக்குந் துஷ்டப் பிள்ளை வேண்டுமா? பதினாறு வயதுவரையே சீவித்திருக்குஞ் சிஷ்டப் பிள்ளை வேண்டுமா?' என்று கேட்டனர். அவர் சிஷ்டப் பிள்ளையையே வேண்டினார். சிவபிரான் அதனை யருளி மறைந்தார். சில காலத்துக்குள் அவருக்குப் பிள்ளையொன்று பிறந்தது. அதற்கு மார்க்கண்டேய ரென்று பெயர். மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு வந்தது. அப்போது அவர்க்கு மரணஞ் சமீபித்ததைக் குறித்துப் பெற்றோர் வருந்தினர். மார்க்கண்டேயர் அதனைத் தெரிந்து பெற்றோரைத் தேற்றி மரணத்தைத் தவிர்த்துக்கொள்ளச் சிவபிரானை நோக்கித் தவஞ் செய்யச் சென்றார். அவர் செய்த தவமாவது சிவலிங்க பூசை. ஒருநாள் அவர் அப்பூசையை வழக்கம்போற் செய்துகொண்டிருந்தார். அன்று அவருடைய ஆயுள் முடிவு காலம். எமன் வந்து அவர் மேற் பாசத்தை வீசினான். அவர் பயந்து சிவலிங்கப்பெருமானைத்



தம் முறுகிய பத்தி மேலீட்டால் இறுகத் தழுவிக்கொண்டார். பக்தபராதீனராகிய பரசிவப் பிரபு அச்சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு எமனை யுதைத்துக் கொன்று வீழ்த்தினார். மார்க்கண்டேயருக்கு எமபயம் அன்றோடொழிந்தது. அவர் அப்போது சிவபிரானை நோக்கி நிகழ்த்திய துதிகள் அநந்தம். சிவபிரான் மார்க்கண்டேயரின் பத்திக்கு மெச்சி 'அன்ப! உனக்குச் சிரஞ்சீவித்துவத்தைத் தந்தோம். இன்றுமுதல் நீ என்றும் பதினாறுவயதுடனேயிருந்து எமதுஞானானந்தத்தை யநுபவிப்பாயாக' என்று வரமருளி மறைந்தார். மார்க்கண்டேயரின் சிரஞ்சீவித்துவத்தால் அவர் பெற்றோர்க்கு மகிழ்ச்சி யுண்டாயிற்று. எமனும் சிவகடாக்ஷத்தால் மீண்டும் உயிர்பெற்றுத் தன்னுலகுக்குப் போனான். இக்கதை கந்தபுராணத்துள்ளது.

'யோவாம பாதேநஜகாந காலம் கோரம்......தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' (எவர் இடது பாதத்தாற்கோரமான எமனை உதைத்தாரோ அந்த வுருத்திரர்க்கு நமஸ்காரம் ஆகுக) என்னும் சரபம் அக்கதைக்கு மூலவசனம்.

இனி அக்கதை பற்றிய ஆக்ஷேப சமாதானங்கள் வருமாறு:—

1. ஆ:—எமன் செத்தால் ஞானம் கருமம் பிரகிருதி மாயை உயிர் ஆனந்தம் என்ற ஆறுபொருள்களும் அழிந்துவிடவேண்டும். ஆனால் அவை அழியா. ஆகலின் அவனுஞ்சாகமாட்டான். அவனைச் சிவன் கொன்றானென்ப தென்னை?

ச:—இது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதாகும். அந்தப் பொருள்களுக்கும் எமனுக்கும் அப்படிப்பட்ட சம்பந்தம் எதுவுமில்லை. எல்லாத் தேவர்களுஞ் சில பல காரியங்கள் நடைபெறவே சிவபிரானால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் பிறராற்றண்டிக்கப்பட்டோ தங்களிஷ்டப்படியோ அவ்வக்காரியங்களினின்றும் இடையிடையே விலகுவதுண்டு. அவர்கட்கு நியமிக்கப்பட்ட காரியங்கள் அப்போது நடைபெறாமலும் போம். உலகமும் க்ஷீணிக்கும். உலகமாவது அந்த ஆறு பொருள்களின் தொகுதியே. 'இந்தச் சந்திரன் க்ஷீணித்துச் சிறிதே மிகுதியுள்ளவனாகக் காணப்படுகிறான்........இவனுடைய க்ஷயத்தினாலேயே பிரஜைகளும் கொடிகளும் ஓஷதிகளும் பற்பல வித்துக்களும் க்ஷயத்தை யடைந்தன; அவ்வாறே மனிதர்களும் க்ஷீணித்தார்கள்' என்ற சல்யம் 36வதும், 'அக்னி பகவான் ஒளிந்து விட்டான்........ எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷயமுண்டாகி விட்டது' என்ற 48வதும் அத்தியாயங்களால் மேலுண்மை விளங்கும். அப்படியே எமனும் ஒரு சமயம் தன்னிஷ்டப்படி தன் காரியங்களினின்றும்

விலகியசெய்தி 'யமன் ஸத்ரயாகத்திற்காகப்பிரவர்த்தித்திருக்கிறான். அதனாலேதான் இந்த மனிதர்கள் இறப்பதில்லை......அந்த வைவஸ்வதன் அந்தக் காரியத்தை முழுதும் நிறைவேற்றின பிறகு, இந்த மனிதர்களுக்கு முடிவு காலம் அவசியம் வரும்' என்று ஆதி 214வது அத்தியாயத்திற் பிரசித்தம். அந்த ஆறு பொருள்களுக்கும் அப்போது நேர்ந்த கதியே அவ்வெமன் சிவபிரானாலொறுக்கப்பட்டுத் தன் காரியங்களினின்று விலகிய பிறகும் ஆமென்க.

எல்லாத் தேவர்களும் பாவஞ் செய்யக் கூடியவர்களே. விஷ்ணு அதிதியைக்கொன்றும், இந்திரன் அகலியையைக் கலந்தும், பிரமன் முருகக் கடவுளை அவமதித்தும் பாவஞ் செய்தனர். அவர்க்கெல்லாம் அவ்வப்போது தண்டங் கிடைத்தது. எமனும் சிவபத்தர்மேற் பாசம் வீசிப் பாவஞ் செய்தான். ஆகலின் அவனுக்குச் சிவபிரானால் மரணமாயிற்று. அப்பாவத்துக் கதுவே தண்டனையாதல் சாஸ்திரசம்மதம். எம வதத்தால் அவன் சத்ரயாகத்திற் போலப் பூபாரம் அதிகப்பட்டது. பூமிதேவி அதைச் சுமக்கலாற்றாதல்லற்பட்டாள். அவள் கணவராகிய விஷ்ணு உடனே கயிலை சென்று சிவபிரானிடம் அப்பாரந் தவிர்த்தருளப் பிரார்த்தித்தார். அச்சங்கரரும் இரங்கி அவ்வெமனை யெழுப்பிச் சிவபத்தர்மேற் செல்லாதேயென எச்சரித்து அவனுலகுக்கனுப்பினார். பிரமனைச் சிறை வைத்து அவன் றொழிலைச் சுப்பிரமணியப் பெருமான் செய்தார். அப்படியே சிவபிரானும் எமனைக் கொன்றபின் அவன் றொழிலைச் செய்திருப்பர். பூமிதேவியின் பாப கர்மம் அதற்கிடங் கொடாமையால் அவர் அது செய்திற்றிலரென்க.

2\. ஆ:—சில சமயங்களில் அரக்கர்கள் தேவர்களை ஹிம்ஸிப்பதுண்டு. அது அவ்வரக்கர்களுக்குப் பெருமையாமா? அப்படியே சிவனும் எமனை ஹிம்ஸித்திருக்கலாம். அது அவனுக்குப் பெருமையாகாது.

ச:— தேவர்கள் பிழை செய்யாமலிருக்கும்போது இராக்கதர்கள் அவர்களை ஹிம்ஸிப்பார்கள். அது அவர்களுக்குப் பெருமையாகாது. ஆனால் எமன் பிழை செய்தான். சிவபிரான் அவனைக் கொன்றார். அக்கொலை அப்பிழைக்குத் தண்டனை. அதனைப் புரிந்தது சிவபிரானுக்குப் பெருமையேயாகும்.

3\. ஆ:— ஒரு சமயம் சிவனுக்கும் எமனுக்குஞ் சண்டை நடந்தது. அதிற் சிவன்றலையை எமன் அறுத்தான். அதை மறைக்கப் பார்ப்பவனே எமனைச் சிவன் கொன்றானென்பான்.

ச:— 'அப்படியே ஸ்ரீஸ்வாமியானவர்.....ருத்ரனை யழைத்து நீர் ஸம்ஹாரத் தொழிலைப் பண்ணக் கடவீரென்று......நியமிக்க,... சிவன்......இந்தக் கொடிய வியாபாரம் அடியேனுக்கு நியமிக்க

உ

கணபதி துணை

தாண்டவராய கவிராயர் இயற்றிய

# திருமயிலை யமக அந்தாதி

## மூலமும் பழைய உரையும்

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

பலவான்குடி

சிவநேசன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1936

Copyright Registered] [விலை அணா 6

# இப்புத்தகத்தில் அடங்கியவை


| | | | | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | முகவுரை | ... | ... | 1 |
| 2. | தாண்டவராய கவிராயர் | ... | ... | 8 |
| 3. | திருமயிலை யமக அந்தாதி மூலமும் உரையும் | | ... | 1–66 |
| 4. | வாழ்த்து | ... | ... | 67 |
| 5. | அரங்கேற்றியவர் | ... | ... | 67 |
| 6. | இயற்றியவர் | ... | ... | 67 |

## பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 7 (முகவுரை) | 5 | என்னை | எண்ணை |
| 7 | 21 | ஆர | ஆர - |
| ௸ | 24 | ஏண் இல் | ஏண் இல் - |
| 8 | 19 | செவ் | செல் |
| 13 | 36 | பௌத்தின் | பௌவத்தின் |
| 55 | 34 | சிலேத்தன்று | சிலேத்ததன்று |
| 67 | 9 | மறங்கேறச் | மரங்கேறச் |
| ௸ | 15 | தமிச்சிங்கமே | தமிழ்ச்சிங்கமே |

உ

கணபதி துணை

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட் டிடங்கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திரப் பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரொடும் வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

சிலகாலத்துக்கு முன்வரையில் இத்தமிழ்நாட்டில் இருந்து வந்த தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு முதன்முதலில் நீதிநூல்களும் பிரபந்தங்களும் கற்பிக்கப்பட்டு வந்தன. அவற்றுள் அந்தாதிநூல்கள் அம்மாணாக்கர்களுடைய ஞாபகசக்தியை விருத்தி செய்து, பல புதிய சொற்களையும், பதங்களைப் பிரித்துப் பொருள்கொள்ளும் முறையையும், பிறவற்றையும் கற்பிப்பதற்கு உரிய கருவிகளாக இருந்தன. ஆதலின் சென்ற சில நூற்றாண்டுகளில் பல அந்தாதிகள் இயற்றப்பட்டன. தமிழ்ச் செய்யுள் இயற்றும் பழக்கத்தை மேற்கொண்டவர்கள் ஆரம்பத்தில் இத்தகைய பிரபந்தங்களையே இயற்றுவது வழக்கம். தமிழ்பயிலும் மாணாக்கர்களுடைய ஆற்றலை அளப்பதற்கு இப்பயிற்சி ஒருசாதனமாக இருந்தது; தம்முடைய மாணாக்கர்களைக் குறித்துப் பேசுகையில், இவன் இத்தனை எழுத்துக்களைத் திரித்துப்பாடுவானென்று என் இளமைக்காலத்தில் சில முதிய கவிஞர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

தமிழ் நூல்வகைகளில் இவ்வந்தாதிகள் தொடர்நிலைச்செய்யுட்களில் ஒன்றாகிய சொற்றொடர் நிலையின்பாற்படும்; "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" (தண்டியலங்காரம்.) அந்தாதியென்பது இரண்டு அடிகளுக்கும், இரண்டு செய்யுட்களுக்கும் இடையே காணப்படும்; இவற்றுள் இரண்டு அடிகளுக்கிடையில் அமைவதை அந்தாதித்தொடையென்றும், இரண்டு செய்யுட்களின்

இடையில் அமைவதைச் செய்யுளந்தாதியென்றும் கூறுவர். ஒன்றன் அந்தம் அடுத்ததன் ஆதியாக வருதலின் இப்பெயர் பெற்றது; இது வடசொற் புணர்ச்சி.

செய்யுளந்தாதி ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும் சொல்லேனும் அடியேனும் அடுத்த செய்யுளின் முதலில் வருவது; நூலினது ஈற்றுச் செய்யுளின் இறுதி முதற் செய்யுளின் முதலோடு ஒன்றிவரும். இதனை மண்டலித்தலென்பர். இவ்வந்தாதியமைப்பு இரட்டைமணிமாலை, இணைமணிமாலை, மும்மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, பல்சந்தமாலை, கலம்பகம் முதலிய வேறு பல பிரபந்தவகைகளிலும் காணப்படுமேனும், இதனைச் சிறப்பியல்பாகப் பெற்றமை' பற்றி இவை அந்தாதியென்றே வழங்கப்படும். இவை விருந்தென்னும் வனப்பையுடையன வென்பது பேராசிரியர் கோள்கை; தோல். செய். 239.

அந்தாதி யமைப்பு, பதிற்றுப்பத்து நான்காம்பத்திலும் பழம் பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய பெருங்கதையிலும் காணப்படும். திருவாசகத்திலுள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலியவற்றிலும், திருவிசைப்பாவிலுள்ள சில பதிகங்களிலும் இம்முறை அமைந்திருக்கின்றது. பதினோராந்திருமுறையில், (1) காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி, (2) சேரமான் பெருமாணாயனார் அருளிச் செய்த பொன்வண்ணத்தந்தாதி, (3) நக்கீரதேவநாயனார் அருளிச் செய்த கைலைபாதி காளத்திபாதியந்தாதி, (4) கபிலதேவநாயனார் அருளிச் செய்த சிவபெருமான் திருவந்தாதி, (5) பரணதேவநாயனார் அருளிச்செய்த சிவபெருமான் திருவந்தாதி, (6) பட்டினத்துப்பிள்ளையார் அருளிச் செய்த திருவேகம்பமுடையார் திருவந்தாதி, (7) நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த திருத்தொண்டர் திருவந்தாதி, (8) ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி என்னும் எட்டு அந்தாதிகளும் உள்ளன. திவ்யப்பிரபந்தத்தில் முதலாழ்வாரால் இயற்றப்பட்ட மூன்று அந்தாதிகளும், திருமழிசையாழ்வார் அருளிய நான்முகன் திருவந்தாதி, நம்மாழ்வார் அருளிய பெரிய திருவந்தாதி என்பனவும் உள்ளன. அன்றியும், திருவாய்மொழியின் ஆயிரத்து நூற்றிரண்டு செய்யுட்களும் அந்தாதியாகவே அமைந்திருக்கின்றன, திருநூற்றந்தாதியென்னும்பழைய சைன நூலொன்றுண்டு. கல்வியிற் பெரிய கம்பரும் சரசுவதியந்தாதி, சடகோபரந்தாதியென இரண்டு அந்தாதிகளை இயற்றியுள்ளார். இவற்றை யன்றி அகப்பொருளிலக்கணத்தைக் கூறும் * ஒரு நூல் அந்தாதி முறை

* இது 'களவியற் காரிகை' என்னும் பெயருடன் ஸ்ரீமான் எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ. பி. எல். அவர்களால் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றது.



யமைந்ததாகக் காணப்படுகிறது. இங்ஙனம் சிறந்த பல பெரியோர்கள் அந்தாதி நூல்களைப் பாடியிருத்தலும், அந்தாதி முறையை மேற்கொண்டிருத்தலும் இவ்வகைப் பிரபந்தங்களின் சிறப்பைப் புலப்படுத்தும்.

வெண்பாவாலேனும், விருத்தத்தாலேனும், கட்டளைக் கலித்துறையாலேனும் இவ்வந்தாதிகள் இயற்றப்படும். பத்துப்பத்துப் பாட்டுக்கு ஓர்யாப்பாகப்பத்துவகைச்செய்யுட்களால் இயற்றப்படுவதாகிய ஒருவகைஅந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதியென்று வழங்கும். அந்தாதி நூல்களிற் பெரும்பாலானவை நூறுசெய்யுட்களை உடையன; அத்தொகையிற் குறைந்த செய்யுட்களையுடைய நூல்களும் சில உண்டு.

செய்யுட்களில் அமைந்த எதுகை பற்றிய இரண்டு வகை அந்தாதிகள் உண்டு. அவை திரிபந்தாதி, யமக வந்தாதி யென்பன. இவற்றுள் நான்கடிகளிலும் முதலில் முதலெழுத்தை யொழிந்த ஏனையஎழுத்துக்கள் பல ஒன்றிவரின் அது திரிபந்தாதியாகும்; அம்முதலெழுத்தும் ஒன்றிவரின் யமக அந்தாதியாகும். இங்ஙனம் வரும் யமகம், சொல்லணிகளுள் இடையிட்டு வந்த ஆதிமடக்கின் பாற்படும்.

திருமயிலை யமக அந்தாதியாகிய இது தொண்டை நாட்டிலுள்ள தேவாரம்பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்றாகிய மயிலாப்பூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீகபாலீசுவரர் மீது தாண்டவராய கவிராயரென்ற புலவரால் இற்றைக்குச் சற்றேறக்குறைய 200-வருஷங்களுக்கு முன் இயற்றப்பெற்றது. இது காப்புச்செய்யுளொன்றும் வாழ்த்தொன்றும் உட்பட நூற்றிரண்டு செய்யுட்களையுடையது.

மயிலாப்பூரென்பது மயிலாப்பு என்று முற்காலத்தில் வழங்கப்பெற்றது; 'மயிலாப்பிற்கொற்றன்' (தோல். குற்றியலுகரப். 12, ந. மேற்.) இத்தலம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த ஒரு பதிகத்தை உடையது. திருநாவுக்கரசு நாயனார் வேறு தலங்களைப் பற்றி அருளிச் செய்த திருப்பதிகங்களில் மூன்று இடங்களில் இத்தலத்தைப் பற்றிக் கூறியுள்ளார்; அப்பகுதிகள் வருமாறு:—

"மங்குல் மதிதவழு மாட வீதி
மயிலாப்பி லுள்ளார்" (புக்கதிருத்தாண்டகம், 1),

"மயிலாப்பின் மன்னினார்" (காப்புத்திருத்தாண்டகம், 12)

"மயிலாப்புள்ளே, செடிபடு வெண்டலையொன்
றேந்திவந்து" (திருவொற்றியூர்த்திருத்தாண்டகம், 6.)

இத்தலத்தின் வரலாற்றை விளக்கும் புராணங்கள் வடமொழியிலும் தென்மொழியிலும் உண்டு. * திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைச் சில அன்பர்கள் காப்பிய இலக்கணம் அமைய ஒரு புராணம் இத்தலத்துக்குப் பாடவேண்டுமென்று விரும்பியபடி அவர்கள் ஒரு புராணம் இயற்றத்தொடங்கிச் சில பகுதிகளை இயற்றினார்கள்; நூல் முற்றும் நிறைவேறவில்லை; இயற்றிய பகுதிகளும் இப்பொழுது கிடைக்கவில்லை. இத்தலசம்பந்தமாக இவ்வந்தாதியையன்றி வேறுள்ள பழைய தமிழ்ப்பிரபந்தங்களுள் இப்பொழுதுதெரிந்தவை, (1) திருமயிலையுலா, (2) திருமயிலைக்கலம்பகம் (3) கொட்டிக்கலை நாராயணசாமி முதலியார் இயற்றிய திருமயிலை வெண்பாமாலை, (4) கபாலீசர் பஞ்சரத்தினம், (5) கற்பகவல்லிமாலை, (6) அம்பலவாண கவிராயர் இயற்றிய சிங்கார வேலர் கோவை, (7) தாண்டவராய கவிராயர் இயற்றிய சிங்கார வேலர் பிள்ளைத் தமிழ், (8) ஷெடியார் இயற்றிய சிங்கார வேலர் வெண்பா என்பன. கருவம்பாக்கம் ஆறுமுக முதலியாரென்பவர் இயற்றிய பூம்பாவையார் விலாசம் என்ற ஒரு நாடகமும் இத்தல சம்பந்தமாக உள்ளது.

உமாதேவியார் மயிலுருவத்தைப் பெற்றுப் பூசித்தமையின் இத்தலம் மயிலாப்பு, மயிலாப்பூரென்னும் பெயர்களைப் பெற்றது; அவற்றின் மரூஉவே மயிலையென்பது. அம்பிகை பூசித்த இச்செய்தியைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக், கட்டிட் டிடங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்" என்று புலப்படுத்தியருளினர்.

இத்தலத்து விநாயகர் திருநாமம் ஸ்ரீ நடனவிநாயகரென்பது; அது கூத்தாடும் பிள்ளையாரெனத் தமிழில் வழங்கும். சிவபெருமான் திருநாமம் கபாலீசுவரரென்பது. உமாதேவியாருக்குப் பரமசிவன் கபாலியாகக் காட்சி கொடுத்தருளினமையின் இத்திருநாமம் வழங்கலாயிற்று; இத்திருக்கோலத்தைத் திருநாவுக்கரசு நாயனார், "மயிலாப்புள்ளே, செடிபடு வெண்டலையொன் றேந்திவந்த" என்று பாராட்டுகின்றார். கபாலீசுவரர் வீற்றிருத்தலின் இத்தலத்திலுள்ள திருக்கோயில் கபாலீச்சரமென்னும் திருநாமம் பெற்றது. இங்கே உள்ள அம்பிகையின் திருநாமம் கற்பகவல்லியென்பது. முருகக் கடவுள் திருநாமம் சிங்காரவேலர் என்பது.

சிவநேசச்செட்டியாரென்னும் வணிகச்செல்வர் தம்மகளாகிய பூம்பாவையென்பவள் இறந்தபின்பு சேமித்துவைத்திருந்த அவளுடலின் என்பை அம்மகளாகுமாறு திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடியருளிய பெருமையையுடையது இத்தலம்; இவ்வரலாறு பற்றி இறைவர் பூம்பாவையீசுவரரென்னும் ஒரு திருநாமத்தை இத்தலத்தில் உடையரானார்.

* இங்கேயுள்ள செய்தியின்விரிவை ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதற்பாகம், 162-ஆம் பக்கம் முதலியவற்றிற் காணலாம்.



இந்தத் தலத்திற்குரிய விருட்சம் புன்னை; ஆதலின் இதற்குப் புன்னைவனமென்ற திருப்பெயரும் உண்டு; வேதங்கள் பூசித்தமையால் வேதபுரியென்றும், சுக்கிரன் பூசித்தமையால் சுக்கிரபுரியென்றும் பெயர்பெறும். இங்கே இறைவனைப் பூசித்துப் பேறுபெற்றோர் உமாதேவியார், முருகக் கடவுள், இராமர், வாலி, சுக்கிரன், வேதங்கள், முனிவர்கள், வாயிலார் நாயனார், ஏலேல சிங்கன் முதலியோர். இங்குள்ள தீர்த்தங்கள் சத்திகங்கை யென்னும் கபாலி தீர்த்தம், வேத தீர்த்தம், சுக்கிர தீர்த்தம், இராம தீர்த்தம், வாலி தீர்த்தம், கந்த தீர்த்தம் முதலியன.

இந்த நூலில் இத்தலத்தைப் பற்றிய செய்திகளிற் பல அங்கங்கே அமைக்கப்பட்டுள்ளன: கூத்தாடும்பிள்ளையார் காப்புச் செய்யுளில் துதிக்கப்படுகிறார். கபாலீசுவரர் திருநாமம் 30, 34, 46-ஆம் செய்யுட்களில் வந்துள்ளது. அவர் கபாலத்தை யேந்திய செய்தி 10, 35, 43, 56, 77, 86, 96-ஆம் செய்யுட்களிற் காணப்படுகின்றது. ஓரிடத்தில் அவர் 'மயிலேசன்' (23) என்றும் வழங்கப்பெறுகிறார். கற்பகவல்லியின் திருநாமம் 4-ஆம் செய்யுளில் யமகத்திலும், 95-ஆம் செய்யுளிலும் வந்துள்ளது. இத்தலத்தின் பெயர் மயிலையென்றே பெரும்பாலும் ஆளப்படுகின்றது; இரண்டிடங்களில் மயிலைப்புரி (27, 28) என்றும், ஓரிடத்தில் கேகை (97) என்றும் இந்நூலாசிரியர் வழங்குகின்றார். மயிலாப்பூரென்பதன் வடமொழியுருவாகிய கேகயபுரியென்பதன் சிதைவே கேகையாகும். இத்தலத்தில் அம்பிகை தவம் செய்தது (10), மயிலாயது (34, 95), பூசித்தது (37, 57, 64, 86,) முருகக் கடவுள் பூசித்தது (3, 4, 86, 97), அவர் வேலாயுதம் பெற்றது (2), திருஞானசம்பந்தர் துதித்தது (5, 37, 78, 98), அவர் என்பைப் பெண்ணாக்கியது (8, 38), இராமர் பூசித்தது (39, 71), வேதம் பூசித்தது (95), வாயிலார் நாயனார் வழிபட்டது (80), ஏலேல சிங்கர் வழிபட்டது (98), இத்தலம் யுகமுடிவிலும் அழிவில்லாததென்பது (31), பாலியாற்றுக்கு வடக்கே யுள்ளதென்பது (30), கடற்கரையிலுள்ளதென்பது (42, 60) முதலிய செய்திகள் அங்கங்கே காணப்படும். சத்திகங்கை (73), கபாலிதீர்த்தம் (81), வாலி தீர்த்தம் (93) என்னும் தீர்த்தப் பெயர்களும் வந்துள்ளன. இத்தல விருட்சம் புன்னை யென்பது 53-ஆம் செய்யுளிற் குறிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தல வரலாறுகளையன்றி, வேறு தலவரலாறுகள், மதுரைப் பெருமான் திருவிளையாடல்கள், நாயன்மார் வரலாறுகளென்பவற்றைப்பற்றிய குறிப்புக்களையும் இந்நூலிற் காணலாம். இந்நூலாசிரியர், கயிலையையும் (47, 70, 93), தில்லைமன்றையும் (62) ஞானாகாசமாகிய அம்மன்றிற் சிவபிரான் நடனஞ்செய்தலையும் (67) பாராட்டுகின்றார். திருவானைக்காவிலுள்ள ஸ்ரீ சம்புகேசுவரரைச் சப்பத்தர் (சப்பு அத்தர், 65) என்று கூறுகின்றார். திருக்கழுக்குன்றைக் கக்குக்கோ (கங்கு கோ: கங்கு - கழுகு, கோ - மலை; 97) என்றும், அங்கே கோயில் கொண்டெழுந்தருளிய கள்ளம் வல்லானென்னும் திருநாமமுடைய சிவபெருமானைக் கரவா (66) என்றும் வழங்குகின்றார். வேயீன்ற முத்தராகிய திருநெல்வேலிப் பெருமானைக் கிளைச் சேய் (கிளை - மூங்கில், 86) என்று புகழ்கின்றார். திருவாலங் காட்டிற் சிவபிரான் ஊர்த்துவதாண்டவம் புரிந்ததையும் (41), மதுரைப் பெருமான் திருநாமம் சொக்கரென்பதையும் (71) உணர்த்துகின்றார். அம்மதுரையின்கண் சிவபெருமான் சங்கத்தில் வீற்றிருந்தது (62, 65), தருமிக்குப்பொற்கிழியளித்தது (53), நக்கீரரோடு வாது செய்தது (66, 71), மாணிக்கவாசகருக்கு அருள் செய்தது (64), நரிபரியாக்கியது (82), வலைஞரானது (90) முதலிய திருவிளையாடல்களைப் பற்றிய செய்திகள் இதன்பால் உள்ளன.

பின்னும், மூவர், சோமாசிமாறர், சிறுத்தொண்டர், அரிவாட்டாயர், நமிநந்தி, இயற்பகையார், கண்ணப்பர், மூர்க்கர், காரைக்காலம்மையாரென்னும் நாயன்மார்களைப்பற்றிய செய்திகளும் இடையிடையே வருகின்றன.

இதிலுள்ள செய்யுட்களில், கபாலீசுவரரைக் கிளவித் தலைவராகக்கொண்டுகடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கமாகிய புறத்துறையிலக்கணம் அமைந்த செய்யுட்கள் பதினொன்று (5, 9, 18, 22, 26, 37, 62, 63, 69, 76, 92); அகப் பொருட் கிளவிகளாக அமைந்த செய்யுட்கள் பதினேழு (6, 10, 17, 31, 38, 42, 45, 46, 59, 60, 76, 79, 82, 84, 85, 88, 89)

யமக அந்தாதியாதலின் இந்நூலின் நடை கடினமாகவே அமைந்துள்ளது; 'செறிவுந் தெளிவும் இன்பமும் இலாதவாறு ஓர்ந்துணர்க' (1, உரை) என்று இதன் உரையிற் கூறப்படுதல் காண்க. புறநடைகளாகிய இலக்கண விதிகள் பலவற்றிற்கு இலக்கியமாகிய பகுதிகளை இதிற் காணலாம். யமகம் நோக்கிப் பலவகையான வேறுபாடுகள் இதில் அமைக்கப்பட்டுள்ளன; அவற்றுள் இதன் உரையிலே காட்டப்பட்டன வருமாறு:— ஒற்றுமிகுந்தது (3), ஒற்று உள்வழிக்குறைந்தது (7), தந்நகரம் சிறப்புனகரமானது (20), மிக வேண்டிய இடத்து இயல்பானது (35)



97-ஆம் செய்யுள் ககரவரிப்பாட்டு; அப்பாட்டில் ககரவொற்றும், ககரவர்க்கத்து உயிர் மெய்களுள், கெ, கௌ என்னும் இரண்டு மொழிந்த பத்துமே வந்துள்ளன. காப்பென்னும் பொருளையுடைய திதியென்பதை இருதி என்றும் (24), மகரமீனைத் தை என்றும் (41), ஒன்றென்னும் எண்ணைக் கவெண் என்றும் (72) இந்நூலாசிரியர் கூறுவர்; இவை குறிப்புமொழி யென்று உரை கூறும்.

இந்நூலுக்கு உள்ள உரை இந்நூலாசிரியராலேயே இயற்றப்பட்டதென்று தோற்றுகின்றது. இவ்வுரை இல்லையேல் நூற்பொருள் விளங்குவது அருமையிலும் அருமை யென்பதில் ஐயமில்லை. முதற் செய்யுளுக்கு மாத்திரம் கட்டுரைச் சுவைபட விரிவான உரை எழுதப்பட்டுள்ளது. மற்றவற்றிற்கு அன்னுவயம் செய்து, வேண்டிய சொற்களைப் பெய்து எழுதிய பதவுரையும் சில சில இடங்களில் இலக்கணக் குறிப்புக்களும் உள்ளன. சில பாடல்களைத்தவிர மற்ற எல்லாப்பாடல்களுக்கும் எழுவாய் பயனிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவ்வுரையில் வந்துள்ள மேற்கோள் நூல்கள்:—தொல்காப்பியம், குறுந்தொகை, தேவாரம், சீவகசிந்தாமணி, யாப்பருங்கலங்காரிகை, கந்தபுராணம், நன்னூல் என்பன; "செக்கினிடைத்திரித்துந் தீவாயி லிட்டெரித்தும், தக்கநெருப் புத்தூண் டழுவித்தும் - மிக்கோங்கு, நாராசங் காய்ச்சிச் செவிமடுத்தும்" (67, மேற்), "குரவை யென்பது.........இயல்பிற் றன்றே" (79, மேற்) என்னும் இரண்டும் இன்ன நூல்களிலுள்ள பகுதிகளென்று இப்போது தெரியவில்லை; இவற்றுட் பின்னது அடியார்க்கு நல்லாராலும் நச்சினார்க்கினியராலும் மேற்கோளாக எடுத்தாளப்படுவது.

மயிலாப்பூரில் இருந்த சிறந்த தமிழ் வித்துவானாகிய திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையவர்களுக்குரிய இவ்வந்தாதியின் மூலமும் உரையும் அடங்கிய ஏட்டுச் சுவடிகள் இரண்டு இற்றைக்கு 50 வருடங்களுக்குமுன், அவருடைய மாணாக்கராகிய அண்ணாசாமி உபாத்தியாயரென்பவரிடமிருந்து கிடைத்தன. பின்பு ஓரன்பரிடமிருந்து மூலம்மட்டும் உள்ளபிரதியொன்று கிடைத்தது; அதன் இறுதியில்,

"தனந்தந்த மாவி னிசைகாட்டுங் காவிரி தண்மயிலை
தனந்தந்த மாகிரி முத்துமை பாகர் சரண்பரவு
தனந்தந்த மாப்பரி நந்தித வையகந் தாங்குஞ்சிங்கா
தனந்தந்த மாதவன் போற்றுமெய்ச் சீருந் தருந்திரமே"

என்னும் செய்யுளொன்று அதிகமாகக் காணப்பட்டது.

இப்பொழுது இது ஸ்ரீகபாலீசுவரர் திருவருளால் 'சிவநேசன்' பத்திரிகையில் வெளியிடப்பெற்றது. இதனைத் தம் பத்திரிகையில்

வெளியிட்ட சிவபக்திச் செல்வர்களும் சிவஸ்தல பரிபாலகர்களு மாகிய ஸ்ரீமான் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்க ளுடைய தமிழன்பும் சைவப்பற்றும் பாராட்டற்பாலன.

இந்நூலை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உட னிருந்து உதவி செய்தவர்கள் சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன்பேட்டை.
15—4—36.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# தாண்டவராய கவிராயர்

திருமயிலை யமக அந்தாதியை இயற்றியவர் தாண்டவராய கவிராய ரென்பவர். இவருடைய ஊர் இன்னதென்று தெரியவில்லை. "நற்படி மேற்சந்திராதித்தர்" (ப. 67) என்னும் பாட்டாலும், "தண்பார் துதிக்கும்" (ப. 67) என்னும் பாட்டாலும் இவர் மயிலாப்பூரி லிருந்த பூம்பாவை வேலப்ப முதலியா ரென்பவருடைய விருப்பத் தின்படி இவ்வந்தாதியை இயற்றினரென்றும், இந்நூல், சிங்கார வேலவர் பிள்ளைத்தமிழ், சிங்காரவேலவர் வெண்பா வென்னும் மூன்றும் அம்முதலியாருடைய ஆதரவினால் அரங்கேற்றப்பெற்றன வென்றும் தெரிகின்றது.

பூம்பாவை வேலப்பமுதலியாரென்பவர் மயிலாப்பூரில் இருந்த ஒரு பெரிய செல்வர்; சிவபக்தி மிக்கவர்; தமிழ்ப்புலவர்களை ஆதரித் துப் பாராட்டும் இயல்புடையவர். அவருக்கும், தருமபுர மடத்தில் ஆதீன வித்துவானாக இருந்தவரும் இராமநாடகம்பாடிய சீகாழி அருணாசல கவிராயர் முதலிய பலருடைய ஆசிரியருமாகிய ஸ்ரீ அம்பலவாண கவிராயருக்கும் நட்பு இருந்து வந்தது. ஆதலின் முதலியார் இவ்வந்தாதியையும் உரையையும் அம்பலவாண கவிராய ருக்கு அனுப்பி இவற்றின் தகுதியை அறிந்துகொள்ள விரும்பினர். அக் கவிராயர் இவ்வந்தாதியையும் உரையையும் கண்டு மகிழ்ந்து 'இவை அரங்கேற்றற் குரியன' என்ற தம் கருத்தை ஒரு சீட்டுக் கவியின் வாயிலாக முதலியாருக்குத் தெரிவித்தார்; அக்கவி வருமாறு:—

"சங்கத் தமிழ்ப்பொன்னி னுரையாணி ஞானச்
சரக்கறை யெதிர்ந்த கவிதைத்
தந்திக் குழாம்வென்ற கண்டீர வம்பெரிய
சைவசித் தாந்த நிபுணன்
துங்க ப்ரபந்தங்க ளொருகோடி யனுதினஞ்
சொல்லினிய மதுர வாக்கி
துரைராசர் பரவும்அம் பலவாண கவிராச
துரந்தர னனுப்பு மோலை
வங்கம் பயோததியி னிறைசெல்வன் மதிபூகி
வைத்யரா ஜேந்த்ர னின்ற
விரதக் குணமேரு பூம்பாவை வேலப்ப
மதிபனெதிர் கொண்டு காண்க
கங்கைச் சடாமகுடர் * மயிலையந் தாதியுரை
கனிகண்டு கண்டு கொண்டோம்."

* மயிலையந்தாதியும் உரையும் கனியும் கண்[illegible]ம் என்று நிர னிறையாகக் கொள்க.

கவியரங் கேற்றியிசை காட்டுதாண் டவராய
கவிராசர் மனமகிழவே".

இதனைப் பெற்ற பிறகு அந்தாதி முதலியன அரங்கேற்றப்பெற்றன வென்று தோற்றுகின்றது. "தாண்டவராய கவிராசர்" எனப் பன்மையாக இவ்வாசிரியரை அம்பலவாண கவிராயர் சொல்லியிருப் பதும், "தாண்டவராய தமிழ்ச்சிங்கம்" என்று பிறர் பாராட்டுவதும் இவருடைய பெருமையைப் புலப்படுத்தும். சிங்காரவேலர் பிள்ளைத் தமிழ், வெண்பாவென்னும் இரண்டும் இவரால் இயற்றப்பட்டவை யென்று கருத இடமுண்டு.

தாண்டவராய கவிராயர் சிவபக்திச் செல்வமும், தமிழன்பும், நன்றியறிவும், கடினமான அமைப்பையுடைய செய்யுட்களையும் பாடும் திறமையும், உரையெழுதும் ஆற்றலும், சிவதலங்களையும் நாயன்மார்களையும் நினைந்துபாராட்டும் இயல்பும் உடையவர். சிவ பெருமான்மீது யமக அந்தாதி முதலியன பாடுவதில் இவருக்கு விருப்பம் இருந்தமையை, "பரமர் பத்திபண் அளிபாடு அலங்காரம் யமகமும் பாடின் உண்டாம்....சம்பத்து இயல்பே" (33) என்னும் இந்நூற்செய்யுட்பகுதி வெளிப்படுத்தும்; சிவபெருமானை அன்புடன் போற்றிப் புகழும் பாடல்கள் அப்பெருமானால் ஏற்றருளப் பெறு மென்னும் துணிபுடையவர் இவர் (34); கல்விச்சிறப்பையும் வித்து வான்களின் உண்மை மதிப்பையும் அறிந்துள்ள அன்பர்களோடு பழகுவதையன்றி அற்பர்களுடைய பழக்கத்தை இவர் விரும்பவில்லை; இதனை, "கா...கல்வி சுருங்காது அற்பர் அவையகத்துச் செல்லாது கடைக்கண் வைத்தே" (68) என்று இறைவனை இவர் வேண்டிக் கொள்ளும் பகுதி புலப்படுத்தும். மயிலைப்பிரானை இறுதிச் செய்யு ளில், "தனம் தந்து அருட்செல்வமும் தந்தருள் சீர்பெறவே" என்று வேண்டுகின்றார்; இங்ஙனம் பொருட்செல்வமும் அருட் செல்வமும் ஒருங்கு வேண்டிய இப்புலவர் பூம்பாவை வேலப்ப முதலியார் முதலிய பொருட்செல்வர்களாலும் சிவபெருமானாகிய அருட் செல்வராலும் பாதுகாக்கப் பெற்று இன்புற்று வாழ்ந்து வந்தார்.

18654

# செய்தித்திரட்டு.

சங்கவிழாக்கள்:— குளித்தலை, கம்பர் செந்தமிழ்ச் சங்கத்தின் பதினோராம் ஆண்டுவிழா, யுவ பங்குனி ௯, ௩௦-களில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமை வகிக்க தக்கபேரறிஞர்களின் விரிவுரைகளுடனும் சிறந்த எட்டுத் தீர்மானங்களுடனும், பரிமணங்குடி சண்முகநாதர்கோவிலில் யுவ பங்குனி ௧௪௳ சைவ சன்மார்க்க சங்க விழாவும், அன்று கார்த்திகை அடுத்த நாள் வெள்ளிக் கிழமை ௨௪௳ உத்திரம் ஆகிய தினங்களில் தெய்வ வழிபாடாதிய சிறப்புகளுடனும், தஞ்சை, சைவசித்தாந்த இளைஞர் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவிழா, யுவ பங்குனி ௩௧௳ திருபுவனம், கட்டளை, உயர்திரு, இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சைவவிரிவுரைகளுடனும், களிமேடு, அப்பர் அவையின் எட்டாவதாண்டு விழா, சித்திரை ௫௳ குருபூஜை ஆயிரம் பேர்கட்கு அன்னதானம், திருவையாறு கட்டளை உயர்திரு, அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் தகுதியுடையவர்களால் சைவப்பிரசங்கங்கள் திருவுலாவுடனும், நேமத்தான்பட்டி, திருநாவுக்கரசு சுவாமிகள் வித்தியாசாலையின் பத்தாவதாண்டு விழா, சித்திரை ௬௳ சென்னை, திருவாளர், வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையிலும், மேலைச்சிவபுரிச் சன்மார்க்கச்சபையின் ௨௭ம் ஆண்டு நிறைவுவிழா, சித்திரை ௬, ௭-களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து தமிழ்ப்பேராசிரியர், திரு, S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமையில் புலவர் பெருமக்களின் விரிவுரைகள் பலவுடனும், புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் பதினான்காவதாண்டு நிறைவுவிழா, ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலையின் நான்காவதாண்டுவிழாவுடன்சேர்ந்து, செந்தமிழ்ச்செல்வரும், வழக்கறிஞருமாகிய திருநெல்வேலி திரு, T. K. சிதம்பரநாத முதலியாரவர்கள் தலைமையிலும், மூசையூர் ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தர விழா சித்திரை ௨௦௳ திருக்கோவலூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் பிரமஸ்ரீ N. வாசுதேவஐயரவர்கள் தலைமையில் பல பிரமுகர்களும் வந்திருந்தும், இலங்கைச்நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தின் ௯-ம்ஆண்டு நிறைவுவிழா சித்திரை ௨௪௳ யன்று கனம் செட்டிநாடு ராஜா சர். அண்ணாமலை செட்டியாவர்களும் விஜயம் செய்து சங்கத்தின் அவசியத்தையும் கடமையையும் அழகாகக் கூற புதிய தலைவர் முதலானவர்களின்தேர்தலுடனும், உ. சிறுவயல், திருநாவுக்கரசர் ஆரம்ப பாடசாலையின் மாணவ மாணவிகள் மன்றம், ஸ்ரீ அழகியதேவியின் நிறைவிழா வைபவத்தையொட்டி கௌரவ நியாயாதிபதி பிரமஸ்ரீ V. சிவராம ஐயரவர்கள் தலைமையிலும், மணிவாசக ஞானசம்பந்த சபை, மதுரையில் சித்திரை விழாவையொட்டி சித்திரை ௧௧௳ முதல் சைவப்பிரசங்கங்கள் பல சுருதி யுக்தி அனுபவங்களுக்குப் பொருத்தமாகவும், கோநகர், ஞானசம்பந்தநற்சபையின் இருபத்து நான்காவதாண்டு நிறைவுவிழா, வைகாசி ௫௳ நெற்குப்பை திருவாளர், பண்டித லெ. ப. கரு. இராமநாதன்செட்டியாரவர்கள் தலைமையில், மாணவர்களும், திருவாளர்களான, ஆத்தங்குடி சு. வீர. கதிரேசச்செட்டியார். கல்யாணசுந்தர கனபாடிகள், செகதீசய்யர், 'சிவநேசன்' இராமசாமிசெட்டியார் ஆகியவர்களும் விரிவுரையாற்றவும் தேவகோட்டை பாலகவி இராமநாதச்செட்டியார் வந்தனம் கூறவும் இனிது நடைபெற்று நிறைவேறின. இல[illegible]ம்பாம், சொக்கலிங்க வித்தியாசாலையின் ஒன்பதாவது ஆண்டு விழா வைகா[illegible] ௨௧௳ சென்னை நகரசபைக் கல்வி அதிகாரி திருவாளர், S. சச்சிதானந்தம்[illegible]ள்ளையவர்கள் தலைமையில் மாணாக்கர்களின் ஆடல் பாடல்களும், மங்கையர்க்கரசியார் என்பது பொருளாக பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பிரசங்கமும் நிகழ நடைபெறும்.

**நம் சிவநேசன்:**—திருத்தென்குடித்திட்டையில் தருணாலய கும்பாபிஷேகமாதிய வைபவங்கள் நடைபெறவேண்டியதன்காரணமாக சித்திரை மாதத்தில் தொடர்ந்து மூன்று வாரங்கட்குமேல் நாம் அங்கு தங்கினமையால் 'சிவநேசன்' சித்திரை மாதத்தில் வெளிவராமல் அதிக பக்கங்கள் தாங்கி வைகாசி மாதத்தில் வெளிவரலாயிற்று.

**குன்றக்குடி:**— முருகவேள் திருவவதார விழா, சிவஸ்ரீ சதாசிவப் பிரமம் அவர்களின் பூஜாக்கிரகத்தில் வைகாசி ௨௰௳ முதல் ௨௯௳ வரை வழக்கம்போல சிறப்பாக நடைபெறும். ௨௧௳ ஸ்ரீ வல்லிகுஞ்சரி சமேதராக வடிவேலர் வைசாக மகோற்சவங்கொண்டருளுவர்.

**சைவசமய பக்தஜன சபையார்:**—சென்னையிலிருந்து யுவ பங்குனி ௨௮௳ புறப்பட்டு திருக்குடமூக்கு ஆதிய இருபத்திரண்டு திருத்தலங்கட்கு சென்று ஆங்காங்கு சிவாலயங்களிலுள்ள மூர்த்திகளுக்கு திருமஞ்சன திருவாராதனைகளுடன் தமிழ் மறையோதி வழிபாடாற்றி மகேஸ்வரபூஜை செய்து தாது சித்திரை ௨௳ சென்னைக்கு வந்து சேர்ந்தனர்.

**நமதருமை முதலியாரின் பிரிவு:**— சென்னை சோல்டன் கம்பெனிக்குச் சொந்தக்காரரும், கௌரவநீதிபதியும், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், சாந்தம், தயை, குருலிங்க சங்கமபக்தி யாதிவைகளிற் சிறந்தவரும் உண்மை யன்பருமாக விளங்கிய திருவாளர், த. பாலசுந்தர முதலியாரவர்கள் தாது வைகாசி ௧௳ குருவாரத்தன்றிரவு மூன்று நாழிகை யளவில், நண்பர் உறவினர்களைத் துறந்து இறைவர் திருவடி சேர்ந்தனர். அருமை பெருமை வாய்ந்த நமது முதலியாரவர்களின் பிரிவுக்கு மிக வருந்த நேர்ந்ததாயினும் திருவருட் செயலை யோர்ந்து தெளியவேண்டியதாயிற்று. அவர்கள்பால் அன்புள்ளாரனைவரும் ஆறுதலடையவும் அவர்களின் ஆன்மா, திருவருளின்பம் திளைத்திருக்கவும் வேண்டுகிறோம்.

**திருவிழாக்கள்:**— சென்னை ஸ்ரீ கந்தப்பெருமானார் திருக்கோயிலில் திருநாவுக்கரசு நாயனார் திவ்ய மகோத்ஸவம் யுவ பங்குனி ௨௭௳ முதல் தாது சித்திரை ௫௳ வரை தேவாரம், புராணம் ஆகியபடனங்களுடனும், சைதாப்பேட்டை செங்குந்த கோட்டத்துப் பிரமோத்ஸவமும் எட்டாம்நாளாகிய யுவ மாசி ௨௧௳ அருணகிரிநாதரை யாட்கொண்ட ஐதீக விழாவும், திருச்சுழியல், ஸ்ரீ துணைமாலை நாயகி சமேத திருமேனிநாதருக்கு யுவ பங்குனி ௧௪௳ முதல் ௨௪௳ வரை உத்திரத் திருவிழாவும், தஞ்சை பெரியகோயிலில் பிரகந்நாயகி சமேத பிரகதீஸ்வரருக்கு சித்திரை ௬௳ முதல் ௨௫௳ வரை சைத்ர பிரமோற்சவமும், திருவையாறு, ஸ்ரீ பஞ்சநதீசுவரருக்கு சித்திரை ௧௫௳ முதல் ௨௫௳ வரை பிரமோத்ஸவமும், டெல்கான்சன் பேராவில் ஸ்ரீ தெண்டாயுதபாணிக்கு சித்திரை ௨௪, ௨௯௳களில் சித்திரா பருவ மகோற்சவமும், திருவம்பர்மாகாளத்தில் ஸோமயாக மகோத்ஸவம், வைகாசி ௧௫, ௧௪, ௧௯௳களிலும், ௨. சிறுவயல், காரைக்குடி, கோனாபட்டு முதலான ஊர்களில் செவ்வாய்த் திருவிழாக்களும் மகாவைபவமாக நடைபெற்றன. வைகாசியில் கருந்திட்டைக்குடி ஸ்ரீ பெரியநாயகி சமேத வசிஷ்டேசுவரருக்கு வைசாக பிரமோற்சவம் ௮௳ தொடங்கி ௨௨௳ வரைக்கும் நடைபெறுகின்றன. திருத்தென்குடித்திட்டை முதலான சப்த ஸ்தானங்களுக்கு சுவாமி எழுந்தருளுவர். திருப்புனவாயில் பிரஹந்நாயகிசமேத விருத்தபுரீசுவரருக்கும் காளையார்கோயில் ஸ்ரீ சௌந்தரநாயகி சமேத சோமேஸ்வரருக்கும் ௧௨௳ முதல் ௨௧௳ வரை பிரமோத்ஸவமும், திருப்பாதிரிப்புலியூர் சிவாலயத்தில் ௧௪௳ முதல் ௨௪௳ வரை பிரமோற்சவமும் பிரசங்கங்களும், திருச்செங்கோடு ஸ்ரீ அர்த்தநாரீசுவரருக்கு ௧௫௳ முதல் ௨௫௳ வரை இரதோற்ஸவமும் நடைபெறுகின்றன.

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.